30-3-47

தேசமித்திரன் வாரப்பதி

# தேச மித்திரன்

--3—47

விலை 4 அணா.



99454

DESAMITRAN ILLUSTRATED WEEKLY



இயற்கையான வாஞ்சையுடன்

அடைய விரும்புதல்

குழந்தைக்கு ஆரோககியத்தைத்

தரும்

வுட்வார்ட் வைத்தியனின

"இரைப வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம




# WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD.. LONDON. ENGLAND

க்ரைப் வாட்டர் இப்பொழுது மருந்து சாமான்கள் கட்டுப்பாடு அறிக்கையில் சேர்க்கப்பட்டிருக்கி
ம பயோகிப்பவரின் விலை பாட்டில் விலை ரூ. 2—2—0



எல்லாவிதமான நவீன

## ஆயுள், தீ இன்ஷூரன்ஸ்களுக்கு

எங்களைக் கலந்து ஆலோசிக்கவும்:

## தி சௌத் இந்தியா பயர் & ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி, (கோயமுத்தூர்) லிமிடெட்.

தலைமை ஆபீஸ்: கோயமுத்தூர்.

★

கப்பல் மற்றும் எல்லாவிதமான விபத்து
இன்ஷூரன்ஸ்களும் சீக்கிரமே ஆரம்பிக்கப்படும்.

## அயோடிசால்

:(ரத்த சுத்தி திராவகம்):

திரேகத்தில் உஷ்ணம் அதிகமாகி அதனால் ஏற்படக்கூடிய வெள்ளை, வெட்டை, மொழி முடக்கு சூலைகள், வாத மேகரோகங்கள், படை, சொறி முதலியவைகளைக் குணப்படுத்தி திரேகத்திற்கு ஆரோக்கியத்தைக் கொடுப்பதுடன் ரத்த விருத்தியை உண்டாக்கும்.

பாட்டில் 1-க்கு விலை ரூ. 2.

## CIBOL: சைபால்

முகப்பரு, சொறி, சிரங்கு, வேனல்கட்டி, சேத்துப் புண், தீப்பட்ட புண், நமைச்சல் முதலிய சர்ம வியாதிகட்கு சிறந்தது.

டின் 1-க்கு விலை 0-6-0

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

ஏஜெண்டுகள்:—
சென்னை நகர் & ஆந்திரா:
மெஸர்ஸ், ராதன் டிரக் ஸ்டோர்ஸ், லி. டி., மதராஸ்.

தயாரிப்பவர்கள்:—
தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை.

# சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.



## காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில், ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் காமினியா ஆயில் உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

## ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

*Sole Agent:*—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
185, Jumma Musjid P. O. Box 2085, Bombay 2.

---



## ஜுவல் பதித்த உயர் ரக கைக்கடியாரம்

அழகியபோஸ்தர். சரியான மணி காட்டி. பிரகாசமான குரோமியம் கேஸ் நீண்ட சதுரம் ரூ33. சிறந்தது ரூ35. லேடி ஷேப் ரூ. 44. ரோல்ட் கோல்ட் 10ஆ ரகம் ரூ. 55. சிறந்தது ரூ. 60. லேடி சைஸ் ரூ. 68. நீண்ட சதுரம் 15 ஜுவல் ரூ. 65. சிறந்தது ரூ. 68. ரோல்ட் கோல்ட் ரூ. 75. சிறந்தது 80. பாக்கிங் தபாற்செலவு அணு 14 தனி. 3-வருஷம் உத்தரவாதம்.



பவுண்டன் பேனா, மூக்குக் கண்ணாடி பாக்கெட் டார்ச். (அமெரிக்க அல்லது இங்கிலீஷ் தயாரிப்பு)

ரோல்ட் கோல்ட் நிப்பு, க்ளிப்பு, நன்றாக எழுதும் விலை ரூ. 5-8-0. ஸ்பெஷல் ரூ. 7-0-0. சிறந்தது ரூ. 8-0-0 மூக்குக் கண்ணாடிகள்-அழகிய பிரேம். தூசியைத் தடுத்து குளிர்ச்சியூட்டும். ஆடவருக்கு அவசியமானது. விலை ரூ. 2-4-0. ஸ்பெஷல் ரூ. 3-4-0 சிறந்தது ரூ. 4-0-0 பாக்கெட் டார்ச் பல்ப், பாட்டரியுடன் விலை 3-8-0. சிறந்தது ரூ. 4-8-0. பாக்கிங் போஸ்டேஜ் அணு 12. ஏதேனும் 3 வாங்கினால் தபாற்செலவு இலவசம்.

FRENCH COMMERCIAL STORES (S.M.S.)
P. B. 12216, Calcutta 5

---

## இண்டோ பாம்

நோவுகளுக்கு சிறந்த அவுஷதம்

---

## ஜுரத்திற்கு கர்னிக் ஏகுமிக்சர்

உபயோகியுங்கள்

KARNIK BROS, BOMBAY 4.

---

**மாதவிடாய்** நின்று விட்டதா? எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சுலபமாகவும் ஹானியின்றியும் 24-மணியில் வெளிப்படுத்தும். "சம்பகிரேசனி" உத்தரவாதமானது. 30 வருஷம் புகழ்பெற்றது. கவர்ன்மெண்டு ரிஜிஸ்டர்ட் விலை ரூ. 2—12—0 தபாற் செலவு அணு 12.

**கர்ப்பத்தடை** நீங்கள் விரும்பிய விதம் கர்ப்பத்தடை செய்ய "தம்பதி சாகா" சிறந்த மருந்து. ஹானியற்றது. நிரந்தரம் ரூ. 4-4—0 தாற்காலிகம் ரூ. 1—8—0 தபாற் செலவு அணு 12 தனி.

**ஆண்மை** "மதன் விலாஸ் ரஸாயன்" அற்புத மருந்து வீர்யமின்மை நரம்புத் தளர்ச்சி, பசியின்மை கீல் வாயு, இருமல் முதலியவை ஒரே வாரத்தில் குணமாகும். வாழ்க்கையை நன்கு அனுபவிக்கலாம். ரூ. 2—8—0 தபாற் செலவு அணு 12.

**Kaviraj M. Kavyatirtha (S. W)**
70, Cornwallis Street, Calcutta 6,
Stockist: Milton & Miller, 157, Broadway, Madras.





## குளிர்ச்சி வாய்ந்தது களைப்பாற்றுவது நறுமணங்கமழ்வது

### எப்பொழுதும் ஒரு நல்ல தோழன்

வெப்பம் மிகுந்த நாட்களில் டாடாஸ் ஓடிகோலோன் கொஞ்சமெடுத்து உங்கள் நெற்றியிலும் கழுத்திலும் பூசிக்கொள்ளுங்கள். ஜில்லென்றிருக்கும். அதன் குளிர் ஸ்பரிசம் உங்கள் அலுப்பையும் களைப்பையும் போக்கும். எவ்வளவு கடுமையான கோடையிலும் அது உங்களை எப்பொழுதும் உற்சாகத்துடன், நறுமணங்கமழ இருக்கச் செய்யும் தினசரி உபயோகத்திற்காக இன்றே ஒரு பாட்டில் வாங்குங்கள்.



## டாடாஸ் ஓடிகொலோன்

டாம்கோ விற்பனை இலாகா:- 19 A வாலிபர்தெரு, த.பெ. ந. 31 சென்னை.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட், TSE 209.

---

## "தனலக்ஷ்மி புராடக்ட்ஸ்"

ரெடிமேட் ஆடைகள்

4, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

முக்கிய நகரங்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

---



## EYETOUCH

*Black Mye for the Eyes*

மாதர்களும், குழந்தைகளும் கண்களுக்கு ஏற்ற மையைத் தீட்டிக்கொள்வதென்பது பண்டைய காலத்திலிருந்தே நம் பாரத நாட்டுக் கற்புக்கரசிகளால் கையாளப்பட்டு வரும் சிறந்த பழக்கமாகும்.

★ கண்களின் ஒளியைப் பிரகாசிக்கச் செய்வது ஐடச் கண் மையேதான்.
★ புருவங்களை சோபிக்கச் செய்வது ஐடச் கண் மையேதான்.
★ விழிகளை எடுத்துக் காட்டுவதும் வசீகரம் செய்வதும் ஐடச் கண் மையேதான்.

### ஐடச் என்பது என்ன?

ஐடச் சகல மூலிகைகளாலும் கண்களுக்குப் போஷக சத்துக்களும் சேர்ந்து தயார் செய்யப்படுவதாகும். அறிஞர்களால் சாஸ்திர முறைப்படி தயாரிக்கப்பட்டது. முற்றிலும் கண்களுக்கு ஐடச் நூற்றுக்கு நூறும் கண்களுக்கு உகந்த போஷணம் அமைந்தது.

போலி கண் மைகளை வாங்கவே வாங்காதீர்கள்.

வாங்கும்போது "ஐடச்" "Eye Touch" என்ற உச்சரிப்பையும், பெரிய கண் நேராகப் பெட்டியின் மீது இருக்கிறதா என்று கவனித்து வாங்கவும்.

ஒரு "ஐடச்" கண்மை விலை அணு 12.




## ஐடச்

வேணுகா கெமிகல்ஸ்,
45, தாயார் சாயபு தெரு, 2-வது சந்து மவுண்ட்ரோட் — சென்னை.
ஏஜண்டுகள் தேவை.

தாருல் ஷாபாவின் புகழ்பெற்ற

# இளமையளிக்கும் மாத்திரைகள்

டாக்டர்கள் சிபார்சு செய்வது.

## ஆரோக்யம், பலம், ஜீவசக்தியளிக்கும் அற்புத டானிக்.

பூரண சுகம் பெறுங்கள் — வயோதிகருக்கு வரப்பிரசாதம்.

இளமையளிக்கும் மாத்திரைகள் (சாப்பிடுவதற்கு) ஒரு புட்டி ரூ. 5.
வெளிப்பூச்சுத் தைலம் 1 புட்டி ரூ 5-8.

ஆங்கிலத்தில் ஆர்டர் செய்க:— To The Manager,
DAR-UL-SHAFA GOLIAN (India) Ltd., A.S.W. Batala. (PUNJAB)
தாருல் ஷாபா கோலியான் (இந்தியா) லிட்.,
(A. S. W.) படாலா (பஞ்சாப்.)

தந்தி: "DASGO" ஸ்தாபிதம்: 1921. டெலிபோன் நெ. P.C. 28.

பிரபல மருந்து வியாபாரிகளால் விற்கப்படுகின்றது.

மதராஸ் & பெங்களூர் ஸ்டாக்கிஸ்டுகள் :

1. மெஸர்ஸ் ஆல்பட் & கோ. 182, மவுண்ட் ரோடு, மதராஸ்.
2. M/s. ராகவன் & கோ. ஸ்ரீ நரசிம்மராஜாரோடு, பெங்களூர் சிடி.
3. மெஸர்ஸ் N. A. ரியான் & கோ. கெமிஸ்ட்ஸ், போலீஸ் கமிஷனர் ஆபீஸ் ரோட், எழும்பூர், மதராஸ்.





## தலையில்

தலைமயிர் தெரிகிறதா அல்லது அடித்தலை தெரிகிறதா அடித்தலை புலப்படும் பக்ஷத்தில், உதிர்ந்த கேசராசிகளுக்குப் பதில் புதுக்கூந்தல் முளைக்கவில்லை என்பது நிச்சயம். அச்சமயம் கேசவர்த்தினியைக் கொண்டு பரிஹரிக்காமல், பாதி வழுக்கையைப் பூரண வழுக்கையாக விடுவானேன்? வழுக்கையால் ஏற்படும் கிழத்தோற்றத்தையும் அனுபவிப்பானேன்?

உதிர்ந்த இலைகள் மறுபடி முளைத்துவிடும். ஆனால் சில சமயங்களில் உதிர்ந்த கூந்தல் சிகிச்சையில்லாமல் முளைப்பதில்லை. அச்சமயங்களில் கேசவர்த்தினியை உபயோகித்து மயிர் உதிர்வதை நிறுத்தி இளங்கூந்தலையும், இளமையையும் ஒருங்கே பெறுங்கள்.

# கேசவர்த்தினி

கூந்தலைக்காப்பது; விருத்திசெய்வது; அழகுபடுத்துவது. விலை அணா 12; மேற்செலவு வேறு. எல்லாக்கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:
தென் இந்திய ரஸாயன சாலை,
"ஆச்ரமம்", க்ராஸ்கட் ரோட்,
பவர் ஹவுஸிற்கு அடுத்தது. கோயமுத்தூர்.



# சக்தி ஆரூடம்!

ஆராய்ச்சியும், அனுபவமும் நிறைந்த புகழ்பெற்ற சக்தி பால ஜோதிடரால் வருங்கால பலன்கள் தெளிவாகச் சொல்லப்படும். ஸ்ரீ R. மகாதேவ சர்மா, 15-2-47ல் எழுதுகிறார்:—"தாங்கள் கூறிய படியே நான் பிரமோஷனுடன் கிருஷ்ணகிரிக்கு மாற்றப்பட்டேன்."

1 முதல் 3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ. 1.
மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருஷ பலன் ரூ. 5.
சக்தி கவசம் ரூ. 7—8-0. வி. பி. பி. அணா 5.
ஜாதகம் or எழுதும் நேரம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம், P. O. (S. I)



# 'பாவ்லா' 'BAWLA'

சொறி, சிரங்கு, முகப்பரு, வேனல் கட்டி, ஊரல், நமைச்சல், சேத்துப்புண், தீப்பட்ட புண், வெட்டுக்காயம் முதலிய சர்ம வியாதிகளுக்கு மேல் பூசும் மருந்து.

வியாபாரிகளுக்கு டஜன் 1-க்கு விலை ரூ 3-12-0.
தபால்செலவு இலவசம்.

R. M. COMPANY, POST BOX NO. 985, BOMBAY. 1.








# Rgd. No. 2221.

27 வருஷமாய் தென்னாடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

## சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம். S.I.R.



## கொசு வலைகள்

நாலு மூலைகளிலும் நன்கு தைக்கப்பட்டு நீடித்து உழைக்கும்



| நீளம் | அகலம் | உயரம் | சாதா | சிறந்தது | ஸ்பெஷல் |
|---|---|---|---|---|---|
| 6 அடி | 3½ அடி | 3 அடி | ரூ. 7-8. | ரூ. 8-10. | ரூ. 12-8. |
| 6 ,, | 4 ,, | 4 ,, | ,, 8-12. | ,, 9-8. | ,, 14-6. |
| 6½ ,, | 4½ ,, | 4½ ,, | ,, 9-12. | ,, 10-12. | ,, 17-6. |
| 7 ,, | 5 ,, | 5 ,, | ,, 12-12. | ,, 13-12. | ,, 20-8. |
| 7½ ,, | 6 ,, | 6 ,, | ,, 14-12. | ,, 16-12. | ,, 24-8. |
| 9 ,, | 6 ,, | 6 ,, | ,, 16-0. | ,, 17-0. | ,, 27-8. |

பாக்கிங், தபால் செலவு ரூ. 1-4-0
ஏதாவது 3 எடுத்தால் தபால் செலவு இலவசம்.



அமெரிக்க பவுண்டன் பேனா

சிறந்த மோஸ்தர், பல வர்ணம், நல்ல ...ப்பு. குறைந்த ஸ்டாக்கே உள்ளது.
விலை ரூ. 4-4, ரூ. 5-6, ரூ. 6 உயர்தரம் ரூ. 6-8. சிறந்தது ரூ. 7-8. Postage As. 10/-
EASTERN WATCH Co. (S) P. O. Box No. 12219 CALCUTTA-5











சால்வதான யௌவனத்தையும், வீரிய விருத்தியையும் உண்டாக்கி, புதிய இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், இல்லற இன்பத்தில் நீண்ட போக சக்தியையும் தரும். 40-நாள் மருந்து ரூபாய் 3-12-0 வி.பி. செலவு வேறு.

ஜமதக்னி ஔஷதாலயா,
26, வடக்கு மாடவீதி
மயிலாப்பூர் :: சென்னை.



டெலிபோன் 2246 தந்தி: கிளாவர் பீடி




லேட் கான்சாகிப் M. முஹமது உமர்சாகிபுவின் குமாரரான முஹமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும் உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

## ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனார் காலத்திலிருந்ததைப் போன்றே சிறப்பாக விளங்குகின்றது.

முகம்மது நூருல்லா
ஸோல் புரொப்ரைட்டர்
ஸ்பேட் கிளாவர் & ஆர்மன் பீடிகள்
37, மன்னடி, மதராஸ்.

தந்தி விலாசம் : "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57

# ஆர். எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு : மன்னார்குடி.)

சந்தனாதித் தைலம் — அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு

முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

சோல் ஏஜெண்டுகள்:—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

## கண்ணில் பூவிழுதல்

டிகாக்ஸ் இம்பூர் (ரிஜிஸ்) ஒரு உத்தரவாதமான நிவாரணி. கண் வியாதிகள் எதற்கும் சிறந்தது. அபாயமற்றது. 1000-க் கணக்கான பேர் ஆபரேஷனில்லாமல் சொஸ்தமாயுள்ளனர். உலகப் பிரசித்தி பெற்றது. வெற்றிக்கு உத்தரவாதம். விவரம் இலவசம். விலை ரூ. 3. தபால் செலவு அணா 12.

## செவிடு

முழுச்செவிடு அல்லது அரைச் செவிடு / காதில் இரைச்சல், மற்றும் எக்காரணத்தினாலும் எவ்வித நோயானாலும் நாலே வாரத்தில் சொஸ்தப்படுத்துவதற்கு உத்தரவாதம். ஹானியற்றதும் உடனே பலனளிப்பதுமான மருந்து. வியாதிபெற்ற மூலிகை மருந்து. விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

## குஷ்டம், வெண்குஷ்டம்

தீராத நோயும் தீரும். உடம்பு முழுவதுமோ அல்லது பாகத்தில் மட்டுமோ இருந்தாலும் சரி, எமது வியாதிபெற்ற ஹானியற்ற மூலிகைகளினால் நாலே வாரத்தில் பூரண குணம் காண்பீர்கள். விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

KAMALA WORKS,
6, Panchpota, BENGAL.

## கணேஷ் காப்பிக்கொட்டை

சுவை, நறுமணமுள்ளவை




கணேஷ் & கம்பெனி
39, தம்புசெட்டி தெரு, மதராஸ்.
பிராஞ்சு: சௌகார்பேட்டை, மதராஸ்.

## நரையை ஒழியுங்கள்

"போரின்" பெயர் பெற்ற மூலிகை வாசனை ஆயுர்வேத எண்ணை நரையை ஒழிக்கின்றது. தலை சுற்றுதல், தலைவலி, தலைமொட்டை முதலியவற்றை குணப்படுத்தும். கேசம் சுருண்டு பிரகாசமடையும்.

ஸாம்பிள்,
விலை ரூ. 2—8—0
பாதி நரைக்கு,
விலை ரூ. 3—8—0
முழு நரைக்கு,
விலை ரூ. 5—0—0

Shri Vishnu Ayurved Bhavan
No. 2, P.O. Warisaliganj
(GAYA)

சுதேசமித்திரன்
வாரப்பதிப்பு

Vol. XVIII] வியஜய பங்குனி மீ 17உ ★ 1947-ஞ் மார்ச் மீ 30உ [No. 9

# புதிய மந்திரி சபை

சென்னை மந்திரி சபையில் ஏற்பட்ட நெருக்கடியும்; அதைத்தொடர்ந்திருந்துவந்த குழப்பமான நிலைமையும் ஒருவாறு சென்ற வார இறுதியோடு முடிவடைந்துவிட்டன. ஓமந்தூர் ஸ்ரீமான் ராமஸ்வாமி ரெட்டியார் சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். தலைவர் என்ற முறையில் பிரதம மந்திரியின் பதவியை ஏற்றுக்கொண்டு உடனடியாக எட்டு மந்திரிகளைப் பொறுக்கிக்கொண்டு மந்திரி சபையையும் அமைத்துக்கொண்டுவிட்டார்.

ஸ்ரீமான் பிரகாசத்தின் தேச சேவை, அத்துறையில் அவர் புரிந்திருக்கும் தியாகம் இவை அனைத்தும் மதிப்புக்குரியவை அத்தகைய ஒருவரிடம், காங்கிரஸ் கட்சியார் நம்பிக்கை இழப்பானேன் ? ராஷ்டிரபதி கிருபலானி தமது அறிக்கையில் குறிப்பிட்டதுபோல் இது இன்னதென்றுதான் தெளிவாக வில்லை. திட்டமாகவும் உறுதியோடும் அவர் இப்பிரச்னையில் முடிவுகாண முடியாதிருந்தமைக்குக் காரணமும் அதுவே.

காங்கிரஸ் ஆட்சியில் உள்ள மாகாணங்கள் அனைத்திலும் கொள்கைகள் ஒன்று; திட்டத்திலும் வித்தியாசம் கிடையாது. ஆனால் இதில் ஏற்படும் வித்தியாசம் ஒன்றுண்டு. கொள்கைகளையும், திட்டங்களையும் அமுல் நடத்தும்போது நடைமுறையில் அனுசரணையிருக்கவேண்டும். முதலில் எதைக் கவனிக்கவேண்டுமென்பதில் சிந்தை செல்ல வேண்டும். இத்தகைய மனப்பண்பாட்டோடு ஸ்ரீமான் பிரகாசம், மந்திரி சபையின் வேலை முறையில் நடந்துகொள்ளவில்லை. உரிய காலத்தில் உருப்படியான காரியத்தைச்செய்யாமல் பல்வேறு இனங்களில் தொல்லைகளை ஏற்படுத்திக்கொண்டுவிட்டார். இவைகளிலிருந்து கூட்டாக முளைத்த சக்தியின் பலன் தான் நெருக்கடி முற்றுவதற்கு உதவியிருக்கிறது. ஜனங்களின் ஆதரவில் செழித்த ஸ்தாபனம் காங்கிரஸ். இது தளரும் நிலைமை ஏற்பட்டது. உண்மையில் இதை நிவர்த்திக்க முனைந்தவர்களை ஒதுக்கி, உதாசீனம் செய்ய முற்பட்டார் ஸ்ரீ பிரகாசம். வாதங்களையெல்லாம் பிடிவாதத்தால் தகர்க்க முயன்றதன் விளைவு பிரத்தியட்சம் கடைசி வரையில் முயன்று பார்த்தார். சென்றதை மறந்து மன்னிப்பும் கோரினார். ஆனால் நடக்கவேண்டியது நடந்தே விட்டது.

காங்கிரஸ் சட்டசபைக் கட்சியின் ஆதரவோடு அவர் செயலில் இறங்கியிருந்தால் அநேகம் துன்பங்களை அவர் துரத்தியிருக்கலாம்; மக்களின் அன்றாட வாழ்விலுள்ள அல்லல்களையும் ஓரளவு களைந்திருக்கலாம். ஊழல் உட்புகுந்தது. நாளாக நாளாக நிலைமை உளுத்துவிட்டது.

புதிய மந்திரி சபை இந்த சந்தர்ப்பத்தில் பதவி ஏற்றிருக்கிறது இது இரண்டாவது கட்டம். ஸ்ரீமான் ராமஸ்வாமி ரெட்டியாருக்குள்ள பொறுப்பு மகத்தானது. தாம் நிறுவிய மந்திரி சபையில் அப்பு அழுக்குச் சொல்ல முடியாதபடி அவர் வகை செய்ய வேண்டும். பழைய மந்திரி சபையிலிருந்து கண்ட உண்மைகளை உணர்ந்து நடக்க வேண்டும். புதிய மந்திரியில் புகுந்திருப்பவர்களில் சிலர் ராஜாஜி மந்திரி சபையில் இருந்தவர்கள். அவர்கள் தங்கள் அனுபவ முதிர்ச்சியை சமய சந்தர்ப்பத்திற்கிணங்க பிரயோகித்தால் மக்கள் நம்பிக்கைக்குப்பாத்திரமாகலாம்.



# சென்னையில் புதிய காங்கிரஸ் மந்திரி சபை



சென்ற வாரம் ஸ்ரீ ஓமந்தூர் ராமஸ்வாமி ரெட்டியாரால் நிறுவப்பட்ட காங்கிரஸ் மந்திரி சபையிலுள்ளவர்கள்: ஓமந்தூர் ஸ்ரீ ரெட்டியார் (பிரதம மந்திரி), டாக்டர் ராஜன், டாக்டர் சுப்பராயன், ஸ்ரீமான்கள் எம். பக்தவத்ஸலம், கோபால் ரெட்டி, எச். சீதாராம ரெட்டி, கே. சந்திரமௌளி, கே. மாதவமேனன்.

ராஷ்டிரபதி கிருபளானி சென்னை மந்திரி சபை நெருக்கடிச் சிக்கலைத் தீர்த்துவைக்க மிக்க சிரத்தை எடுத்துக்கொண்டார். இடைவிடாமல் அவர் இவ்விஷயமாகப் பல தலைவர்களுடன் கலந்து பேசினர். இப்பிரச்னை ஒருவாறு தீர்ந்தவுடன் நிம்மதியாக உட்கார்ந்து சிரித்த முகத்தோடு சிரம பரிகாரம் செய்துகொள்ளுவதை 8-வது பக்கத்தில் வெளியாகும் படம் உணர்த்தும். எதிரேயுள்ள படம் பிரதம மந்திரி ஓமந்தூர் ஸ்ரீ ரெட்டியாரது.

## அட்டைப்படம்.

★

"போறும் ஊதாதே! 'படார்'னு வெடிச்சுடும், அப்புறம் இன்னொண்ணு தரமாட்டேன்" என்று தம்பியை எச்சரிக்கை செய்துவிட்டு உடைந்த பலூன்களுக்கு ஈடுகொடுக்க "பலூன் ஸ்டாக்" உடன் நிற்கும் சிறுமி.



# பேசிக்கொண்டே போங்கள்

'வெங்கு'

[முன்னுரை:—ஒரு மனிதன் முன்னுக்கு வரவேண்டுமானல் அவன் கட்டாயம் பேசித்தான் ஆகவேண்டும்! மேடைப் பிரசங்கம், வீட்டில் மனைவியுடன் பிரசங்கம். (ஏன்? சண்டை என்று வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள்!) சில சமயங்களில் அதிகப் பிரசங்கம் முதலியன நமக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பங்களை வரவழைத்துக் கொடுக்கின்றன. உபாத்தியாயர் நாள் முழுக்கப் பேசிக்கொண்டே போகிருர். தேசத்தியாகிகள் மேடை மீதேறி மேஜை அதிர வீரகர்ஜனை புரிகின்றனர். சாதுக்கள் சத்விஷயங்களை உபந்யாசிக்கின்றனர். ஏன்? எங்கள் வீட்டுப் பொடிப் பயல் விச்சுவும், எதிர் வீட்டு சரசுவும் கூடத் தான் மணலை வாரி மடியில் கொட்டிக்கொண்டு சதா பேசிக்கொண்டிருக்கின்றனர்! ஒருவருக்கொருவர் பேசும் விஷயங்கள் தான் வேறே ஒழிய, எல்லோரும் ஒரே காரியத்தையே செய்கின்றனர். எனினும், பலர் மேலும் மேலும் பேசிக்கொண்டே போக விஷயங்கள் கிடைக்காமல், வருந்துவதை நாம் கண்ணால் காண்கிரேம். அப்படிப்பட்டவர்களுக்காகவே சில யோசனைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை வைத்துக்கொண்டு அவர்கள் பேச்சு மூட்டையை அவிழ்க்க ஆரம்பித்தால், அதற்கு முடிவே இருக்காது. ஆனல் அதனல் ஏற்படும் விளைவுகளுக்கு மாத்திரம் ஜவாப்தாரியாக முடியாது.]

இது பத்திரிகை யுகம். இந்நாளில் 'பேப்பர்' படிக்காதவர்கள் இல்லையென்றே சொல்லலாம். ஆதலால் முதல் முதலாக இந்த அரசியல் மூட்டையைக் கொஞ்சம் அவிழுங்கள். நீங்கள் ஒரு பக்கம் ஜின்னு குட்டையைக் குழப்பி விட்டுக் கொண்டிருக்கும்பொழுதே மற்றொருவர் சென்னை மந்திரி சபையில் நுழைந்து, மன்னர் கோட்டையைத் தகர்த்து, அரசியல் நிர்ணய சபை வாயிலாக, நவகாளி அட்டூழியத்தைக் கண்டித்து ஸ்டர்லிங் நிதிக்காகப் பாடுபட்டுக் கடைசியாக லண்டன் நிலக்கரித் தட்டு வரையில் எட்டிப் பிடித்துவிடுவார். பிறகு 'ஏன்னு இப்படிக்கொஞ்சம் வரேளா?" என்று உங்கள் மனைவி கதவிடுக்கிலிருந்துகொண்டு ரகசியமாகக் காப்பி சாப்பிடக் கூப்பிடும்வரையில் உங்களுக்கு சுய நினைவே வராது!




'......என்னு இப்படிக்கொஞ்சம் வரேளா......"

அடுத்தபடியாக இன்று சர்வசாதாரணமாய், எடுத்தார் கை வளர்ப்புப்பிள்ளை போல் கி.க்கும், 'ஸ்ட்ரைக்', ஒரு நல்ல "ப்ளாட்!" கடந்து போன ரயில்வே, போஸ்

டல் முதலிய ஸ்ட்ரைக்குகளின் பேரில் 'உங்கள் சொந்த அனுபவம்' என்ற பாயை விரியுங்கள்! சிலர் இன்னும் கொஞ்சம் முன்னேறி, உங்கள் வீட்டு சமயலறை "ஸ்ட்ரைக்" பிறகு வேலைக்காரி, பால்காரி, முதலியவர்களின் அனுதாப "ஸ்ட்ரைக்" முதலியவைகளை வைத்துக்கொண்டு பேச ஆரம்பிக்கலாம். ஆனால் கேட்பவர்களின் மூளைகள் மாத்திரம் 'ஸ்ட்ரைக்' செய்யாமல் இருக்க வேண்டும்!

"ஸ்ட்ரைக்"கைக் கொஞ்சம் இத்துடனேயே விட்டுவிட்டு உங்களைக் கொஞ்சம் கடைவீதிக்கு அழைத்துப் போகலாம். இங்கு நீங்கள் காணும் காட்சிகள் ஒவ்வொன்றும், உங்களுக்குப் பேசுவதற்குச் சிறந்த விஷயங்களாகும். ஒருவர் துணிக்கடையிலிருந்து துணி வாங்கிக்கொண்டு, தன் சட்டை கிழிய கூட்டத்திலிருந்து வெளியேறுவார். அந்தக் காக்ஷியில்தான் சிருங்காரம், சோகம், ஹாஸ்யம் முதலிய எல்லா ரஸங்களுமே கலந்திருக்கும்! அநேகமாக இதுபோன்ற காட்சியை நீங்கள் மற்றோரிடத்திலும் காணலாம். வேறு எங்குமில்லை. 'ரேஷன் ஷாப்'பில். கல், நெல், அரிசி முதலியவை கலந்த ஒருவகை வஸ்துவை வாங்கக் காத்துக்கொண்டிருக்கும் ஜனக் கும்பலைத்தான் குறிப்பிடுகிறோம். இவற்றை வைத்துக்கொண்டுபேச ஆரம்பியுங்கள். பிறகு உங்கள் பேச்சைக் கேட்பதற்கே ஒரு தனி ஜன்மம் எடுக்கவேண்டியிருக்கும்!

ரேஷன், என்று சொன்னதும் ஒரு விஷயம் ஞாபகம் வருகின்றது. அதாவது, 'மக்காச்சோள"த்தைப்போல் மலிவானதும், சத்துள்ளதும் ருசியானதுமான உணவுப்பொருள் வேறு எதுவுமேகிடையாது....ஆகையால் அதை அதிகமாக உபயோகியுங்கள்" என்ற விளம்பரத்தைப் படித்துவிட்டு, ஒருவாரம் சேர்ந்தாற்போல மக்காச்சோளத்தால் தயாரான பதார்த்தங்களைச் சாப்பிட்டு சந்தோஷப்பட்டீர்களே?... அதாவது ஒரு அவுன்ஸ் உணவுக்கு நாலு அவுன்ஸ் மருந்து வீதம் சாப்பிட்டு ஜீர்ணம் செய்தீர்களே... அதைத்தான் நினைப்பூட்டுகிறோம்! இந்த 'டாப்பிக்' கைக் கொஞ்சம் எடுத்துவிடுங்கள். அதற்குக் கட்டாயம் வரவேற்பு கிடைக்கும் என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். இன்னொரு விஷயம். இதைப்பற்றி நீங்கள் பேச ஆரம்பித்தாலே...இன்று நீங்கள் மக்காச்சோளத் தோசை சாப்பிட்டதால் உண்டான வயிற்று வலி இருக்கும் இடமே தெரியாதே!




"......விச்சுவும், எதிர்வீட்டு சரசுவும் தெரு மணலை வாரி மடியில் கொட்டிக்கொண்டு சதா பேசுகிறார்கள்......"



" ......துணிக்கடையிலிருந்து துணி வாங்கிக் கொண்டு சட்டை கிழிய......"

இவற்றைத் தவிர கீழ்க்கண்ட ரகத்தவர்கள் கீழ்க்கண்ட குறிப்புகளை வைத்துக்கொண்டு பேசிக்கொண்டே போகலாம்:—

**பத்திரிகைப்பித்தர்கள்:**- இன்று நம் தமிழ் நாட்டுப் பத்திரிகைகளில் ஒவ்வொரு விஷயத்தின் கடைசியிலும் போடப்படும் கொக்கி (?) களை விடுவிக்கப் பிரயத்தனப்படலாம் — அல்லது பத்திரிகைகளின் பல பலிக்காத ஜோஸ்யங்களைப்பற்றி இவர்கள் ஜோஸ்யம் சொல்லலாம். சில நண்பர்கள், பத்திரிகைகளில் வெளியிடப்படும் பலவித விமர்சனங்களின்பேரில் தங்கள் விமர்சனங்களையும் தொடங்கலாம்.

**கிரிக்கெட் பிரியர்கள்:**-"பிராட்மன் டெஸ்ட் செஞ்சுரி', "மில்லர் மேரேஜ்", ஆஸ்ட்ரேலியா ரப்பர்", வரப்போகும் "இந்தியன் டூர் ஆப் ஆஸ்ட்ரேலியா" முதலியன, தற்கால கிரிக்கட் உலகிற்கு சூடான 'ஸப்ஜெக்ட்"டுகள்.

**பள்ளி மாணவர்கள்:**—"பெஞ்டில்" பூனை பொம்மையைப் போட்டுவிட்டு, அடியில் கணக்கு வாத்தியார் என்று எழுதி பிறகு பிரம்பம் பழம் வாங்கியது, ஸாயங்காலம் டிரில் 'கிளாஸு'க்கு 'டோக்கர்' கொடுக்கச்செய்த பகீரதப் பிரயத்தனங்கள், எஸ். எஸ். எல். ஸி. கேள்விப் பேப்பரை 'அவுட்' செய்த விசித்திர சரடுகள் முதலியவற்றை அஸ்திவாரமாகக்கொண்டு பேச ஆரம்பிக்கலாம்.

**ஆபீஸ் குமாஸ்தாக்கள்:**-எங்கள் ஆபீஸ் விஷயம் என்ற தலைப்



புடன் கூடிய ஒரு" டிபேட்"டை ஆரம்பியுங்கள். அதில் உங்கள் ஹெட் குமாஸ்தாவின் பருந்துப் பார்வைக்கும், காக்காய்...பிடிக்கும் வேலைக்கும் முக்கியத்வம் அளித்து விட்டால், பிறகு இன்று நீங்கள் நாள முழுக்க ஆபீஸில் உழைத்த களைப்பு, இருந்த இடம் தெரியாமல் பறக்கும்!

**சினிமா நேயர்கள்:** இவர் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்றுள்ளது. அதாவது, சினிமாவைப் பற்றிய புஸ்தகம் ஏதாவது ஒன்றை எடுத்து வைத்துக்கொண்டு சில வார்த்தைகளை உருவடித்துக் கொள்ள வேண்டும். பிறகு நாலுபேர் உள்ள இடத்தில், 'க்ளோஸப்,' "கண்டின்யூட்டி, 'ஸிம்பலிஸ்,;' 'ஆடியோ கிராபி," முதலிய வார்த்தைகளை ஒப்பியுங்கள். அவ்வளவுதான்! பிறகு உங்கள் பேச்சு ஹனுமார் வால்மாதிரி வளர்வதல்லாமல் அதற்கு எவ்வளவு மதிப்பு கிடைக்கிறதென்றும் பாருங்கள்!

**ஹோட்டலில் சாப்பிடுபவர்கள்:**- நம்ம கனேசபவன் சாப்பாட்டைப் பற்றிக் கொஞ்சம் எடுத்துவிடுங்கள்—அதுதான்; நீங்கள் முதலில் சாதத்தில் உள்ள கல்லைப் பொறுக்கி, சாம்பாரில் மூழ்கி, ரசத்தில் எழுந்திருந்து, பிறகு மோருக்குச் சாதமில்லாமல் அரை வயிறுடன் எழுந்து போகும் விதரணையை வர்ணியுங்கள்.

கடைசியாக, இன்னமும் சிலருக்குப் பேசுவதற்கு விஷயங்கள் தேவையாயிருக்கலாம். அவர்கள் இந்தக் கட்டுரை நன்றாக இருக்கின்றதா, இல்லையா, என்று பேச்சை வளரவிடலம்.

[பின்னுரை :-இவற்றைப் படித்துவிட்டும்கூட வாசகர்கள் பேசுவதற்கு மேலும் மேலும் விஷயங்கள் கேட்கக்கூடும், அவர்களுக்கு மனமார்ந்த மன்னிப்புகள்... இதற்கு மேலும் சொல்லிக்கொண்டிருக்க முடியாது... உள்ளேயிருந்து அவள் கூக்குரலிடும் சப்தம் கேட்கின்றது! அவளிடம் பேசிக்கொண்டு இருக்கவே நேரம் போதாதே!]

—



அமெரிக்காவுக்கு இந்தியாவின் முதல் தூதராக நியமிக்கப்பட்டு இப்போது அமெரிக்கா போய்ச் சேர்ந்திருக்கும் ஜனாப் அஸப் ஆலியை யு. எஸ். அந்நிய நாட்டிலாகா மந்திரி ஜார்ஜ் மார்ஷல் வாஷிங்டன் சர்க்கார் மாளிகையில் வரவேற்று கைகுலுக்கியபோது எடுத்த படம். வலது புறத்தில் நிற்கிறார் அஸப் ஆலி.



பனிக்கொடுமையால் பெருவாரியாக அவஸ்தைக்கு ஆளான நாடு லண்டன்மட்டுமல்ல. அமெரிக்காவும் இதில் சிக்கிக்கொண்டது. அங்கு விஸ்கான்ஸின், மில்வாகி பகுதியில் பனிப்புயல் வீசி எங்கும் பாறையாய் உறைந்துவிட்டதாம். வெளியே நின்ற கார்கள் எல்லாம் உறைந்து பனியால் மூடப்பட்டுவிட்டன. அவற்றைத் தோண்டி எடுப்பது அங்கு பெரும்பாடாயிற்று. —டபிள்யூ. பி. என். எஸ்.



இதாலி, ஹங்கேரி, பல்கேரியா, ருமேனியா முதலிய நாடுகளுடன் செய்துகொண்ட சமாதான உடன்படிக்கையில் பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரி மிஸ்டர் எர்னஸ்ட் பெவின் லண்டனில் கையொப்பமிட்டபோது எடுத்த படம். இடதுபுறத்திலிருந்து முதலாவதாக நிற்பவர் மிஸ்டர் ஏ. வி. அலக்ஸாண்டர்.




## 60

## பிரம்படி பொறுத்தான்

தன் பெண்டு, தன் பிள்ளை, தன் சுற்றம், தன் வீடு என்றாலே எவனுக்கும் ஒரு தனிப் பற்று உண்டாவது இயற்கை. மண்ணிலே பிறந்த எப்பேர்ப்பட்ட மனிதனும் இந்தச் சிக்கலான விஷயத்தில் சித்தத்தைச் செலுத்தி அகப்படாமல் இருப்பதில்லை. ஆனால் மாணிக்க வாசகர் இவர்களின் இச்செயலுக்கு விதிவிலக்கு. அவருக்கு எல்லா உறவும் இறைவனுடைய பத கமலங்களிடமே; எல்லாச் சுகமும் அவரிடத்தில் செலுத்தும் தூய்மையான தியானமே; எல்லாச் செயல்களும் அவருக்குச் செய்யும் தொண்டுகளே. ஆகவே பிரபஞ்சத்தின் மாய சௌந்தரியத்தில் மனத்தைப் பறிகொடுத்து மங்கி மறைந்து போகும் மனிதர் கூட்டத்தில் அவருக்கு நிச்சயமாக இடமிருக்க முடியாதல்லவா? பின் அவருக்கு எது இடம்? இடம், இடத்திலுள்ள பொருள் யாவும் மதுரைச் சொக்கேசனுடைய பொற்பாதங்களேயாகும் அவருக்கு!

இத்தன்மைக்கு நேர் எதிரான தன்மையைக் கொண்டுள்ள மனிதர்களுள்ளே பாண்டியனும் அடங்கினவன்தான். அவனுடைய மனத்திலே அழுக்கு இல்லை; ஆனால் பாசமென்ற பந்தம் இருந்தது. அந்தப் பந்தத்தால் இறுகக் கட்டப்பட்ட அவனுடைய ஆத்மா நன்மைகளைச் சுகமாகவும், தீமைகளைத் துக்கமாகவும் கருதியதில் வியப்பில்லை. பரிகளைக் கண்டதும் பரபரப்புடன் ஓடிவந்து குதூகலித்தவன், அவைகள் நரிகளாய் மறைந்ததும், மனமொடிந்து மாசுறலானான். அப்பொழுது எழுந்த கோபாக்னியின் கனற்பொறிகள் மணிவாசகரை நோக்கிப் பறந்தன. மணிவாசகர் பெருமானோ அசைவற்ற கம்பம்போல், துளியேனும் தம் உள்ளத்தை ஆட்டிக் கொடுக்காமல் இறைவனிடமே நிலையாய் நின்றுவிட்டார். அவருடைய அற்புதத் துணிவு அப்பாண்டியனுக்கு ஆச்சரியத்தையே தந்தது.

அந்தச் சமயத்தில் வையை நதி பெருக்கெடுத்து நகரை அழிக்கத் தொடங்கியது. புண்பட்ட மனத்தில் வேலைச் செருகுவது போல் அல்லவா ஆகிவிட்டது? உடனே கதறினான். சேனாபதிகளையும், காவலர்களையும் கூவியழைத்தான். அமைச்சர்களுடன் ஆலோசித்தான். குடிகளின் எண்ணிக்கை என்ன, ஒவ்வொருவரும் எத்தனைக் கோல் அளவு நீர்ப்பரப்பை அணையிட்டு அடைக்க வேண்டும் என்பனவெல்லாம் ஆராயப்பட்டன. உடனே வீட்டுக்கு ஒருவராகப் புறப்படும்படி உத்தரவு பறைசாற்றப்பட்டது. மண்வெட்டி, கூடை சகிதமாய்ப் புறப்பட்டனர் குடிமக்கள். இனிமேல் வையைப் பெருக்கு தடைப்பட்டுவிடுமென்ற நம்பிக்கை பாண்டியன் மனத்தில் வேரூன்றியது. வந்த பயங்கரமான கொடுமையை மிகவும் சாதுரியமாகச் சமாளித்துவிட்டோம் என்ற பெருமையும் அவனைக் கர்வத்தில் ஈடுபடுத்தியது. ஆனால், "ஏன் வையை நதி பெருக்கெடுக்க வேண்டும், யாருக்கேனும் அபராதம் செய்திருந்தாலொழிய இம்மாதிரியான செயல்கள் நடைபெறுவதில்லையே! மணிவாசகரைத் தண்டித்த மாபெருங் குற்றமல்லவா இப்பெருக்குக்கும் கொந்தளிப்புக்கும் காரணம்?" என்பதை அவனுடைய மனம் ஊகிக்கவில்லை. மன நிம்மதியுடனே மாளிகையின் மலர் மஞ்சத்தில் அமர்ந்து மகிழலானான், மர்மம் அறியாத மன்னன்.

மதுரைமா நகரத்தின் அக்னி மூலையில் ஒரு சிறு குடிசை. அதன் நாற்புறமும் செடி கொடிகள் சூழப்பெற்ற தோட்டம். அங்கே ஒரு வயதான கிழவி தன் வயிறு நிமித்தம் பிட்டு விற்று ஜீவித்து வந்தாள். அவள் சமைக்கும் பிட்டு ஓர் அலாதி மகத்துவம் பெற்றிருந்தது. இறைவனுக்கு அர்ப்பணம் என்று கூறி நிவேதிக்காமல் அவள் என்றும் பிட்டை விற்கத் தொடங்கினதில்லை. ஆலவாய்ப்பெருமான் அவளுடைய பக்தியின் போக்கிலே நன்கு லயித்திருந்தார். அவளுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் அணுவேனும் களங்கம் இல்லை, என்று இறைவனை அடையலாம்?' என்பதே அவளுடைய கடைசியான லட்சியம்!

வீட்டுக்கு ஓர் ஆள் அனுப்ப வேண்டிய சட்டம் அவளையும் பாதிக்க வேண்டுமா! அவள் இந்த உலகத்தில் தனியாக வாழும் ஒருத்தியல்லவா? அவள் என்ன செய்வாள்! யாரேனும் கூலிக்கு ஆள் அகப்பட்டால் அவள் மனம் நிம்மதியடையும். அவளுக்குப் பாண்டியன் ஆணையை மீறி நடக்கத் துணிவில்லை. மேலும், தானும் தன் பொருளைக்கொண்டு யாரையேனும் ஆளாக அனுப்பி, நல்ல பெயரை அடைய வேண்டுமென்ற தூய எண்ணத்தைக் கொண்டிருந்தாள். நாட்டைக் களங்கப்படுத்த வந்த ஆற்றின்

பெருக்கு, அவளுடைய சேவையாலும் தடைப்பட வேண்டுமென்பது அவளுடைய தூய மனத்தின் நினைவு. இவைகளின் இடையில் அரசன் தன்னைத் தண்டிக்கும்படியாக நேர்ந்துவிட்டால் என்ன செய்வது என்ற ஊசலாட்டமும் வருத்திக்கொண்டிருந்தது.

"என் இறைவா!" என்று கூவினாள். அவள் அலறும்போது அணித்தாகவிருந்த செடி, கொடிகள்



யாவும் தலை சாய்ந்தன. "எங்கள் தலைவிக்கு இம்மாதிரி இன்னல்கள் வரலாமா?" என்று நினைத்துக் கண்ணீருதிர்ப்பனபோல அவைகள் மலர்களை உதிர்த்தன. அவைகள் மலர்களை உதிர்த்து, பூமாதேவியிடம் குறையிடுவதுபோல இருந்ததென்றும் கருதப்பட்டது. மலரை நாடி வந்த வண்டுகள் அவைகள் வற்றி உலர்ந்து கிடப்பதைக்கண்டு காரணமறியாமல் திகைத்துப்போய் ஒலி செய்தன. அவைகளின் ஒலியுடன் வந்தி என்ற அந்த வாணிச்சியின் குரலும் சேர்ந்து மகேசனின் காதுகளில் எட்டியது.

"துணை இல்லை; சுகமில்லை; பிட்டு விற்று வாழும் பேதை நான்: என் வாழ்க்கையில் இதுவரையிலும் நான் தூய நெறியிலிருந்து சற்றேனும் பிசகினவள் அல்ல என்று ஒருவாறு துணிவாகவே கூறுவேன்! தாங்களே தாயுந் தந்தையும், ஆளும் மைந்தனும்!" என்று அம்மாது கூவியதைக் கேட்ட இறைவனின் உள்ளத்திலேயிருந்து கருணை வெளிப்படலாயிற்று.

இறைவன் சிந்திக்கலானார்; "பக்தனை உத்தேசித்தும் பரியாளாக மாறிச் சென்றோம். பின்பு அதே பக்தனைக் காக்க நதியைப் பெருகுமாறு தூண்டினோம். இப்பொழுது பக்தையைக் காக்கக் கூலியாளாகச் செல்வதே தக்கது" என்று முடிவான எண்ணம் ஒரு நொடியிலே பிறந்தது. சிஷ்டபரிபாலனத்திற்குச் சிறிதேனும் பின் வாங்குவது அவருக்குத்தான் இயல்பில்லையே!

அழுக்கு அடைந்த பழந்துணியொன்று அரையிலே உடுத்துக்கொள்ளப்பட்டது: தலையிலே சும்மாடு கண்ணியமாய்ப் பிரகாசித்தது. கவிழ்த்துக்கொண்ட கூடையும், தோளிலே பாம்பைப்போலத் தொங்கும் பண் வெட்டியும் இயற்கையான கூலியாளாக அவரை மாற்றின. வயிற்றிலே பசியை எழுப்பிக்கொண்டு, ஒரு பாலனாய்ப் புறப்பட்டுக் கால்களைத் தரையிலே ஊன்றி நடக்கலானார் இறைவன்.

அடியார்க்கருளும் வாயிலிருந்து அடியாருள் ஒருத்தியாகிய வந்தியை ஆதரிக்கவே கருதி, "அடியேன் கூலியாள். கூலியாள் கூலி கொடுத்து என்னிடம் வேலை கொள்வோர் உண்டா?" என்ற கேள்வி நாதம் தொனித்தது. கேட்டனள் கிழவி. அகன்றது விசாரம், ஓடி வரலானாள். ஆள் முன்னே! அப்போது ஓடி வருவதற்கு இறைவனருளால் அவளுக்குப் பலம் உண்டானதை அவளாலேயே புரிந்துகொள்ள முடியவில்லை.

"மகனே! எனக்கு அளந்துள்ள கரையை அடைத்து என்னைக் காப்பாயா?" என்று சாதாரணப் பணிவுடன் கேட்டாள் வந்தி. அவளுக்கு அவன் உண்மையான ஆளாகவே தோன்றினார். மேலும் தம்மிடத்தில் அவளுக்கு மிகவும் நம்பிக்கை உண்டாகும்படியும் நடித்தார். 'நான் பெரும்பசியால் பெரிதும் வாடுகிறேன். முதன் முதலில் பசியைத் தீர்த்துவிடு. பிறகு நான் கரையைத் தீர்த்து விடுகிறேன், கவலை வேண்டாம்" என்றார்.

வந்திக்கு அளவுமீறிய ஆனந்தம் உண்டாயிற்று. உடனே தன்னுடைய சிறிய குடிசைக்குள் நுழைந்து, சமைக்கப்பட்டிருந்த முதற் பிட்டை எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள். இறைவன் அப்பிட்டை மாத்திரம் சாப்பிடவில்லை; அவளுடைய அன்பையும் சேர்த்து உண்டார்.



"தாயே! என் கதையைக் கேள். அது மிகவும் சோகம் சூழ்ந்தது" என்று தாம் சொல்லப் போவதற்குப் பீடிகை போட்டார் இறைவன்.

"மகனே! என் சோகத்தை நீ போக்க வேண்டும். உன் சோகத்தைப் போக்க நான் சக்தியில்லாதவள். ஆயினும் கேட்கக் காதுகள் இருக்கின்றன. கூறு; கேட்கிறேன்" என்றாள் வந்தி.

"அன்னையே! எனக்கு இவ்வுலகில் யாருமில்லை: நான் ஓர் தனியாள். தந்தையும், தாயுமிழந்த நான் உன்னையே தாயாக அடைந்தது ஓரளவு மனத்திற்குச் சாந்தியாகிறது. எங்கேயோ பிறந்தேன். எங்கெல்லாமோ சுற்றினேன். எத்தனையோ ஆத்மாக்களையும் கண்டேன். ஆனால் உன்னைப்போல் ஓர் அன்புடைய கிழவியை நான் கண்டதில்லை; கேள்விப்பட்டதுமில்லை. இன்று உன்னிடம் வந்தேன். என் பசியைத்தீர்த்தாய். இளைப்பாற்றினாய்! நான் என்ன செய்ய வேண்டும்?" என்றார் இறைவன்.

'மகனே! களைப்பாறிவிட்டுச் செல்!" என்றாள் கிழவி. அவருக்குக் களைப்பா! அவளுக்கு அது எப்படித்தெரியும்? அங்கிருந்தும் புறப்பட்டுச் சென்றார், அப்போது திருவிளையாடல் புரியத் தீர்மானித்து மண்ணை வெட்டினார், தலைமீது வைத்துக்கொண்டார்: மிகவும் பாரமாயிருக்கிறதே" என்று பக்கத்தே உள்ளவரிடம் சொல்லிக் கீழே வைத்தார்: பிறகு தூக்கிக்கொண்டு சென்றார்: கரைமீது கொட்டிவிட்டுக் களைப்பாகவிருக்கிறது என்று கூறிக்கொண்டே, நிழலில் ஒதுங்கி உட்கார்ந்தார். ஆனந்தமான நித்திரை அப்போது வந்தது. அதில் ஈடுபட்டு விட்டு எழுந்து கொண்டார் கொஞ்ச நேரத்திற்கெல்லாம்.

பக்கத்திலேயிருந்த மற்றக் கூலியாட்கள் பார்த்தனர். பின்னும் பல லீலைகள் தொடங்கின. எழுந்து நின்று ஆடுவார்: அவர்கள் "ஆகா! என்ன அழகு' என்று கூறிப் பார்த்து நிற்பர்: மண்ணை எடுத்துக்கொண்டுபோய் மற்றவர் பங்குகளில் கொட்டுவார்: களிப்பு மிகுந்தவர்போல் பக்கத்தேயுள்ளவர்களைக் கட்டிக்கொள்வார்: கூடையுடன் ஆற்றில் தவறி விழுந்து விட்டவர்போல் வீழ்ந்து கலங்குவார்: பின் நீந்துவார்: சுழியின் உள்ளே ஆழ்ந்து சுழல்வார்; மிதப்பார்: பின் கரையேறி நின்று சிரிப்பார், இவ்வாறாகத் தானும் பித்தனாய், மற்றையோரையும் பித்தராக்கிக் கொண்டிருக்கும்போது மீண்டும் பசி வந்துவிடும். வாணிச்சியிடம் வந்து பிட்டு வாங்கி ருசி பார்த்துத் தின்றவண்ணமாகவே செல்லுவார்.

இப்படியிருக்கும்போது காவலர்கள் வந்தனர். வந்தியின் கரைமாத்திரம் அடைக்கப்படவில்லை என்பதை அறிந்து கோபத்துடன் இறைவனை நோக்கினர். "தம்பி, ஏன் சும்மா இருக்கிறாய்?" என்று கேட்டான் ஒரு காவலாள். உத்தரம் சொல்லாமல் இறுமாப்புடன் நின்றார் இறைவன். முன்னிலும் கோபம் அதிகமாயிற்று அவர்களுக்கு. அடிக்கவோ பயம்! அரசனிடம் சென்று கூறுவதே நலம் என்று கருதி ஓடிச்சென்று கூறினர்.

பாண்டியன் நேரே, தான் வந்து காண வேண்டுமென்னும் விருப்பத்துடன் அங்கே வந்தான். எல்லாக் கரையும் அடைக்கப்பட்டிருக்க, வந்தியின் கரை மாத்திரம் அடைக்காமலிருப்பதன் காரணமென்ன?' என்றார். இறைவனைப் பிடித்துக்கொண்டு வந்து நிறுத்தினார்கள். அப்போது தன் எதிரே நிற்பவனாகிய கூலியாள், உலகையாளும் பரஞ்சுடர் என்பதை உணரமுடியாதவனாய்க் கையிலே பொற்பிரம்பு கொண்டு அவரை அடிக்கத் தொடங்கினான் மன்னன்.

ஓர் அடி வீழ்ந்தது. அடுத்த விநாடியில், கூடை மண்ணை உடைப்பிற் கொட்டி மறைந்தார் இறைவன். அவர்மீது அடி வீழ்ந்தபோது உண்டான



அதிசயத்தை என்னென்பது! பாண்டியன்மீதும் வீழ்ந்தது அவ்வடி; அந்தப்புரத்திலே அமர்ந்திருந்த அரசியின் மீதும் பட்டது. அமைச்சர், இளங்குமாரர், கூலியாட்கள், நக்ஷத்திர மண்டலங்கள், பஞ்சபூதங்கள், தேவர், ரிஷிகள், மேகங்கள், நாகர்கள் முதலிய எல்லோர்மீதும் பட்டது அவ்வடி!

திருமாலின் கண்கள் விழித்தன. பிரமன் அதிசயித்தார். இந்திரன் பயந்தான். யக்ஷர்கள், சித்தர்கள், சாரணர்கள் முதலியோர் "இது என்ன அடி?" என்று கேட்டுக்கொண்டே ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

'இறைவனே உலகங்கள் யாவினுக்கும் ஏக நாயகன் என்றும் அன்பினுக்கு எளியவன் என்றும் காட்டும் பொருட்டே' அவ்வாறு லீலை புரிந்தார் மகேசன்.

மன்னன் மருண்டான். கோற்காரர்கள் விரைந்து ஏகினர் வந்தியைக் காண. அவளை அங்கு காணவில்லை. மேலே நோக்கினர்கள். விமானமொன்றின்மீது ஏறிச் செல்லுகிறாள் வந்தி! நந்திகணங்கள் சிவலோகத்திற்கு அவளை அழைத்துச் சென்றதையே அவர்கள் பார்த்தனர்.

அப்போது வானத்திலே இறைவனுடைய தோற்றம் தெரிந்தது.

"பாண்டியனே! உன் பொருள்கள் தர்ம வழியிலே சேகரிக்கப்பட்டவை. ஆகவே வாதவூரன் அவற்றை எமக்களித்தான். அறியாமல் அவனை அல்லற்படுத்தினாய்! நாமே பரிகளையனுப்பி நரிகளாக மாற்றினோம். மேலும் துன்புறுத்தினாய், ஆகையினால் நதி பெருகிடச் செய்தோம். நம்மையே கதியென நம்பியிருந்த வந்தியின் ஆளாக வந்து வெள்ளத்தைத் தடுத்தோம். இவையாவும் வாதவூரன் பொருட்டே செய்யப்பட்டவை; அவன் தன்மையை இதுவரையிலும் நீ அறியவில்லை. அவன் தன் அன்பை எனக்குத் தந்தான். அழியா கீர்த்தியையும் எம்மைக்காணும் பாக்கியத்தையும் உனக்குத் தந்தான். இனியாகிலும் இதனை உணர்ந்து அவனை அவனிஷ்டப்படி விடுத்து, நீதியோடு அரசு புரிவாயாக!" என்று கூறி மறைந்தார் இறைவன்.

"ஆஹா! என்னப்பன் கருணையை இன்றே உணர்ந்தேன்" என்று ஆடிப் பாடியவன் "மெய்த்தொண்டர் மாணிக்கவாசகர் எங்கே?" என்று கேட்டுக்கொண்டே கோவிலுக்கு ஓடினான்.

அங்கே ஜபம் புரிந்துகொண்டிருந்த மாணிக்கவாசகரைக் கண்டதும் விழுந்து வணங்கினான். "ஐயனே! உம்மை யாரென்று அறியாது செய்தேன் இக்குற்றத்தை! மன்னித்து இந்நாட்டைக் காத்தாளவேண்டும்" என்று கூறிப் போற்றினான்.

"தொல்லை நீர் உலக மாண்டு
சுடு துயர் நரகத்(து)ஆழ
வல்ல என் அறிவுக் கேற்ற
வண்ணமே செய்தேன்; நீர் என்
எல்லைநீர் தவப்பேறாய் வந்(து)
இகபர ஏது வாகி
அல்லல் வெம்பிறவி நோய்க்கும்
அருமருந் தானீர் ஐயா!"

என்று கூறித்தொழுது நின்றான் மன்னன். மணிவாசகர், "அரசே! நீர் மஹேந்திரனைப் போல மண்ணை ஆள்வீர், கடவுளை வேண்டி அவர் கட்டளைப்படி காலம் கடத்துவீர் ஆக! உம்மை நான் அடைந்ததால்தான் உலக நீதியும், தேவ நீதியும் அறிந்தேன்; சித்த சுத்தியடைந்தேன். இறைவன் உம்மைக் காக்கட்டும்!" என்று கூறிச்செல்லலானார். பின்னே தொடர்ந்தான் மன்னன். "நிற்பீர், நிற்பீர்!" என்று கூறி நடந்து சென்றார் அடிகள். பிறகு, உத்தரவு பெற்றுத் திரும்பினான் மன்னன். தமது மந்திரி துறவியாகிச் செல்வதைக்காணும் அவனுக்கு எவ்வளவோ உணர்ச்சிகள் உண்டாயின. கை தூக்கி நின்று, இறைவனிடம் முறையிடலானான்.

'இறைவா! வில்லால் அடித்தான் அர்ச்சுனன். கல்லால் அடித்தார் சாக்கிய நாயனார். கடையவனாகிய நான் பிரம்பால் அடித்தேன்! அவைகளைப் பொறுத்தது போல எனது அடியையும் பொறுத்துக்கொண்டாயோ?" அப்போது அவன் கண்களில் தாரை தாரையாக நீர் பெருகியோடியது.

"தாயானாய் தண்ணளிக்கு; தமியேன் செய் கைம்மாறு என்?" என்று மேலும் கேட்டு நின்றான். "ஆஹா! அன்று சிறுத்தொண்டரிடம் பிள்ளைக் கறியமுதுண்டாய் வேடனாகிய கண்ணப்பனிடம் ஊனைப்பெற்று மகிழ்ந்தாய். இன்று இந்தக்கிழவி வந்தியிடம் பிட்டு நயந்து தின்றாயோ!" என்று உருக்கமாகக் கூறினான். பிறகு அரண்மனை சென்று பெருங்கொடை புரிந்தான்.

ஜகநாதன் என்ற அருமைப் புதல்வனைப்பெற்று அவனுடன் களித்து வாழலானான்.

வாதவூரரோ பல ஸ்தலங்களுக்குச்சென்று கடைசியாகத் தில்லை ஸ்தலத்தை அடைந்தார். அங்கேயே ஒரு தபோவனத்தில் தங்கியிருந்தார்.

அப்போது சில புத்தமதத்தவர்கள் தில்லைக்கு வந்து மூவாயிரவரைத் தம்முடன் வாதுக்கழைத்தனர். இறைவனுடைய கருணையைப்பெறவேண்டித் தவம் புரியும் பக்தர்போல, கருணையைப் பெற்ற மாணிக்கவாசகர் சிறந்த சிவயோகத்தில் மூழ்கியிருந்தார். இறைவன் மூவாயிரவருள் முதல்வராயுள்ள ஒருவரின் கனவில் வந்து கூறினார். 'வாதவூரனை அழைத்துச் செல்க, வாதுசெய்து வெல்வான்" என்று கூறியதன்படி அவர்கள் மாணிக்கவாசகரிடம் வந்தனர்.

மாணிக்கவாசகர், 'இறைவன் கட்டளையில்லாமையால் நான் வரமாட்டேன்' என்று கூறி மறுத்துவிட்டார்.

அப்போது மீண்டும் மூவாயிரவருள் முதல்வராயுள்ளவரின் கனவில் தோன்றிய மகேசன், திருப்பெருந்துறைக் குருந்தடியில் ஆட்கொண்ட குருமூர்த்தி அழைக்கிறார் என்றும் 'மாணிக்கவாசகர்' என அவனை அழைக்கவேண்டுமென்றும் கூறி மறைந்தார். உடனே இதனை அறிந்த மணிவாசகர் அவ்வாறே சென்று வாது புரிந்து சைவந்தழைக்கச் செய்தார். அப்போது வந்த சோழன் வேண்டுகோளுக்கு இணங்கி, அவனுடைய ஊமை மகளைப் பேசுமாறும் செய்தார்.

இப்படியாக அற்புதச் செயல்கள் பல புரிந்து வந்து பின் தில்லையிலேயே ஞானாநந்த ஜோதியுடன் கலந்து சிவமாக மாறினார். எல்லோரும் மலர்தூவிப் பிரார்த்தனை புரிந்து நின்றனர்.

---






## 48

*அன்புள்ள அம்மாவுக்கு, அலமு அநேக தண்டம் சமர்ப்பித்த விக்ஞாபனம்.*

மன்னியின் வாய்க்குச் சர்க்கரைதான் போடவேண்டும். அவள் மாத்திரம் அப்பொழுதே சொன்னாள். 'உங்களுக்குத்தெரியாது அலமு! நமக்குத் தெரிந்தோ, தெரியாமலோ இதனால் சில பாதகங்கள் பின்னிட்டு ஏற்படும். அதனால் புக்ககம், பிறந்தகம் இரண்டு இடத்திலும் 'பொல்லாப்பு' ஏற்படும். இதெல்லாம் வம்புச்சண்டையை விலைக்கு வாங்குகிற ஸமாசாரம். ஆகவே இங்கே உத்தியோகம் பார்த்துக் கொண்டு இருக்கும் யோசனை என் வரையில் சரியாகப்படவில்லை என்று. 'நமக்குத் தெரியாமல், அப்படி என்ன பாதகம் ஏற்பட்டுவிடப் போகிறது! அம்மா அப்படி ஒன்றும் விவேகம் இல்லாதவளில்லை. தன்னுடைய நிர்ப்பந்தத்தினால்தான இங்கு தனிக்குடித்தனம் ஏற்படுகிறதென்று அண்ணாவுக்கு நன்கு தெரியும். ஆகவே அண்ணாவைப்பற்றிய வரையிலும் விசாரமில்லை, வேறு யார் இருக்கிறார்கள் நீ பயப்படுவதற்கு? பேசாமல் அண்ணா சொல்கிறபடி செய், என்றேன். அதன் பிறகுதான் அவள் ஸம்மதித்தாள்.

"தம்பிக்கு மேல் படிப்புக்குப் பாடசாலை இல்லை. தங்கைக்கு நன்றாக 'டான்ஸ்' வரும் என்று யாரோ சொல்லிவிட்டார்களாம்: டான்ஸ் சொல்லிக் கொடுக்க அந்த நாட்டுப்புறத்தில் யாரும் இல்லை. பிள்ளையிடம் விடுவோமென்றால், நாட்டுப்பெண் துடப்பக்கட்டையை எடுத்துக் கொள்கிறாள். இதற்காகவே அம்மாவும், அப்பாவும் துர்ப்போதனை செய்து, பெண்ணைப்பட்டணத்தில் குடியிருக்க ஏற்பாடு செய்து விட்டார்கள். அவள்தான் சொந்த பெண். சொன்னதைக்கேட்க வேண்டும். இவனுக்கு எங்கே போயிற்று புத்தி என்று கேட்கிறேன். ஆனால் கோண்டு வாத்து மாமி சொல்கிறமாதிரி கல்யாணம் ஆகிற வரையில்தான், தாயார், தகப்பனார், தம்பி, தங்கை எல்லோரும். கல்யாணம் ஆகிவிட்டால் மாமியார், மாமனார், மைத்துனன், மைத்துனி, என்று, வேட்டகத்து உறவுதானே பிரமாதப்படும்?" என்று மற்றொரு குண்டை வீசியிருக்கிறாய். இதெல்லாம் யாருடைய துர்ப்போதனையோதான். அதில் சிறிதும் சந்தேகமே இல்லை. ஏனென்றால் இதற்கு முன்னால் உனக்கு இந்த மாதிரியான 'அற்ப' விஷயங்களெல்லாம் கொஞ்சம் கூடத் தெரியாது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். எவ்வளவு சீக்கிரத்தில் உன்னுடைய மனதைக் கலைத்து விட்டிருக்கிறார்களடி! அம்மா அவர்களுடைய ஸாமர்த்தியமே ஸாமர்த்தியம்!

இப்பொழுதும் கடைசியாகச் சொல்கிறேன்: தன்னுடைய தம்பியையும், தங்கையையும் வைத்துக்கொள்ளும் நோக்கத்துடன் அவள் இங்கு குடித்தனத்தை ஆரம்பிக்கவில்லை. முதலில் இந்த உத்தேசமே இல்லை. எங்களுடைய வற்புறுத்தல்தான் காரணம். நீ சொல்கிறமாதிரி மன்னியின் அண்ணாவினுடைய அகமுடையாள் என்னவோ கொஞ்சம் பொல்லாததுதான். சௌந்தரம் வீடு வாங்கி கிரகப்பிரவேசம் செய்தபோதே நாங்கள் அதனுடைய குணத்தைத் தெரிந்துகொண்டுவிட்டோம். மன்னியின் அண்ணா நல்லவராக இருந்தாலும் அந்த ராங்கிக்காரியின் வார்த்தையை மீறி தம்பியையும், தங்கையையும் வைத்துக்கொள்ள முடியாதென்பதும் வாஸ்தவந்தான். ஆகவே மன்னியிடம் விடுவதைத்தவிர வேறு வழியில்லை. ஆனால் முன் ஏற்பாட்டின்பேரில்தான் இது நடைபெறுகிறது என்று நீ சொல்வதுமாத்திரம் சுத்தப் பிசகு என்று நான் கண்டிப்பாகச் சொல்வேன். இந்தமாதிரியெல்லாம் சம்பவிக்கும் என்பதை முன்கூட்டித்தான் மன்னி இங்கு இருக்க சம்மதிக்கவில்லை என்றே தோன்றுகிறது. வாஸ்தமாகவே மன்னி சொன்னமாதிரி இப்பொழுது புக்ககம், பிறந்தகம், இரண்டு இடத்திலும் அவளுக்குப் 'பொல்லாப்பு' ஏற்படப்போகிறது. தம்பியையும், தங்கையையும் வைத்துக்கொள்ளாவிட்டால் பிறந்தகத்தில் தாயார், தகப்பனார் மனதுக்குக் கஷ்டம் ஏற்படும். அவர்கள் மனது நோகாதிருப்பதற்காக, வைத்துக்கொண்டால் உன்னுடைய வெறுப்புக்கு ஆளாக வேண்டியிருக்கிறது. மன்னி

யின் விவேகமும், தீர்க்க திருஷ்டியும் எப்படிப்பட்டதென்று இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலல்லவோ தெரிகிறது!

என்னமோ, இங்கே இருக்கிறதென்று தீர்மானம் செய்துவிட்ட பிறகு, திடீர் திடீர் என்று, பிறர் பேச்சைக்கேட்டுக்கொண்டு, இந்தமாதிரியெல்லாம் 'வெடுக் வெடுக்'கென்று எழுதாதே. இதையெல்லாம் மன்னி பார்த்துவிட்ப்போகிறாளேயென்று ஓரே திகிலாயிருக்கிறது. உன்னிடம் அவள் அபாரமான மதிப்பு வைத்திருக்கிறாள். இந்தமாதிரி 'நல்ல குணங்கள்' படைத்த மாமியார் இந்தக் கலிகாலத்தில்கூட இருக்கிறார்களே என்று அவள் அப்படி ஆச்சரியப்படுகிறாள். ஆகையால் அந்த எண்ணத்துக்குப் பங்கம் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது தான் புத்திசாலித்தனமாகும். இந்தக் காலத்தில் அங்கங்கே நாட்டுப்பெண்கள் இருக்கிற இருப்பைப் பார்த்தால் இந்தமாதிரியான நாட்டுப் பெண் உனக்கு வாய்த்ததற்கு நீ பெருமாளுக்கும் தாயாருக்கும் எத்தனை தேங்காய் உடைத்தாலும் போறாது. அதோ பட்டுமாமி ஆத்தில் அவளுடைய நாட்டுப்பெண்ணின் உடன் பிறந்தானுடைய அமல் அமர்க்களப்படுகிறது! பட்டுமாமி வாயைத் திறக்க முடியுமா? எப்பொழுது பார்த்தாலும் அவளுடைய ஆத்தில் சம்பந்திவீட்டுக்கும்பல்தானே. 'ஜே ஜே'என்று கூடி கும்மாளமடித்துக்கொண்டிருக்கிறது! நம்ம மன்னி விஷயத்தில் அந்த மாதிரியான புகார் ஏதாவது சொல்ல முடியுமா? அவள் அங்கே இருந்தவரையில் அவளுடைய பிறந்தகத்தார் கல்யாணம், கார்த்தி, இதுகள் தவிர மீதி நாட்களில் வந்தது உண்டா? விவேகியான நீ இதையெல்லாம் கொஞ்சம் ஆர அமர யோசித்துப் பார்க்காமல் திடுதிப்பென்று எதையாவது 'சொல்லிவைக்கக் கூடாது. அப்புறம் உனக்கும், பிறருக்கும் என்ன வித்தியாசம்?

இது இந்தமட்டோடு இருக்கட்டும். மழைவிட்டும் தூவானம் விடவில்லை என்று சொல்வார்களே அந்தமாதிரி விடுதலை செய்யப்பட்ட கம்யூனிஸ்டுகளில் சிலரை மீண்டும் கைது செய்கிறார்களாம். இதைக் கேட்டவுடனே நாத்தனார் பரபரவென்று ஓடிவந்தாள். 'என்ன மன்னி இது? இவ்வளவு சிரமப்பட்டு விடுதலையானதுதான் மீதிபோலிருக்கிறதே. இன்னும் ஆபத்து விட்டபாடாகக் காணவில்லையே' என்று ரொம்பவும் பயந்துபோய்க் கூறினாள். 'ஆமாம் அக்கா, நானே சொல்ல வேண்டுமென்றிருந்தேன். கம்யூனிஸ்டுகளோடு நின்றுவிடவில்லை. சந்தேகத்தின் பேரில் சிலகாங்கிரஸ்காரர்களைக் கூடக் கைது செய்துவிடுகிறார்களாம். இவருக்கு ரொம்பவும் வேண்டியவரான ஒரு பிரபல காங்கிரஸ்காரரை இப்படித்தான் ஏதோ சந்தேகத்தின் பேரில் கைது செய்துவிட்டு அவரை விடுவித்துக் கொண்டு வரப்பட்டபாடு பிரமமப் பிரயத்தனமாய்ப் போய்விட்டதாம். வாஸுவைப்பற்றிக் கூட கொஞ்சம் ஜாக்கிரதையாகவே இருக்க வேண்டியிருக்கும்போலிருக்கிறது என்று






சூலையில்தான்சொன்னார் இவர் என்றேன். 'ஏன்?' என்ன காரணம் இதற்கெல்லாம்?' என்றாள். 'நானகூட 'இவரை' இதே கேள்வியைத்தான் கேட்டேன். அதென்னமோ யாருக்குமே ஒன்றும் புரியாத விஷயமாய் இருக்கிறது என்று பதில் சொல்லிவிட்டார்' என்றேன். வாஸ்தவமாகவே அவருக்கும் காரணம் இன்னதென்று சொல்லத் தெரியவில்லை. 'அப்படியானால் உங்களுக்கும், அப்படிப்பட்ட ஒரு ஆபத்து இருக்கிறதென்று சொல்லுங்கள்' என்றேன். 'இவரிடம்; 'ஏன் இருக்கக்கூடாது? அதோடு மாத்திரமில்லை. உன்னையும் அந்த ஆபத்து பாதித்தாலும் பாதிக்கலாம். என்னைக் கைது செய்யும்பொழுது எனக்கு உடந்தையாக இருந்தாய் என்று உன்மீதும் குற்றம் சாட்டப்படலாமல்லவா?' என்று பதில் சொன்னார். என்னமோ காலம் போகிறபோக்கைப் பார்த்தால் எதையும் நிச்சயமாகச் சொல்வதற்கில்லை.

விமலாவுக்கு முதலில் ஏதோ கொஞ்சம் குணம் தெரிகிற மாதிரி இருந்தது. ஆனால் அப்புறம் குணமே தெரியவில்லை. டாக்டர் இஞ்செக்ஷன் செய்துகொண்டு வருகிறார். என்ன பணம் இருந்து என்ன? நோய் நொடி இல்லாமல் இருப்பதற்குச் சமானம் வேறு எதுவும் இல்லை.

நான் சித்திரை மாதத்தில் அங்கு வரலாமென்றிருக்கிறேன். இவரும் ஒருமாதகாலம் நாட்டுப்புறத்தில் இருக்க வேண்டுமென்று பிரியப்படுகிறார். ஆனால் அதேசமயத்தில் ஒரு விஷயத்துக்கும் யோசிக்க வேண்டியதாயிருக்கிறது. நம்ம பக்கத்தில் கிஸான்கள் தொந்தரவு ரொம்பவும் அதிகமாயிற்றே. இப்பொழுது அங்கங்கே கலம்படுகிறபாட்டில் 'இவரை' எங்காவது கம்யூனிஸ்டு 'பிரச்னையில்' இணைத்துவிடப் போகிறார்களே என்ற பயம்தான். 'இவர்' அதெல்லாம் அப்படி ஒன்றுமே நேர்ந்துவிடாதென்கிறார். இருந்தாலும், வரவர பட்டணவாசம் ரொம்ப அலுப்பாய்த்தான் தெரிகிறது அம்மா! ஜன நெருக்கம், பண்டங்கள் அகப்படாத கஷ்டம், ஓயாத அலைச்சல், இங்கே கொஞ்சநாள் இருந்து பார்த்தால்தான் அதன் 'அருமை' தெரியும்.

இப்படிக்கு,

உன் அன்புள்ள, அலமு.



ஹிமாலயமலையில் பெய்யும் பனியின் அளவு, அதனால் ஏற்படும் விளைவுகள் முதலியவற்றை ஆராய்ச்சி செய்ய ஒரு கமிட்டி ஏற்பட்டுள்ளது. இதன் தலைவர் டாக்டர் சர்ச். சர்வதேசப்பனி ஆராய்ச்சிக் கமிஷன் தலைவரும் இவரே. இக்கோஷ்டியாரின் மகாநாடு சமீபத்தில் நடைபெற்றது.

# யு. எஸ். தென் துருவ ஆராய்ச்சி கோஷ்டி



அமெரிக்காவிலிருந்து கடல்மார்க்கமாக தென் துருவ ஆராய்ச்சிக்காக ஒரு கோஷ்டி சென்ற ஜனவரி மாதம் புறப்பட்டுளது. அட்மிரல் பயர்ட் இதை அழைத்துச்சென்றிருக்கிறார். ஐஸ் பாறைகள் ஆங்காங்கு மிதக்கும் பகுதியிடையே செல்லும் யு. எஸ். கப்பல்கள்.



ராஸ் கடல் பகுதியில் ஐஸ் நிறைந்த பகுதியில் கப்பல்கள் செல்லும் காட்சி.



(வலது)

மேற்படி ஆராய்ச்சிப் படையினர் குளிர் பாதுகாப்பு உடையோடு கடலில் புகுந்து செல்லும் பிரத்யேக உடுப்பு அணிந்த அமெரிக்கர். இது ரப்பரால் தயாரிக்கப்பட்டது. இத்தோடு நீந்தவும் முடியும்.



கடல் காவல் விமானம் இது. ஹெலிகாப்டர் என்று அழைக்கிறார்கள் இதை. ஐஸ் நிறைந்த பகுதிகளிலெல்லாம் ஸஞ்சரித்துவிட்டுக் கடைசியாகத் தளத்துக்கு வந்து சேர்ந்தபோது எடுத்த படம். கடலில் யு. எஸ். கப்பல்கள்.



தென் துருவ ஆராய்ச்சிக்காகச் சென்ற அமெரிக்க கடற்படை கோஷ்டியார் கடலில் வேட்டை ஆடிய போது கிடைத்த ஒரு வகை மீனை ஐஸ் நிறைந்த பகுதி வழியே கயிறு கட்டி இழுத்துச்செல்கின்றனர். எல்லா நிலைமைகளிலும் கடற்படை இயங்குவதற்கான வசதிகளைக் கண்டுகொள்ளும் பொருட்டே இவ்வாராய்ச்சியில் அமெரிக்கா இறங்கியிருக்கிறதாம்.




74

## அபிமன்யு திருமணம்

✱

தர்ம புத்திரரது நெற்றியில் காயத்தைக் கண்டதும் வீமன் கொதித்தெழுந்து, "இப்படி உம்மை வடுப்படுத்தியவனை, நாயைத் தடியால் அடிப்பது போல் கதையால் அடித்து வதஞ் செய்து விடுவேன்!" என்று கர்ஜித்தான். பாஞ்சாலி சொல்லி, அக்காரணத்தை அறிந்து கொண்ட வீமன் கதையைத் தூக்கி விட்டான், 'விராடனை மூளை சிதறப் புடைப்பேன்!' என்று: அர்ச்சுனனும் விழி சிவந்து வில்லைத் தூக்கிக் கொண்டு, "கௌரவர்களை முதுகு கண்ட பாணங்கள் இந்த அரசப் பதரின் சிரத்தைக் கொய்துவிடும்; இவ்வூரையும் கொளுத்தி விடும்!" என்று கூச்சலிட்டான்.

### பொறுமையும் சீற்றமும்

உடனே யுதிஷ்டிரர் அவ்விருவரையும் பார்த்து,

**ஒன்(று) உதவி செய்யினும் அவ்**
**உதவி மறவாமல்**
**பின்றையவர் செய்பிழை**
**பொறுத்திடுவர் பெரியோர்**

என்று புத்தி சொன்னார். விராடன் நடுநடுங்கி மறுபடியும் யுதிஷ்டிரர் காலில் விழுந்தான்.

அப்போதும் கோபம் அடங்காமல் வீமன், "அண்ணாவின் பொறுமையை என்னால் இன்று ஒப்புக்கொள்ளவே முடியாது! இத்தகைய பொறுமையுள்ளவர்கள் விஷ வீரியமில்லாத நீர்ப்பாம்புபோல் அவமதிக்கப் படுகிறார்கள்; ஹிம்ஸிக்கப்படுகிறார்கள். ஆகவே, இந்த விராடனையும் புத்திர பௌத்திரர்களோடு கீசகன் சென்ற இடத்திற்கு அனுப்பி விடுவோம்! கௌரவ ராஜ்யத்திற்குத் தர்மபுத்திரர் ராஜா ஆவதற்கு முன் இந்த விராட ராஜ்யத்திற்கு ராஜா ஆக வேண்டியது தான்!" என்றெல்லாம் பொரிந்து கொட்டினான்; சீறி விழுந்தான்.

யுதிஷ்டிரர் விராடனைத் தூக்கித் தழுவிக் கொண்டு,

**இந்நகரில் எய்தியபின்**
**எத்துயரும் எய்த(து)**
**எம்நகரி என்ன, நெடு**
**நாள் இனி(து,) இருந்தேம்!**
**செந்நெல் வயலூடு முது**
**சேல் உகளும் நாடா!**
**நின்னிலும் உயர்ந்த தமர்**
**நீ அறிய உண்டோ?**

[எய்தியபின்-அடைந்தபின். நெடுநாள்-நீண்ட காலம்; 'இங்கே' ஒரு வருஷம். இருந்தேம்-இருந்தோம். வயலூடு-வயல்களுக்கிடையே. முது-பழைய. சேல்—சேல்மீன்கள். உகளும்-தாவித்திரியும். நாடா-நாட்டையுடைய விராடனே, நின்னிலும்-உன்னைக் காட்டிலும் தமர்-பந்துக்கள்.]

என்று, அவன் தங்களுக்கு அஞ்ஞாத வாச காலத்தில் இருப்பிடம் கொடுத்து உதவியதைப் பெரிதும் பாராட்டினார்.

### பணிவும் நன்றியும்

விராடனும் பெரு மகிழ்ச்சியுடன் தர்மரை நோக்கி, "உம்மை இந்த ராஜ்யத்திற்கும் ராஜாவாக நானே பட்டாபிஷேகம் செய்து வைக்கிறேன்! அடியேன் உம்மை ராஜாவாக்கி குற்றேவல் செய்து பேறு பெறுவேன். தெய்வாதீனமாக நீங்கள் எல்லோரும் வனத்திலிருந்து க்ஷேமமாக இந்த ராஜ்யம் வந்து சேர்ந்தீர்கள்: என் பாக்கியவிசேஷம் அது. கெட்ட எண்ணமுள்ள துரியோதனாதிகளால் அறியப்படாமல் அஞ்ஞாத வாச கஷ்டத்தைக் கடந்து விட்டீர்கள். இந்த அரசும் அடியேனும் உங்களுடைய பொருள்கள்!" என்று சொன்னான்.

உத்தரன் அர்ச்சுனனைப் பெரிதும் புகழ்ந்து, "இவருடைய பலத்தினால்தான் உயிரோடு மீண்டும் பட்டணத்துக்கு வந்தேன்" என்றான். மேலும் அவன், "என் சகோதரி உத்தரை மாறு வேஷம் பூண்டிருந்த இந்த அர்ச்சுனரிடம் எவ்வளவோ பிரியமாக இருந்தாள். அவளை இவருக்கு மணஞ் செய்விப்போம்" என்றான்.

வீமனுக்கும் அர்ச்சுனனுக்கும் கோபம் தணிந்துவிட்டது;



சரணமடைந்த விராடனையும், விராடகுமாரனையும் நண்பராக அவர்களும் அங்கீகரித்தார்கள். உடனே விராடன் அர்ச்சுனனை நோக்கி, "தாங்கள் என் அருமைப் புதல்வி உத்தரையை மனைவியாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த ராஜ்யத் திருவையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று பிரார்த்தித்தான்.

### மருமகனல்ல, சம்பந்தி

அதற்கு அர்ச்சுனன், "நாங்கள் துரியோதனாதிகளின் ராஜ்யத்தைத் தான் ஏற்றுக் கொள்ளப் போகிறோம்! உம்முடைய பெண்மீது, எனக்கும் மகள் மீதுள்ள பாசம் உண்டு. அவளை மருமகளாக அங்கீகரிக்கிறேன். அவளுக்குக் குருவாக இருந்து ஆடல் பாடல் கற்பித்தேன். ஆகவே, உத்தரையை என் மகனும், கண்ணனுடைய தங்கை புத்திரனுமான அபிமன்யுவுக்கு மணஞ்செய்விப்போம்" என்று மறுமொழி கூறினான். அது கேட்ட விராடன், "அர்ச்சுனா! உன்னை மாப்பிள்ளையாக அடைய இயலாவிட்டாலும், சம்பந்தியாக அடையப் போகிறேனே, அது எனக்குப் பெரும் பேறுதான்! எல்லா விருப்பங்களும் எனக்கு நிறைவேறி விட்டன!" என்று கூறினான்.

### விருந்தினர்

உத்தரை கல்யாணத்திற்கு யுதிஷ்டிரர் அனுமதி கொடுத்ததும், அருச்சுனனும் விராட மன்னனும் பந்து மித்திரர்களுக்கெல்லாம் திருமணப் பத்திரிகை அனுப்பினார்கள். தூதர்கள் சென்று கண்ணனுக்கும் பத்திரிகை கொடுத்தார்கள். கண்ணன், தங்கை சுபத்திரையுடனும், அவள் மகனை அபிமன்யுவுடனும், பலராமர் முதலான யாதவத் தலைவர்களுடனும் விராட நகரம் வந்து சேர்ந்தான். பாண்டவர்கள் விராட மன்னனுடனும் மங்கள வாத்திய கோஷங்களுடனும் கண்ணனை எதிர் கொண்டழைத்தார்கள்.

பாண்டவர்கள் கண்ணன் அடிகளில் வணங்கி, 'தேவரீருடைய திருவருளால் பிரதிக்ஞையின்படி வனவாசமும் அஞ்ஞாதவாசமும் செய்து முடித்தோம். உம்மையே சரணமாக அடைந்த எங்களைக் காப்பாற்றும் பொறுப்பு எப்போதும் உம்முடையதே!" என்றார்கள். விராடனும் கண்ணனை வணங்கி அதிக சந்தோஷத்துடன் பூஜித்தான். பாஞ்சாலி கண்ணன் காலில் விழுந்து அழுதாள். கண்ணன் அவளைத் தூக்கி நிறுத்திக் கண்களைத் துடைத்து, "கல்யாணி! நீ விசனப்படாதே. உன் சபதம் நிறைவேறும்; உன்னுடைய ஹிருதய தாபம் விலகட்டும்" என்று அனுக்கிரகித்தார்.

மற்ற விருந்தாளிகளில் பாஞ்சால ராஜன், மாப்பிள்ளைகளான பாண்டவர்களையும், புதல்வியான பாஞ்சாலியையும் கண்டு பூரித்துப் போனான்.

**'அந்தோநெடுநாள் அகன்**
**கானில் அடைந்திர்' என்று**
**நொந்தோரை ஆற்றி நுவல்வான்**
**அந்நுதிகொள வேலான்.**

[நெடுநாள்-நீண்ட காலம். அகன் கான்-அகன்ற காட்டில். அடைந்திர்-அடைந்தீர். நுவல்வான் - சொல்லுவான். நுதிகொள் வேலான்-கூர்மையான வேலாயுதத்தையுடையவன்.]

### அறிமுகம்

தர்மபுத்திரரோ விராட மன்னனை விருந்தினர்களுக்கு அறிமுகம் செய்து,

**வேனில் சிலைவேள் விராடன்**
**புரம்மேய அன்றே,**
**கானில் திரிந்த பரிதாபம்**
**கழிந்த தென்றான்.**

[விராடன்புரம்—விராட நகரம். மேய அன்றே-மேவிய அன்றே. பரிதாபம்—இங்கே மிகுந்த தாபம்.]

பாஞ்சாலனும் அவனுடைய மகனை திருஷ்டத்யும்னனும் மற்ற விருந்தாளிகளும் விராடனுக்கு முகமன் கூறி, "தாங்கள் படைத்துணையாகவும் பாண்டவர்களுக்கு உதவ வேண்டும். இப்போது பாண்டவர்களின் உதவியுடன் கௌரவர்களின் முதுகு கண்ட தாங்கள் நாளை அந்த வஞ்சகர்களை நமனுலகுக்கே அனுப்பவும் உதவவேண்டும்" என்றார்கள்.

### திருமணம்

மழைக்காலத்தில் எண்ணிறந்த வெள்ளப் பெருக்குகள் தனித்தனியாகக் கடலை அடைவதுபோல் வந்தடைந்த விருந்தாளிகளெல்லாம் யுதிஷ்டிரருடைய சேனையை நிரப்புவதாகவும் வாக்களித்தார்கள். அவர்களுக்குத் தக்கபடி யெல்லாம் அதிதி பூஜை செய்தான் அர்ச்சுனன். இத்தகைய கோலாகலங்களுக்கிடையே பாண்டவராஜகுமாரனை அபிமன்யுவுக்கும், மத்ஸ்ய ராஜகுமாரியான உத்தரைக்கும் திருமணம் நிறைவேறியது.

**ஓமம் செய்நீயில் பொரிசிந்தலின்**
**உற்ற வாசந்**
**தூமம் புடைசூழ் புவிவேந்தர்**
**தொடையல் சூழக்**
**காமந்திரு மைத்துனர்க்(கு)**
**அன்பொ(டு) அக்**
**கன்னி தன்னை**
**மாமன்றல் அங்கே புரிவித்தனன்**
**மச்சர் கோமான்.**

[தூமம்-புகை. புடை-பக்கம் புவிவேந்தர்-ராஜ்யங்களின் அரசர்கள். தொடையல்-மாலை. காமன்திரு மைத்துனன்-அபிமன்யு. மாமன்றல்-சிறந்த விவாகம். மச்சர்கோமான்-விராடன்.]

* * * *

சுபத்ரா புத்திரனன அபிமன்யுவின் திருமணம் விராட நகரத்திலே நடந்துகொண்டிருக்கும்போது, அஸ்தினபுரத்தில் துரியோதனன் தன் சபையிலே, தான் தோற்றுவந்த



அவமானத்தைப் பொருதவனாகி, இன்னும் என்ன செய்யலாம் என்று ஆலோசனை செய்துகொண்டிருந்தான். "இனிமேல் அவர்களோடு சமாதானஞ் செய்துகொள்ள வேண்டியதுதான். அந்த வீரத்தை விராட நகர்ப் புறத்தே பார்த்துவிட்ட பின்பும், மறுபடியும் போர்க்களத்திலே விஜயனைச் சந்திக்கலாமா?" என்று துரோணர் முதலானவர்கள் புத்தி சொன்னார்கள். அது எரிகிற நெருப்பில் நெய் விழுந்ததுபோல் இருந்தது துரியோதன புத்திக்கு.

"அஞ்ஞாத வாசம் முடிவதற்கு முன்பே பாண்டவர்களைக் கண்டுபிடித்து விட்டோமே! இனி அவர்கள் மறுபடியும் வனவாசஞ் செய்யப் போகவேண்டியதுதானே!" என்று சீறினான் பாம்புக்கொடிலோன். "அதுதானில்லை: அஞ்ஞாத வாசகாலம் பூர்த்தியாகிவிட்டது என்பதைத் தெரிந்துகொண்டுதான் அர்ச்சுனன் வெளிப்பட்டுப் போர் புரிய வந்தான். நீ அந்தக் காலக் கணக்கைச் சரியாகப் பார்க்கவில்லை" என்று பதில் சொன்னார் பீஷ்மர்.

இதற்குள் துரியோதனன் அனுப்பிய தூதன் ஒருவன் விராடநகரம் சென்று யுதிஷ்டிரரை நோக்கி, "பதின்மூன்றும் ஆண்டு நிரம்புவதற்கு முன் உங்களை எங்கள் மன்னர்பிரான் கண்டு பிடித்துவிட்டார். நீங்கள் மறுபடியும் காட்டுக்குப் போக வேண்டும்!" என்றான். தர்மரோ சிரித்துக்கொண்டு, "காலம் நிரம்பிவிட்டது. உங்கள் காலமும் நெருங்கிவிட்டது! எங்களுக்கு இனிமேல் வெற்றிதான், மங்களம்தான்" என்றார்.



# ஊர்மிளாவின் கண்கள்



'ராஜன்'

சந்திரபாலனும், பவணேந்திரனும் ஒரே ரத்தத்தில் ஊறி வளர்ந்த சகோதரர்கள். சந்திரபாலன் குழலூதுவதில் மகா நிபுணன். உள்ளத்தில் குமுறியெழும் உணர்ச்சிகளை அவன் ஜீவன் ததும்ப இசைக்கும்பொழுது அதிலிருந்து வெளிப்படும் நாத வெள்ளத்தைப் பருகுபவர்களது சரீரங்கள் மயிர் கூச்செறியும்: விழிக்கடைகளிலிருந்து மளமளவென்று கண்ணீர் பெருகியோடும். பவானிதேவியின் சந்நிதியில் பயபக்தியுடன் அமர்ந்துகொண்டு குழலை இதழ்களில் பொருத்திக்கொண்டானானால் தன்னையும், உலகையும் மறந்து ஒரே நிலையாய் தேவகானம் செய்வான். குப்த சாம்ராஜ்யத்தின் அரும் பெரும் வித்வானான அவனுக்கு இணையாக குழல் வாசிக்கக் கூடியவர்கள் வேறெவருமில்லை.

சந்திரகுப்த விக்ரமாதித்தரின் சந்நிதானத்தில் சந்திரபாலன் தீங்குழலிசைக்கும்போது கால்களில் கட்டியுள்ள சதங்கைகள் 'ஜல் ஜல்' என்று சப்திக்க அழகிய பட்டாடை புனைந்து தேவலோக மங்கைபோல் இரத்தின கம்பளத்தின்மீது சுற்றிச் சுற்றி வந்து களிநடனம் புரிவாள் ஊர்மிளாதேவி. ஆ! குப்த சாம்ராஜ்யத்தின் இணையற்ற கட்டழகி அவள்.

தளதளவென்று மின்னும் தாவண்யமான மேனி; மோகனாகரமான வடிவம். அழகு ஊசலாடும் கரு விழிகளில் ஜொலித்த ஜோதி காண்போரின் கண்களை மங்கச் செய்தன. பளிங்குபோன்ற புரித்த கன்னங்களும், சிவந்த அதரங்களும் முத்துப்பற்களும் பருவத்தின் பக்குவத்தினால் அன்றலர்ந்த ரோஜா மலரை நிகர்த்து விளங்கின.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சக்கரவர்த்தியின் சபா மண்டபத்தில் ஊர்மிளாதேவியின் நாட்டியக் கச்சேரி நடைபெறும். அப்பொழுதெல்லாம் சந்திரபாலன் பலவிதமான அபூர்வ நாதங்களை எழுப்பிக் கொண்டிருப்பான். அதற்குத் தகுந்தாற்போல் நடனமாடுவாள் ஊர்மிளாதேவி. அதைக் காணத்

★

திரள் திரளான ஜனங்கள் சபையில் கூடியிருப்பார்கள். அனைவரும் கற்சிலைபோல் மெய் மறந்தவர்களாய் வீற்றிருப்பார்கள்.

சந்திரபாலன் புன்னாகவராளி ராகத்தை எடுத்துவிட்டானானால் சபையோர் பேச்சு மூச்சற்றுப் போவார்கள், சர்ப்பம்போல் நெளிந்து நெளிந்து ஆடுவாள் ஊர்மிளாதேவி.

சந்திரபாலன் தன்னையும் மறந்துவிடுவான். அவனது அதரங்களில் வீற்றிருக்கும் மூங்கிற் குழாயிலிருந்து கிளம்பும் அந்த ஜீவநாதத்திற்குத்தான் எத்தனை மகிமை! அதிலேயே லயித்துப் போனவனாய் ஒரேயடியாய் பொழிந்து தள்ளிவிடுவான்.

அந்த நாதத்தில் மயங்கிப் போகும் ஊர்மிளாதேவி அஞ்சனம் தோய்ந்த கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் பெருகியோட மெய் சிலிர்த்து தடாலென்று தரையின் மீது வீழ்ந்துவிடுவாள். அப்பொழுதுகூடத் தனது இசையை நிறுத்தமாட்டான் சந்திரபாலன்.

விக்கிரமாதித்த சக்கரவர்த்தி ஆனந்த பரவசமடைவார். 'அபாரம்! சந்திரபாலா! அபாரம்! ஆகா! என்ன இனிமை! உன் கானம் எங்களை ஆனந்த வாரிதியில் திளைக்கச் செய்துவிட்டது. உன்னைப்போல் வேணுகானம் செய்ய யாராலும் முடியாது" என்று கூறிவிட்டு அவனுக்கு ஏராளமான பரிசுகளை அளிப்பார்.

இத்தகைய நிலையில்தான் சந்திரபாலன் ஊர்மிளாதேவியைத் தன் முழு மனதுடன் காதலித்தான்.

ஒருநாள் அஸ்தமிக்கும் நேரம். வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. காற்று விர்ரென்று வீசிக்கொண்டிருந்தது. சந்திரபாலன் தனது தோட்டத்தில் ஒரு ஏகாந்தமான இடத்தில் அமர்ந்து குழலிசைத்துக்கொண்டிருந்தான். அப்பொழுது வானத்தில் ஒரு பெரிய இடியும், மின்னலும் தோன்றி மறைந்தன. அவ்வளவுதான்!

ஆஹா! எத்தகைய கோர சம்பவம் நேர்ந்துவிட்டது...! சந்திரபாலனின் வாழ்க்கையேயல்லவோ அஸ்தமித்துப் போய்விட்டது...!

தன்னை மறந்தவனாகக் குழலிசைத்துக்கொண்டிருந்த சந்திரபாலன் 'ஆ' வென்று அலறிக் கொண்டே கீழே சாய்ந்தான்.

அவனது அலறலைக் கேட்டு பவணேந்திரன் ஓடிவந்தான். பதைபதைப்புடன் சகோதரனைத் தூக்கிச்சென்று கட்டிலில் கிடத்தி அவனது முகத்தில் குளிர்ந்த நீரை அடித்தான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் சந்திரபாலன் கண்களைத் திறந்தான். ஆனால், அதில் மிளிர்ந்து கொண்டிருந்த கறுப்பு விழிகளையே காணோம். எல்லாம் ஒரே வெண்மை ஜெகஜ் ஜோதியுடன் தகதகவென்று பிரகாசித்துக் கொண்டிருந்த அவனது அழகிய கண்கள் பார்வையிழந்திருந்தன.

"பவணேந்திரா! என்னடா இது! எங்கும் ஒரே அந்தகாரம் சூழ்ந்து கிடக்கிறதேடா!" என்று அலறினான் சந்திரபாலன். பவணேந்திரனுக்குப் பகீரென்றது. 'அண்ணா! என்ன சொல்லுகிறாய்? எனக்கொன்றும் விளங்கவில்லையே!" என்றான் கலவரத்துடன்.

"ஐயோ! கண் தெரியவில்லையடா. எங்கு பார்த்தாலும் ஒரே இருளாயிருக்கிறதே! மின்னல் என் கண்களைப் பறித்துக்கொண்டு போய்விட்டது. இனிமேல் வெளியுலகத்தை எப்படிப் பார்ப்பேன்? என்னை அந்தகன் என்று உலகம் பழிக்குமே!" என்று புலம்பினான் சந்திரபாலன்.

பவணேந்திரன் உள்ளம் சோகத்தால் வெம்பியது. உடலெல்லாம் துடித்தது. தாங்கமுடியாத வேதனையின் பாரம் அவனது கன்களில் கண்ணீராகப் பெருகி வழிந்தது. "ஐயோ! ஒருபாவமு

மறியாத அண்ணன் குருடனாய்ப் போய்விட்டானே! கண் போனபின் எத்தகைய கலைச்செல்வம் இருந்து என்ன பயன்?" என்று எண்ணுந்தோறெல்லாம் எண்ணி நெஞ்சம் துடித்தான் அவன்.

அன்று முதல் பவனன் தன் சகோதரனை கண் போல் பாவித்துப் போற்றி வரலானான். சந்திரபாலன் மிகுந்த வேதனையடைந்தான். இப்பொழுதெல்லாம் அவன் முன்போலக் குழலூதுவதில்லை. ராஜ சபைக்குச் செல்வதையும் நிறுத்திக்கொண்டான். அவனது நிலைமையைக் கண்டு யாவரும் அனுதாபமடைந்தனர்.

இத்தகைய நிலைமையிலும் சந்திரபாலன் ஊர்மிளாதேவியை மறக்கவில்லை. ஆம்! அவனால் அவளை மறக்கமுடியவில்லை. ஆனால் அவள் தான் அவனை மறந்துவிட்டாள்.

சந்திரபாலன் அந்தகனானது முதல் ஊர்மிளா தேவி அவனை அலட்சியம் செய்யத் தொடங்கிவிட்டாள். அரசனது ஆஸ்தானத்தில் ஜீவியசந்திரன் என்று யாழ் இசைக்கும் இளைஞன் ஒருவன் இருந்தான். கட்டழகு ததும்பும் வாலிபன் அவன். ஊர்மிளாதேவி அவனைக்காதலிக்கலானாள்.

இந்த விஷயங்களையெல்லாம் சகோதரனிடமிருந்து அறிந்துகொண்ட சந்திரபாலன் தீராத் துயரமடைந்தான். "சீ! என்ன உலகம்! என்ன வாழ்க்கை! மனிதன் உன்னத ஸ்தானத்திலிருந்தால்தான் அவனுக்கு மதிப்பும் கௌரவமும். அந்தராத்மாவில் உள்ள உண்மை ரூபத்தைக்காண முடியாமல் வெறும் வெளித்தோற்றத்தைக் கண்டு மனிதன் மயக்கமடைகிறான். அந்தக் காலத்தில் என்னை உள்ளன்புடன் நேசித்த ஊர்மிளாதேவி கூட, இன்று என்னை வெறுக்கலானாளே!" என்று பலவாறாய் எண்ணி மனம் வருந்தினான்.

இரண்டு வருடங்கள் கழிந்துவிட்டன. அன்றிரவு நகரத்திலிருந்து திரும்பிவந்த பவனன் ஒரு விசேஷ சமாசாரம் கொண்டு வந்தான். "அண்ணா! நாளை அரசரது சஷ்டியப்த பூர்த்தி கொண்டாடப் போகிறார்கள். அதற்காக நடத்தப்படும் கானப் போட்டியில் சிறந்த வித்வானுக்கு ஊர்மிளா தேவி மாலையிடப் போகிறாளாம். அண்ணா உன்னிலும் மேலான வித்வான் எங்குமில்லை. ஆகையால் ஊர்மிளா தேவி கட்டாயம் உனக்கே மாலையிடுவாள். உன் உள்ளமும் சாந்தமடையும்" என்றான்.

சந்திரபாலன் முதலில் இதற்கு சம்மதிக்கவில்லை. "பவனேந்திரா! வேண்டாம். என்னைப்பார்க்கும் யாராவது என்னை அந்தகனென்று கூறிவிடப் போகிறார்களென்று நான் வீட்டைவிட்டுக் கூட அசையாமலிருக்கிறேன். இப்பொழுது என்னை ராஜசபைக்குப் போகச் சொல்லுகிறாயே!" என்றான்.

கடைசியாக பவனேந்திரனின் வற்புறுத்தலின்பேரில் ராஜசபைக்குச் செல்ல உடம்பட்டான் சந்திரபாலன். அவனுக்கென்று தனியாக ஒரு பல்லக்கு அமர்த்தி அதில் அவனை ராஜசபைக்கு அனுப்பினான் இளையவன்.

ஆஸ்தான மண்டபம் அன்று வெகு அற்புதமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. தேஜோமயமான தீபங்கள் சுடர்விட்டுப் பிரகாசித்தன. சிம்மாசனத்தில் கம்பீரமாய் வீற்றிருந்த சக்கரவர்த்தியின் வலது புறம் இரண்டு மந்திரிகளும், இடதுபுறம் இளவரசர்களான கோவிந்த குப்தரும், குமார குப்தரும், மருமகனான ருத்ரசேனரும் அமர்ந்திருந்தனர். அந்த மண்டபத்தில் வரிசையாக இடப்பட்டிருந்த அழகிய ஆசனங்களில் நவரத்னங்களான காளிதாசர், அமர சிம்மர், வராக மீரர், தன்வந்தரி, முதலிய பெரியோர்கள் வீற்றிருந்தார்கள். அவர்களுக்கிடையே நீண்ட தாடியையுடைய சீன யாத்திரிகரான பாகியனும் அமர்ந்திருந்தார். அந்தப்புர ஸ்திரீகளுக்கென்று பிரத்யேக இடம் அமைக்கப்பட்டிருந்தது.

ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடியிருந்த சபையின் முன்பு ஒவ்வொருவராக வந்து தமது திறமையைக் காட்டிச் சென்றனர். ஜீவிய சந்திரனும் யாழ் இசைத்துச் சென்றான். அவனுக்குத் தான் ஊர்மிளா தேவி மாலையிடப் போகிறாள் என்று அனைவரும் எண்ணியிருந்த சமயத்தில் சபை நடுவே வந்து உட்கார்ந்து கொண்டான் சந்திரபாலன். உடனே சபையோர் தடதடவென்று கரங்களைத் தட்டி தங்கள் உற்சாகத்தை வெளியிட்டார்கள்.

பவாளி தேவியை மனதிலிருத்திக்கொண்டு குழலை அதரங்களில் பொருத்திக்கொண்டான் சந்திரபாலன். அவனது குழலிலிருந்து வெளிப்பட்டது தேவாமிருதமோ? ஆகா! இதென்ன இது! கண்களையிழந்த இந்த அந்தகன் இப்படிகான ரஸத்தைப்பொழிகிறான்! சபையோர் மெய்மறந்து உட்கார்ந்திருந்தார்கள்.

ஊர்மிளா தேவியை அடையப் போகிறோம் என்ற உற்சாகத்தினாலோ அல்லது இதுதான் தனது கடைசி வாசிப்பு என்ற எண்ணத்தினாலோ ஒரேயடியாய் தனது வாசிப்பின் உச்சஸ்தானத்தை எட்டிப் பிடித்துவிட்டான். அதற்கு மேல் நன்றாக அவனால் வாசிக்கவே முடியாது. சபையோர்களின் கண்களில் ஆனந்த பாஷ்பம் பொங்கிக் கொண்டிருந்தது.

சந்திரகுப்தரின் மெய் சிலிர்த்தது. விழிக்கடைகளிலிருந்து மளமளவென்று நீர் பெருகியோட சந்திரபாலனை மார்புறத்தழுவிக் கொண்டார். சபையில் ஒரே குதூஹலம்.

படபடப்பு அடங்கி பேசும் சக்தி வந்ததும் சக்கரவர்த்தி சந்திரபாலா! அற்புதம்! மகா அற்புதம்! நீ தெய்வாம்சம் பொருந்தியவன். என் ஆஸ்தானத்தில் எத்தனையோ பேர் கானம் செய்யக் கேட்டிருக்கிறேன். ஆயினும் உனக்கிணையுள்ளவனை நான் கண்டதேயில்லை. உனக்கு எதைக் கொடுத்தாலும் தகும். இந்தச் சபையோரறிய ஊர்மிளா தேவியை உனக்கு .....!" என்று கூறிமுடிப்பதற்குள்

"மண்டலாதிபா! சற்றுப் பொறுங்கள். அவர் எத்தகைய மேதாவியாயிருந்தென்ன? கண்ணிழந்த அந்தகர்தானே! தனது அழகு இளமை இவைகளை ஒரு குருடருக்கு அர்ப்பணம் செய்ய ஊர்மிளாதேவி துணியமாட்டாள். என்னை பலவந்தப்படுத்தாதீர்கள்' என்று ஒரு குரல் கேட்டு யாவரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள். ஊர்மிளா தேவியின் வாயிலிருந்துதான் அந்தசொற்கள் வெளிவந்தன.

"ஊர்மிளா! என்ன வார்த்தை சொல்லுகிறாய்? இத்தெய்வக் குழலோனை அடைய நீ பூர்வத்தில் மிகுந்த தவம் செய்திருக்க வேண்டும். நீயா இவ்விதம் பேசுகிறாய்?" என்று கேட்டார் அரசர்.



"சக்கரவர்த்தி! என்னை மன்னிக்கவேண்டும். என் உள்ளம் அவரது கானத்திற்கு மயங்கி அடிமைப்பட்டது வாஸ்தவந்தான்: ஆனால் அவரது ஒளியற்ற முகத்தின் மீது எனக்குக் காதலே ஏற்படவில்லை. என்னை மேலும் நிர்ப்பந்திக்காதீர்கள்"

இச்சொற்கள் கூரிய ஈட்டியைப் போல் சந்திரபாலனின் இருதயத்தைத் துளைத்தெடுத்தது "அரசே வேண்டாம்......!" என்று கூறிக்கொண்டே தூள் தூளாக்கப்பட்ட இருதயத்துடன் ராஜசபையை விட்டு வெளியேறினான்.

சகோதரனின் வரவை எதிர்பார்த்தவனாய் நின்றுகொண்டிருந்தான் பவனேந்திரன். இறங்கிய முகத்துடன் பல்லக்கினின்றும் வெளிப்பட்ட சந்திரபாலனைக் கண்ட பவனேந்திரனின் முகம் பதற்றமுற்றது.

"அண்ணா! போன காரியம் என்னவாயிற்று?" மனக் கலக்கமுடன் கேட்டான் பவனன்.

சந்திரபாலன் பதிலே பேசவில்லை. அவனது குருட்டு விழிகளிலிருந்து மட்டும் ஏனோ நீர்முத்துகள் உதிர்ந்து கொண்டிருந்தன.

"ஆ! அண்ணா! இதென்ன! ஒரு நாளும் கலங்கியறியாத உன் கண்களிலிருந்து ஏன் இப்படி நீர் வழிகிறது? என்ன நேர்ந்தது?" என்று பதறிப் போய் கேட்டான் பவனேந்திரன்.

'பவனேந்திரா! உன் பேச்சைக்கேட்டு ராஜசபைக்குப் போனேன். ஊர்மிளா தேவி என்னைக் குருடனென்று அவமதித்து என் இருதயத்தைப் புண்படுத்திவிட்டாள். பரிகரிக்க முடியாத அவமானம் நேர்ந்துவிட்டது. இனிமேல் நான் உயிர் வாழ்ந்து பயனில்லை" என்று வெறுப்பு தொனிக்க பெருமூச்செறிந்தான்.

"ஆகா! அவ்விதமா நேர்ந்தது?" என்று துக்கித்தான்பவனேந்திரன்.

அன்றிரவு சகோதரர்கள் இருவரும் தூங்கவேயில்லை: துயரத்தினால் குமுறிக்கொண்டிருந்தார்கள். அவமானம் தாங்கமாட்டாமல் அன்றிரவே பரமனடி சேர்ந்துவிட்டான் சந்திரபாலன்.

பவனேந்திரன் அடைந்த துயரத்திற்களவேயில்லை. சகோதரனின் உடலைக் கட்டிக் கொண்டு தாரை தாரையாகக் கண்ணீருகுத்தான்.

சன்நதிக்கரையில் சந்திரபாலனுக்கு சிதையடுக்கப்பட்டது. நீர் மல்கும் கண்களுடன் பிரேதத்தின் மீது நெருப்பைக்கொட்டியபோது அவனது உள்ளம் திகுதிகுவென்று எரிந்துகொண்டிருந்தது.

'ஐயோ! அண்ணா! உலகம் போற்றிய உன் விதி, இப்படியா முடியவேண்டும். உடன் பிறப்பென்பது இந்த நெருப்பில் வெந்து இன்றுடன் சாம்பலாய் போய்விட்டதே! எங்கு தேடினால் உன்னைப் போன்ற அண்ணன் எனக்குக் கிடைப்பான்? ஆகா! உன்னை இந்த நிலைக்குள்ளாக்கிய அந்தப் பாதகியின் அங்கங்களையும் பதறச் செய்கிறேன். அவளைப் பழிக்குப் பழி வாங்கி உன் இருதயத்தைக் குளிரச் செய்கிறேன்.' என்று அளவிலாத வேதனையுடன் நெஞ்சம் பொருமினான்.

* * * *

சந்திரபாலன் இறந்துபோய் பதினைந்து தினங்கள் கழிந்துவிட்டன. அன்றும் வெள்ளிக்கிழமை. அரசரது சபா மண்டபத்தில் ஏராளமான ஜனங்கள் குழுமி இருந்தனர். ஜீவிய சந்திரன் யாழ் இசைக்க ஊர்மிளாதேவி நாட்டியமாடிக் கொண்டிருந்தாள்.

அச்சமயத்தில் ஒரு சேவகன் அரசரிடம் வந்து வணங்கி 'மகராஜ்! பவனேந்திரர் தங்களைப் பார்க்கவேண்டுமாம்' என்று கூறினான்.

"அவனை வரச் சொல்" என்றார் அரசர்.

பவனேந்திரன் அரசரிடம் சென்று கைகூப்பி அவரை வணங்கினான். "ராஜேச்வரா! நமஸ்காரம்!" என்றான்.

அவனைக் கண்டவுடன் ஜீவிய சந்திரன் யாழ் வாசிப்பதை நிறுத்திவிட்டான். ஊர்மிளாதேவி ஒரு ஆசனத்தில் சென்று அமர்ந்து கொண்டாள்.

பவனேந்திரனது முகம் மிகவும் பொலிவிழந்து காணப்பட்டது. தாங்கமுடியாத துயரத்தின்சாயை அவனது கண்களில் படர்ந்திருந்தது. அவனது முகத்தில் சிரிப்புக்குறியே தென்படவில்லை.



"பவனேந்திரா! என்ன சமாசாரம்?" என்று கேட்டார் அரசர்.

"மண்டலாதிபா! நீக்கமுடியாத ஒரு பெருந் தவறு நேர்ந்துவிட்டது" என்று அளவற்ற சஞ்சலத்துடன் மொழிந்தான் அவன்.

"தவறு நேர்ந்து விட்டதா? என்ன தவறு?"

பவனேந்திரன் கைகளைக் கட்டிக் கொண்டு கம்பீரமாக நின்றான். 'ஆம்! தவறு தான் நேர்ந்துவிட்டது. ராஜேந்திரா! அது ஒரு

அற்பசொற்பமான தவறில்லை. மகா மண்டலாதிபதியாகிய தங்களது சாம்ராஜ்யத்தில் ஈடும்இணையுமற்ற தெய்வப் புலமைவாய்ந்த எனது சகோதரன் மனமுடைந்து இவ்வுலகைவிட்டு அகன்றதற்கு காரணமாயிருந்தது. தன் மனதிலும் பிறவுயிர்க்கு தீங்கு நினைத்தறியாத அந்த உத்தமன் உள்ளத்தைப் புண்படுத்தி அவனது உயிரை கவர்ந்துவிட்டது. அதற்கு ஏதேனும் பரிகாரம் உண்டா?"

ஒருவரும் வாய்திறக்கவில்லை. பவனேந்திரன் தொடர்ந்து கூறலானான். "பூபேந்திரா! பதினைந்து தினங்களுக்கு முன்பு நடந்த கானபோட்டியில் எனது சகோதரன் சந்திரபாலன் பரிசுக்குரியவனாக இருந்தான். ஆயினும் அவன் அந்தகன் என்ற காரணத்தினால் அவனையாவரும் புறக்கணித்தீர்கள். ஊர்மிளா தேவியும் அத்தகைய சுத்த வீரனுக்கு மாலையிட மறுத்ததுமின்றி எனது சகோதரனை—உலகம் மெச்சிய ஒப்பற்ற கவிதா ரத்தினத்தை—குருடன் என்று அவமதித்து விட்டாள்; அப்படி அவமதித்த அவளது நாவைத்தாங்கள் தயவுமே துண்டித்திருக்க வேண்டாமா? கவிரத்ன காளிதாசரே! தாங்களும் அதைப்பார்த்துக் கொண்டு வாளாகத்தானே இருந்தீர்கள்? உயிரைக்காட்டிலும் மானத்தைப் பெரிதாக மதித்த அவன் பழிக்கு அஞ்சி உயிரைவிட்டு விட்டான். இருக்கட்டும்! சக்கரவர்த்தி! என் அண்ணனுக்கு அளிக்கப்பட வேண்டிய முதற்பரிசு இன்னும் அளிக்கப்படவில்லை. அதைப் பெற்றுப்போவதற்கே நான் வந்துளேன். அவனது சார்பாக நான் கேட்கும் பரிசை எனக்கு அளிப்பீர்களா?" என்று படபடப்புடன் கேட்டான்.

அரசர் உட்பட யாவரும் திடுக்கிட்டனர்.

'பவனேந்திரா! நீ கேட்கும் பரிசைக் கேள், தருகிறேன்" என்றார் சந்திரகுப்தர். பவனன் கேட்கும் பரிசையளித்தால் அவனது சிதறிய நெஞ்சத்திற்கு ஆறுதலாயிருக்கும். அவனது சுபத்திரமும் தனியும் என்று எண்ணியே அவர் அவ்விதம் கூறினார்.

"ராஜேச்வரா! நான் கேட்கும் பரிசைக் கண்டிப்பாகத் தருவீர்களா?"

"பவனேந்திரா! என் வார்த்தையில் கூடவா உனக்குச் சந்தேகம்? நீ எது கேட்டாலும் தருகிறேன் கேள்"

அப்படியானால் இதோ எதிரே உட்கார்ந்திருக்கும் கட்டழகி ஊர்மிளாதேவியின் கண்களைப் பிடுங்கி என்னிடம் தாருங்கள். அதுதான் நான் விரும்பும் பரிசு!'

"ஆ! என்ன சொல்கிறாய்? அடே பாவி! சண்டாளா?" என்று அலறினார் சந்திரகுப்தர்.

'கொடூரம்! கொடூரம்!' என்று ஆர்ப்பரித்தனர் சபையோர். ஊர்மிளாதேவி நடுநடுங்கினாள்.

பவனேந்திரன் ஒரு பேய்ச்சிரிப்பு சிரித்தான். அவனது முகம் ஒரு பயங்கர மிருகம்போல் மாறி இருந்தது.

ஆம்! கொடூரந்தான்! ஆம்! கொடூரந்தான்! உலகம் போற்றிய உத்தம வித்வத் சிரோன்மணியை மனம் உடையச் செய்து காடாந்தகார நித்திரையிலாழ்த்தியது கொடூரமில்லையா! பாடலிபுத்ர நகர வாசிகள் அனைவரும் கூடிய மகத்தான மிகப் பெரிய சபையின் முன்பு எனதாருயிர் அண்ணனைக் குருடனென்று அவமதித்து அவனது இருதயத்தைத் துடிக்கச் செய்தது கொடூரமில்லையா? விஷப்பாம்பினை யொத்த இருதயம் படைத்த இவளது நீல நயனங்களைப் பிடுங்கித் தாருங்கள்" என்று ஆவேசமுடன் கத்தினான்.

அரசபெருமான் திகைப்படைந்தார். என்ன செய்வதென்று தோன்றவில்லை. "பவனேந்திரா! உன்னையே மறந்து வார்த்தைகளை கொட்டாதே! யோசித்துக் கூறு. உன் அண்ணனே மறைந்துபோய் விட்டான். உலகமறியாத ஒரு இளம் சிறுமியின் வாழ்க்கையைத் தீராத் துயரமாக்கினால் அவன் திரும்பி வந்துவிடப்போகிறானா? வேண்டாம். அவளைப் பாழ்படுத்தாதே! நிதானித்துக் கூறு"

"அரசே! நிதானித்துக் கூறுவதற்கு இதில் ஒன்றுமேயில்லை. கொடுப்பதற்கு இஷ்டமானால் கொடுங்கள். இல்லையேல் வெளியே செல்லுகிறேன்."

அனைவரது கண்களிலும் நீர் பொங்கி நின்றது. சந்திர குப்தரின் சத்தியத்தைக் காப்பாற்றுவதற்காக ஊர்மிளாதேவியின் கரு விழிகள் தோண்டி எடுக்கப்பட்டன. அப்பொழுது அவள் அலறின அலறல் கல் நெஞ்சினனான பவனேந்திரனையும் கூடக் கலங்கச் செய்தது அதன்பிறகு அவள் வெகுநேரம் உயிர் வாழ்ந்திருக்கவில்லை.

ஊர்மிளாதேவியின் கண்களைக் கையிலெடுத்துக் கொண்டு வீட்டையடைந்தான் பவனேந்திரன். ஊர்மிளாதேவியின் உயிர் போய்க் கொண்டிருந்தது. மரண வேதனையடைந்துகொண்டிருந்தாள் அவள். கோரமாகத்தோண்டியெடுக்கப்பட்ட கருவிழிகள் அகன்ற கறும் ரத்தம் படிந்த விழிகளைக் கண்ட பவனேந்திரனின் மனம் சஞ்சலத்தினால் துடித்தது. அவனது கண்கள் நீர் ததும்பி நின்றன.

"தேவி! பவனேந்திரன் வந்திருக்கிறேன்" என்று துக்கம் நெஞ்சையடைக்கக் கூறினான். அவளது நிலைமையைக் கண்டவுடன் அவனது சோகம் எல்லை மீறிப் போய்விட்டது.

ஊர்மிளாதேவி குரலில் அளவற்ற வேதனை தொனிக்கப் பெருமூச்செறிந்தவளாய், "பவனேந்திரரே! இப்பொழுதாவது உமது ஆத்மா சாந்தியடைந்ததா? உமது க்ஷாத்திரம் அடங்கிற்றா? உமது சகோதரர் சந்திரபாலர் நற்கதி அடைந்திருப்பாரா?" என்று சாவதானமாகக் கேட்ட வார்த்தைகள் அவனது இருதயத்தை துளைத்தெடுத்தன. அவனது உடலெல்லாம் சிலிர்த்தது. சற்று நேரத்திற்கு முன்பு நிகழ்ந்த கொடிய சம்பவம் அவனது மனக்கண் முன்னால் நின்றது.

தழு தழுத்த குரலில், "தேவி...! தேவி....! மிகுந்த பாவி நான்...! எனது அந்தகச் சகோதரனின் அகால மரணம் என்னைக் கொடிய இதயமுடையவனாகச் செய்துவிட்டது. உன் கட்டழகெல்லாம் பாழாகும்படி உன் நேத்திரங்களில் இரத்தம் பொங்கச் செய்துவிட்டேன். மன்னிக்கமுடியாத அநீதியை உனக்கு இழைத்துவிட்டேனம்மா! தேவி! எங்கு சென்று இந்தப் பாவத்தைத் தொலைப்பேன்? என் உள்ளம் கொந்தளிக்கிறதே," என்றுகண்ணீருகுத்துக் கொண்டு நின்றான்.

ஊர்மிளாதேவி மடிந்துவிட்டாள். அவளது அந்திமக்கிரியைகளெல்லாம் பவனேந்திரனால் செய்யப்பட்டன. அன்று அவ்வூரைவிட்டு வெளிக் கிளம்பிய பவனேந்திரன் அதற்குப் பிறகு பாடலிபுத்திரத்தின்பக்கமே தலைகாட்டவில்லை



# மந்திரமுரளி

'ஸாரதி'

சுதர்சனம் ரொம்பவும் ஏழைப்பையன். தனது இளம் பிராயத்திலே தன் தாயை இழந்தான். அவ தந்தை அவனைவளர்க்க அரும்பாடு பட்டார். இருந்த சொத்துக்களை விற்று விற்று, அவனைப் படிக்க வைத்தார். துர்ப்பாக்கிய வசமாக அவரும் அதிக நோயுற்றார். இரண்டு காணி நிலம் அவரிடம் இருந்தது. அதை ஒரு பணக்காரனிடம் அடகு வைத்தார். எவ்வளவோ பணச் செலவு; எத்தனையோ வைத்தியங்கள்... எல்லாம் பாழாயின!...அவர் வியாதி தெளிய வழியில்லை. சுதர்சனத்தை அநாதையாயும், கடன்காரனையும் விட்டு விட்டு இறந்துவிட்டார்.

தந்தையையும் பறிகொடுத்த சுதர்சனம் திண்டாடி நின்றான். நிலத்தை அடமானமாக வாங்கிக் கொண்ட அந்தப் பணக்காரனும் மோசடி செய்துவிட்டான். கபடமற்ற சுதர்சனம் தன்னைக் கடவுளிடம் ஒப்படைத்துக்கொண்டு அவ்வூரைவிட்டுப் புறப்பட்டான்.

நல்ல கோடை; தாங்கமுடியாத வெயில்; காடு! அப்படிப்பட்ட ஓர் அடவியைக் கடந்து கொண்டிருந்தான் சுதர்சனம்.

உச்சி வேளை. பசியும், தாகமும் அவனைச் சித்திரவதை செய்தன. சுற்றுமுற்றும் பார்த்தான். கானலைத்தவிர அவனால்வேறெதையும் காண முடியவில்லை. கல்லுங்கரடும், முள்ளும் புல்லும் அவன் மலர் பாதங்களைச் சிதைத்தன. நொண்டி நொண்டி நடந்துகொண்டே மலையடிவாரத்திற்கு வந்தான்.

அங்கே ஒரு பொறை விழுந்த பெரிய மாமரம். அதன் உச்சாணிக்கிளையில் இரண்டு அணில் கடித்த மாங்கனிகள் காற்றுபட்டு ஆடிக்கொண்டிருந்தன.

சுதர்சனம் அதை நோக்கினான். நாவில் ஜலம் ஊறிற்று. அணைத்துப் பிடிக்கமுடியாத கிளைகள்; அதிக உயரமான மரம். பதினைந்து வயதுகூட நிறையாத சிறுவன் அதைப் பறிப்பதெப்படி? எடுத்தான், கற்களை கொடுத்தான், அடிமேல் அடி. கற்கள் சரமாரியாக 'விர், விர்!' என்று பறந்தன. பகீரத பிரயத்தனத்திற்கப்பால் அவ்விரண்டு செங்காய்களும் தரையில் விழுந்தன.

சுதர்சனம் அவற்றைத் தட்டித் துடைத்துக் கடித்து புசிக்க முயலும் சமயம் ஒரு சாமியார் அங்கு வந்தார்.

"குழந்தாய்! எனக்கும் ஒரு மாங்கனி கொடு; பசி அதிகமாக இருக்கிறது; மூன்று தினங்களாக ஒரு பிடி சோறு கூட கிடைக்கவில்லை!" என்று கெஞ்சிக் கேட்டார்.

"அட பகவானே! நான்தான் பரம தரித்திரன் என்றால்,...என்னைவிட,...?... (பெருமூச்செறிந்து விட்டு) சரி! ஆளுக்கு ஒன்றாய்த் தின்று ஆற்றுவோம் பசியை, வாருங்கள்!" என்று கூறிக் கொண்டே அம்மாங்கனிகளில் பெரியதொன்றை அம்முனிவரிடம் கொடுத்தான் சுதர்சனம்.



தபோதனர் அகமகிழ்ந்தார்! அவனுடைய பதறாத உள்ளத்தைக் கண்டு பரிவு கொண்டு "கண்ணே! உனது ஈகைத்தன்மை எம்மை இன்புறுத்திவிட்டது. கனி கொடுத்து எமது பசிப்பிணியைக் களைந்த உனக்குக் கைமாறாக இந்த வேய்ங்குழலைத்தருகின்றோம். எதை அடைய வேண்டும் என்று எண்ணுகிறாயோ, அதை இதனை ஊதிய மாத்திரத்தில் பெறலாம். இதோ, பெற்றுக்கொள்!" என்று ஒரு புல்லாங்குழலை அவனிடம் கொடுத்தார்.

"சுவாமி! பிரதிபல

னைக் கருதி செய்யும் தர்மம் தர்மமாகாது. எனக்கு இந்த முரளி தேவை இல்லை. தயை கூர்ந்து தாங்களே எடுத்துக்கொள்ளுங்கள் !'' என்றான் சுதர்சனம்.

தவசிரேஷ்டர் குறுநகை செய்துவிட்டு, "புத்ரா! புறக்கணிக்காதே, பெற்றுக்கொள்! சுகித்திருக்கக் கடவாய்!" என்று சொல்லிவிட்டு மறைந்தார்.



பொழுதேறிக்கொண்டே போயிற்று. சுதர்சனத்தினுடைய பசி தாகங்களெல்லாம் அகன்றன. பரீக்ஷார்த்தமாக அவன் அந்தப் புல்லாங்குழலைத் தன் இதழ்களில் வைத்து ஊதினான்...அந்த மாதுர்யமான வேணுகானம் மலைத்தொடர்களை எதிரொலிக்கச் செய்தது. ஓசை நின்றதுதான் தாமதம்!... இரண்டு கந்தர்வச் சிறுமிகள் சுதர்சனத்தின் முன் வந்து வணங்கி, "ஐயா, எமக்கு இடும் கட்டளை யாது?..." என்று கேட்டார்கள்.

அந்த அற்புதக் காட்சியை சுதர்சனத்தால் நம்பவே முடியவில்லை. எனவே, கண்களைப்பிசைந்து, பிசைந்து கொண்டு அவர்களை ஏற இறங்கப்பார்த்தான். எதையோ நினைத்துக் கொண்டு மீண்டுமொருமுறை குழலிசைத்தான். மற்றுமிரண்டு தேவகன்னிகள் பொன்னும் பொருளும், ஊனும் உடைகளும் கொண்டுவந்து அவனுக்குக் கொடுத்தார்கள்.

சுதர்சனம் மட்டற்ற மகிழ்வோடு அதனை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு விடை கொடுத்தான். அவன் சோகதாபங்கள் ஒழிந்தன. அந்த ஆடை ஆபரணங்களை அணிந்துகொண்டு அலங்கார புருஷனாய்த் தனது தந்தையின் ஊருக்குத் திரும்பினான். தன் தகப்பனார் பட்டகடனை வட்டியும் முதலுமாகச் சேர்த்துக் கொடுத்துவிட்டு நில்புலன்களை அந்தப் பணக்காரனிடம் கேட்டான்.

அந்தப் பேராசைப் பேயின் மனம் இரங்கவில்லை. சுதர்சனன் சொத்தைக் கபளீகரம் செய்யத் தீர்மானித்து, "பயலே! யாரையடா நிலம் கேட்கிறாய்?...உன்னைக் கண்டதார்?...உன் தகப்பனைப் பார்த்ததெவர்?... ஓடிவிடு, இங்கிருந்து, இல்லாவிட்டால்-? என்று மிரட்டினான்.

அந்தச் சுழியனின் கோர சொரூபத்தைக் கண்ட இளைஞன் சுதர்சனம் முதலில் பயந்தான். திடீரென வேய்ங்குழலின் ஞாபகம் வரவே அதனை எடுத்து ஊதினான். அவ்வளவுதான்!... இரண்டு மல்யுத்தர்கள் அங்குதோன்றி செல்வந்தனைச் சூழ்ந்து கொண்டு; "ஹே, வஞ்சனைப் பேயே! ஒழுங்காகசுதர்சனன் சொத்தைக் கொடுத்துவிடு. மறுத்தால்,.. அவதியுறுவாய்!" என்றார்கள்.

செல்வந்தன் அவர்களுக்குக் கடுக்காய் கொடுக்கத் தீர்மானித்தான். அதையறிந்த அந்த குண்டர்கள் அவன் நெஞ்சில் ஒரு குத்தும், இடுப்பில் ஒரு உதையும் கொடுத்தார்கள். பேர்வழி, வழிக்கு வந்தான். அந்த ராக்ஷஸர்கள் மறைந்தார்கள்.

தன்னிடம் இந்திரனையே ஆளும் சக்தி இருந்தும் சுதர்சனன் சர்வ சாதாரணமாகத் தனது மூதாதை தேடிய சம்பத்தை வைத்துக்கொண்டு சுகஜீவனம் செய்து வந்தான். ஆபத்து வேளையில்தான் அந்த மந்திரப் புல்லாங்குழலை உபயோகப்படுத்துவான். ஆனால் அது அவனுடைய இடையிலேயே இருக்கும்.

அந்த சீமானுக்கு இந்தச் செய்தி தெரிய வந்தது. அவன் சுதர்சனத்தைச் சிதறடிக்கத் தீர்மானித்தான்.

நள்ளிரவு ஓரிரண்டு நட்சத்திரங்களே மேகங்களுக்கிடையிலிருந்து கண் சிமிட்டிக்கொண்டிருந்தன.

சுதர்சனம் வழக்கப்படி தனது ஊதுகுழலைத் தலையணைக்கடியில் வைத்துக் கொண்டு தூங்கினான்.

சதி செய்து நிதியை வளர்த்த அந்த செல்வந்தன் மாறு வேடத்தோடு சுதர்சனுடைய வீட்டினுட்புகுந்தான். மதிக்கமுடியாத அந்த மந்திர முரளியைக் கைப்பற்றிக்கொண்டு நழுவி விட்டான்.

'கொக்கரக்கோ!'வென கூவிற்று சேவல்; கோகிலம் பூபாளம் பாடிற்று. பூசுரர்கள் புனல் மூழ்கப் புறப்பட்டார்கள். சூரியன் மலைத் தொடர்களின் இடை வெளியிலிருந்து தனது உயிர்க் காதலியாகிய உஷாதேவியை எட்டிப் பார்த்தான்!....அவள் நாணிக்கோணி நடுக்குற்று மேற்றிசையை நோக்கி ஓடினாள்.



கதிரவனும், அவளைப் பின் தொடர்ந்தான். பூமி கிடுகிடுத்தது. அவனுடைய தேஜஸ் சாளரத்தின் வழியாக கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த சுதர்சனத்தைத்தாக்கிற்று. அவன் கண் விழித்தான்; குழலைத் தரிசிக்க நினைந்து தலையணையைத்தூக்கினான். அது காணப்படவில்லை. மனம் பதைத்தான். அங்குமிங்கும் தேடிக்கொண்டிருந்தான்.



அந்த சீமான் கெட்ட எண்ணத்தோடு அந்தப் புல்லாங்குழலை ஊதினான்! இரண்டு பூதங்கள் அவன் முன் தோன்றிப் பணிந்தன.

தனவந்தன்:— "பூதங்காள்! அந்தப் பொடியன் சுதர்சனத்தைத் தூக்கிக்கொண்டு போய் வனத்தில் விட்டுவிடுங்கள்!" என்றான்.

பூதங்கள்:— உத்திரவு என்று உரை செய்து கொண்டு கிளம்பின.

மந்திரமுரளியைக் காணாது மனம் புழுங்கிக்கொண்டிருந்த சுதர்சனம் பூதங்களால் கடத்திச் செல்லப்பட்டான்.

மறு விநாடி அவன் கிடப்பதெங்கே? பழய மாமரம். பழய மலையடிவாரம்! அந்த அதிசய சம்பவத்தை அவனால் நம்ப முடியவில்லை. தனது ஆடை ஆபரணங்களில் எவ்விதமான மாறுதலையும் அவனால் காண முடியாது போகவே இது உண்மை,—'விதியின் விளையாட்டு' என்று ஊகித்துக் கொண்டான். தெய்வத் துணையின்றி அவன் உய்ய வழியில்லை! ஆகவே, சுதர்சனம், 'தெய்வமே நம்பினேன் உன்னையே, தீர்த்தருள்வாய் துயர்தனையே' என்று கதறினான்.

கண்மூடி மௌனியாகிக் கரம் சென்னி வைத்துக் கதறுமவன்பால் அன்று கனிக்குக் குழல் கொடுத்த முனிவர் கனிவு கொண்டார். அவர் அங்கு எழுந்தருளி, "செல்வா, சுதர்சனம்! பயப்படாதே!... உன்னுடைய அஜாக்ரதையால் முரளி பறிபோயிற்று. அது க்ஷணப் பொழுதில் உனக்குக் கிடைக்கும்படி செய்கின்றேன், தைரியமாக இரு!" என்று சொல்லி பின் தமது பூணூலையும், துளசி தாவடத்தையும் பிடித்துக் கொண்டு ஜெபித்தார்!...

ரிஷி:- "அந்த அதர்மி தனவணிகனைத் தேடிப் பிடித்து வாருங்கள்!" என்றார்.

மந்திர முரளியை அபகரித்தேகிய செல்வந்தனுக்கும், அஷ்டதிக்கு பாலகர்கட்கும் யுத்தம் நடந்தது! இது முரளியின் மகிமை என்பதை அவர்கள் அறிந்தார்கள்,

இறுதியில் தனவந்தன் பிடிபட்டான்.

தபஸ்வி அவனைப் பார்த்து, "நீ சுதர்சனத்திற்கு இழைத்த தீங்குக்காக என்ன தண்டனை பெற விரும்புகின்றாய் ?"

செல்வந்தன்:—"பிரபு! மாயக்கையின் வசப்பட்டு மான் பிழந்தேன். என்னை மன்னியுங்கள். என்னுடைய ஏக புதல்வி வசுதாவை சுதர்சனத்திற்கு மணம் முடித்து சொத்தனைத்தையும் வரிசையாக வழங்கி விடுகின்றேன் என்று சொல்லி கீழே விழுந்து அவர் பாதங்களைப் பற்றிக்கொண்டான்.

முனிவர் மனம் மெழுகென இளகிற்று. அவர் அவனை க்ஷமித்தார்; எல்லோரும் இன்புற்றார்கள்.

இந்திராதி தேவர்கள் புடை சூழ, அந்த மஹரிஷி சுதர்சன-வசுதா திருமணத்தைச் சிறப்பாக நடத்துவித்தார். வானவர்கள் புஷ்பமாரி பொழிந்து இளந் தம்பதிகளை வாழ்த்தினார்கள்.

சுதர்சனம் அந்த மந்திர முரளியை சர்வ ஜாக்ரதையாக வைத்துக்கொண்டு குழந்தை குட்டிகளுடன் பல்லாண்டு வாழ்ந்து வந்தான்.



அஷ்டதிக்கு பாலர்களும் அங்கு தோன்றி, "ஸ்வாமி! ஆக்ஞை யாது ?" என்று கேட்டார்கள்.

★

பால்கன்-ஜீ-பாரி

# இரத்தினக் கம்பளம்

[ சகோ. ஸி. ராஜப்பா ]

விமலபுரியை விஜய கீர்த்தி என்ற அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு ஜயவர்மன் என்ற ஒரே மகன் இருந்தான். அவன் மிகவும் அழகு வாய்ந்தவன். அவன் எல்லாக் கலைகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தான். அரசனுக்கு அவனைத்தவிர வேறு குழந்தைகள் இல்லாதபடியால் அவன் மேல் அளவிலாத அன்பு வைத்திருந்தான்.

ஒரு நாள் பிரசித்தி பெற்ற நெசவாளர் ஒருவர் அரச சபைக்கு வந்திருந்தார். அவர் இரத்தினக் கம்பளங்கள் நெய்வதில் பிரஸித்தி பெற்றவர். அவர் அரசனிடம். தான் கொண்டு வந்திருந்த சித்திர வேலைப்பாடமைந்த கம்பளங்களைக் கொடுத்தார். பின்பு, "அரசே, தங்கள் குமாரன் எல்லாக் கலைகளிலும் தேர்ச்சி பெற்றிருப்பதாக அறிந்தேன். அவருக்கு இம்மாதிரி இரத்தினக் கம்பளங்கள் நெய்யும் முறையையும் கற்பிக்க எனக்கு மிகவும் ஆவலாயிருக்கிறது. தங்கள் இஷ்டம் எப்படியோ?" என்றார். அரசனும் "எனக்கு ஒருவித ஆட்சேபமுமில்லை, உமதிஷ்டப்படி செய்யும்" என்றான்.

உடனே இளவரசன் நெசவு வேலை கற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளெல்லாம் செய்யப்பட்டது. கொஞ்ச நாட்களில் ஜயவர்மனும் இரத்தின கம்பளம் நெய்வதில் தேர்ச்சி பெற்று விட்டான்.

விமலபுரியை அடுத்து ஒரு காடு உண்டு. அங்கே வன விலங்குகள் ஏராளம். இளவரசன் ஒருநாள் வேட்டையாட அந்த வனத்திற்குப் போயிருந்தான். வேட்டையாடிவிட்டு களைப்பின் மிகுதியால் ஒரு மரத்தின் நிழலில் உட்கார்ந்தான். உட்கார்ந்தவன் தன்னையறியாமல் அப்படியே கண்ணயர்ந்துவிட்டான்.

சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு பெரிய கொள்ளைக் கூட்டத்தினர் வந்து இளவரசனையும், அவனிடமிருந்த பொருள்களையும் எடுத்துக்கொண்டு தாங்கள் வசிக்கும் குகைக்குக் கொண்டு போய்விட்டார்கள்.

நாட்கள் சில கழிந்தன. இளவரசனைக் கொண்டு சென்ற கொள்ளைக்காரர்கள் அவனைக் கட்டிப்போட்டு வேளாவேளைக்கு சோறு தண்ணீரில்லாமல் துன்புறுத்தினர். இளவரசனைக் காணாமல் அரசன் தூதர்களை விட்டுத் தேடி வருமாறு அனுப்பினான். அவர்கள் எங்கு தேடியும் பயன் இல்லை.

ஜயவர்மனும் எவ்வளவோ முயன்றும் அந்தக் குகையிலிருந்து தப்பித்துப் போக முடியவில்லை. கடைசியாக அவனுக்கு ஒரு யுக்தி தோன்றிற்று. ஒருநாள் கொள்ளைக்காரர்களின் தலைவனிடம் "தலைவ, எனக்கு அழகான இரத்தினக் கம்பளங்கள் நெய்யத் தெரியும். அதற்கு வேண்டிய பொருள்களை எனக்குக் கொடுத்தால் நெய்து தருகிறேன். அவைகளைக் கொண்டுபோய் அரசனிடம் கொடுத்தால் தகுந்த சம்மானம் கிடைக்கும்." என்றான். தலைவனும் சரியென்று, கம்பளங்கள் நெய்வதற்கு வேண்டிய பொருள்களைக் கொண்டுவரச் செய்தான்.

இளவரசனும் அதனால் நல்ல கம்பளங்கள் நெய்தான். ஆனால் ஒவ்வொரு கம்பளத்தின் மூலையிலும் தன் பெயரையும் எழுதிவிட்டான். அந்த மூட சிகாமணிகள் இதைக் கவனியாமல் கம்பளங்களை எடுத்துக் கொண்டு விமலபுரி அரசனிடம் கொண்டுபோனார்கள்.

அரசன் கம்பளங்களின் வேலைப்பாட்டைக் கண்டு அதிசயித்து ஒவ்வொன்றாகப் பார்வையிடும்பொழுது இளவரசன் பெயர் எழுதியிருப்பதையும் பார்த்துவிட்டான். அப்பொழுது ஒன்றும் பேசாமல் வந்தவர்களுக்குத் தக்க சம்மானமளித்து விட்டுப் போனான்.

உடனேயே அவர்களுக்குத் தெரியாமல் அவர்கள் பின்னால் சில போர்வீரர்களுடன் சென்றான். கொள்ளைக்காரர்கள் குகைக்குள் நுழைந்ததும் அரசனும் போர்வீரர்களுடன் உள்ளே சென்று, கொள்ளைக் கூட்டத்தைக் கைது செய்து இளவரசனை விடுவித்தான்.

தன் சூழ்ச்சி பலித்ததைக் கண்டு இளவரசன் மகிழ்ச்சியடைந்தான். அரசன் இதற்கெல்லாம் காரணமாகிய நெசவாளரை நினைத்துக் கொண்டான்.

---






★

மத்தியமாவதியிலுள்ள கீழ்க்கண்ட கீர்த்தனை மேடைக் கச்சேரிகளில் அதிகமாக உலவாததாகும். ராகபாவம் சிந்தும் வகையில் சாகித்தியம் இது. ஸ்ரீ பூச்சி ஐயங்கார் அவர்கள் ஆக்கிய சிறந்த உருப்படிகளில் இதுவுமொன்று.

★

**பல்லவி**

2 2 2 3
பார்த்தஸாரதி நன்னு பாலிம்பராதா

**அனுபல்லவி**

2 2 3
ஸார்த்தகமைன நீ பதமுல
ஸந்ததமு மொரபெட்டின (பார்த்த)

**சரணம்**

4
ஸர்வ தர்மபரிபாலக ஸர்வலோக சரண்ய
3 3
ஸர்வேசுடௌ ஸ்ரீனிவாஸ ஸர்வரோக நிவாரண
2 2
(பார்த்த)

## ராகம் : மத்யமாவதி

## தாளம் : ரூபகம்

ஆ: ஸரிமபநிஸ் அவ: ஸ்நிபமரிஸ.

[ 22-வது மேளகர்த்தா (கரகரப்ரியா) வில் ஜன்யம். ]

### பல்லவி

| | | | |
|---|---|---|---|
| | — ஸ்ா ; ஸ்ா ஸ் நி ஸ் நி பா | ப ம பா நீ ப ம ரீ ஸா | |
| | — பா . ர்த்தஸா . . . ர | தி . . . . நன் . . னு | |
| | நீ ஸா ரீ மா ம ரி ப ம | பா ; ; ப ம ரி ம ப நி | ‖ |
| | பா . வி ம் ப ரா . . . | தா . . ஸ்ரீ . . . . . | ‖ |
| 2. | — ஸ்ா ; ஸ்ா ஸ் நி ஸ் நி ப ம | ப நி ஸ் நி ப நி ப ம ரி ஸா | |
| | — பா . ர் த் த ஸா . . . ர . | தி . . . . . . ந . . ன்னு | ‖ |
| | ஸ்நி ஸரி ரிஸ ரிம மரி பம | பா ; ; ப ம ரி ம ப நி | ‖ |
| | பா . . . விம் . ப . ரா . . . | தா . . ஸ்ரீ . . . . . | ‖ |
| 3. | ஸ் ரி ம் ரி ஸ் நி நிஸ் ரி ஸ் நி ப | ப நி ஸ் நி ப நி ப ம ரீ ஸா | |
| | பா . . . த்த . ஸா . . . ர . | தி . . . . . . ந . . ன்னு | |
| | ஸ நி ஸ ரி ரி ஸ ரி ம ம ரி ப ம | ரீ , ஸ ; ; ; ; | ‖ |
| | பா . . . விம் . ப . ரா . . . . | தா . . . . . . | ‖ |

### அனுபல்லவி

| | | |
|---|---|---|
| — ஸா ; நி நி பா ப நி ஸ் ரி | ஸ் நி ப ம பா நீ ஸ்ா ரீ | |
| ஸா . ர்த்த . க மை . ந . | நீ . . . . ப த மு ல | |
| ஸ் . ரி ம் ரி ரி ம் ரீ ஸ்ா ஸ்ா | ஸ் நி ஸ் ரி ஸ் நி ப ம ரி ம ப நி | |
| ஸ ந் . . . . த . த . மு | மொ . ர . பெ . ட்டி . ன . . . | |

(பார்த்த)

### சரணம்

| | | | |
|---|---|---|---|
| 1. | ; . , — ரீ ம பா ; பா | ப நி பா பா நி நி ப ம பா | |
| | — ஸ ர் வ த ர் . ம | ப . ரி பா . . ல . க | |
| 2. | ; , — ரீ ம பா ; பா | நி ப பா ப நி ஸ் நி பா மா நி ப | |
| | — ஸ ர் வ த ர் . ம | ப . ரி பா . . ல க . . | |
| 3. | மா ப — ரி ம பா ; பா | நி ப பா ப நி ஸ் நி ப ம பா | |
| | . . — ஸ ர் வ த ர் . ம | ப . ரி பா . . . ல . க | |
| | ; , ரீ ம ப நி நி ம மா | பா பா நீ ஸ்ா ; ஸ்ா | |
| | ஸ ர் வ லோ . . . . க | ச ர ண் . ய ா . . | |
| | ; பா ரீ ரீ ரீ ரீ | ஸ் ரி ம் ரீ ம் ரி ஸ்ா ஸ்ா | |
| | ஸ ர் வே . சு டெ ள . | ஸ்ரீ . . . வி வா . ஸ | |
| | ஸ் நி ஸ் ரி ஸ் ரி ஸ் நி ப ம ப நி | நி ரி ஸ் நி ப ம ரி ஸ ரி ம ப நி | ‖ |
| | ஸர் . . . வ . ரோ . . க . | நி . வா . . . ர . ண . . , | ‖ |

(பார்த்த)





சென்னை மந்திரி சபை நெருக்கடியில் முடிவேற்படுத்திவிட்டு அத்தோடு சென்னைக் கார்ப்பொரேஷன் உபசாரப்பத்திரத்தையும் பெற்றுக்கொண்டார் ஆசார்ய கிருபலானி. அவரை கார்ப்பொரேஷன் மேயரும், இதர அதிகாரிகளும் அழைத்துச்சென்றபோது எடுத்தபடம்.



கும்பகோணம் டி. எஸ். ஆர். கம்பெனி சொந்தக்காரர் ஸ்ரீ. டி. எஸ். ராஜகோபாலய்யங்காரின் புத்திரி காலஞ்சென்ற ஸ்ரீமதி மணியின் உருவப்படத்தை கும்பகோணம் காலேஜில் பிரின்ஸ்பலின் மனைவி ஸ்ரீமதி ராஜ்பாய் கரம்சந்த் சமீபத்தில் திறந்து வைத்தார். மாணவிகளுள் திலகமாக விளங்கிய இவரது அகால மரணம் கல்லூரிக்கு நஷ்டமென அவர் குறிப்பிட்டார்.



தஞ்சை ஜில்லா சுந்தரப்பெருமாள் கோயிலுக்கு அருகே காவிரியாற்றின் தென் கரையிலுள்ள ஒரு பேயன்வாழைமரம் எட்டுதார்களைப் போட்டிருக்கிறது. அவற்றுள் இரண்டு பெரிதும் மற்ற ஆறும் சிறியவை, தனித்தனி பூக்களுடன் காணப்படுகின்றன.



# உக்ரோதயம்

வரகூர் வேங்கடதாஸன்

45

'என் யோசனை'

கீர்த்தி ஏந்திய குதிரைவீரர்கள் இரு பக்கங்களிலும் சூழ்ந்துகொண்டு வர, தேர் மிகத் துரிதமாக பாண்டியனின் பாசறைக் கூடாரம் நோக்கி வந்தது.

பாண்டியனின் கூடாரத்தை அணுகியவுடன் தேர் நின்றது. கீர்த்தி பிடித்த வீரர்கள் குதிரைகளிலிருந்து விரைவாகக் குதித்து வழியிடையே வரிசையாக இருபுறமும் நின்றார்கள். தேரிலிருந்து சாளுக்கிய விக்கிரமாதித்தனும், அவன் புதல்வன் கீர்த்திவர்மனும் கீழிறங்கினார்கள்.

கீர்த்தி ஏந்திய வீரர்களின் இரு வரிசைகளுக்கும் இடையே நடந்தார்கள் அவ்விருவரும்.

பாண்டியனின் கூடாரத்துக்குள் இருந்து மாறன்காரியும் மாறன் எயினனும் வெளிவந்தார்கள்.

சாளுக்கிய சம்ராட்டான விக்கிரமனும் அவன் புதல்வனும் வருவதைக் கண்டு குதூகலத்துடன் வரவேற்றார்கள்.

"வேந்தர் தங்களைப்பற்றியே இப்போது பேசிக்கொண்டிருந்தார்; தங்கள் வரவு எங்கள் வெற்றியாகிவிட்டது!.." என்று மாறன்காரி கூறினான்.

தலையசைத்தவாறே கம்பீரமான நடையுடன் விக்கிரமாதித்தன் கூடாரத்துக்குள் புகுந்தான். கீர்த்திவர்மன் மட்டிலும் மாறன்காரியின் வலக்கையை இறுகப் பிடித்து நகை செய்தான்.

"பல்லவப்படை முதுகிட்டு விட்டதே!...இவ்வளவு திறமையற்றவர்களா, பல்லவர்கள்!" என்று கூறிவிட்டு விக்கிரமனுடன் சென்றான் கீர்த்திவர்மன்.

கூடாரத்துக்குள் புகுந்தவுடன் அனைவரும் எழுந்து முன் வந்தார்கள் விக்கிரமனை வரவேற்று. பாண்டியன் ராஜஸிம்மன் பெருமிதமான முகத்தோற்றத்துடன் நடந்து முன் வந்து விக்ரமாதித்தனையும் கீர்த்திவர்மனையும் கை கொடுத்து அழைத்துச் சென்று ஆதனங்களில் அமர்வித்தான்.

"தாங்கள், வருவீர்கள் என்று முன்னதாகத் தெரிந்திருந்தால் மாறன்காரியையும் கங்கராஜ குமாரர்களையும் அனுப்பி அழைத்து வருவதற்கு ஏற்பாடு செய்திருப்பேன்!...... நள்ளிரவில் படைத்துணை இல்லாமல் தாங்கள் புறப்பட்டுவந்தது...எனக்கு வருத்தத்தைத் தருகிறது ஆனால்... நான் தங்களைச் சந்திக்க...எண்ணியவன்தான்;.. ...தாங்கள் நிலைநாட்டிய வெற்றி...எ ற்றது;...... எனக்குக் கிடைத்த வெற்றிமட்டுமல்ல அது!...என் உள்ளம் ஆர்ந்த உவகை நன்றியைத் தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்;..... தங்கள் குமரர் கீர்த்திவர்மர் செய்த போர்ச் செயல்கள் என்னுடைய வீரர்களாலும் சேனாதிபதி மாறன் எயினனாலும் மிகவும் பாராட்டிக் கூறப்பட்டன!...வீர சிகாமணியான தங்கள் புதல்வரின் திறமையை நான் நன்றாக அறிந்து கொண்டேன்; நம்முடைய நட்பு என்றும் குன்றாமல் இருக்குமாறு இறைவன் அருள் புரிக!...' என்று பாண்டியன் ராஜஸிம்மன் விக்கிரமாதித்தனைப் பாராட்டிக் கூறினான்.

விக்கிரமாதித்தனும் கீர்த்திவர்மனும் நகை செய்துகொண்டார்கள். அங்கிருந்த அனைவரையும் நோக்கிவிட்டு விக்கிரமாதித்தன் சொல்லலானான்.

"ராஜஸிம்மரே......உம்முடைய வார்த்தைகளைக் கேட்டு பூரிப்படைந்தேன்;...உம்முடைய போர் வீரர்களுக்கு முன் பல்லவர் நன்றாகப் போராடினர் என்றும் ஆனால் சமபல யுத்தமாகத்தான் இருந்ததென்றும் என்னுடைய வீரர்கள் தெரிவித்தார்கள்; எது எப்படியிருப்பினும் பல்லவர் என்னுடைய படைகளுக்குமுன் நிலைத்து நிற்காமல் ஓடிவிட்டார்கள் என்பது யாவரும் அறிந்த உண்மையாகிவிட்டது. என் பிரபிதா மகரான சாளுக்கிய விக்கிரமரின் இயற்கைப் பகைவர்களான பல்லவர்களை நான் முறியடித்து விட்டேன் - இனியும் அப்படியே!...




## "சுதேசமித்திரன்" வாரப்பதிப்பு
### சந்தா விவரம்
(சந்தாவை முன்னதாக கட்டவேண்டும்.)

| | இந்தியா சிலோன் | வெளிநாடு |
|---|---|---|
| 1-வருஷம் | 13 0 | 18 0 |
| 6-மாதம் | 7 0 | 9 8 |
| 3-மாதம் | 3 12 | 5 0 |

தனிப்பிரதி அணா 4

3-மாதத்திற்கு குறைந்து சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

மானேஜர்,—"சுதேசமித்திரன்" ஆபிஸ், மவுண்ட் ரோடு, மதராஸ்.

## ரூ. 100 இனாம்
ஆச்சரியகரமான சக்தி வாய்ந்த சித்த யந்திரம் (Govt. Regd.)

சக்தி வாய்ந்தது. "குப்த வசீகரண யந்திரத்தை" வைத்திருப்பதாலேயே கஷ்டமான காரியங்களிலும் வெற்றி பெற்றுவிடலாம். பலன் அளிக்கச் செய்வதில் எவ்வித கடின சாதனமும், தேவைகளும் அவசியமில்லை. இதனால் (ஆண், பெண்) நீர் விரும்பும் எவராகினும் உனக்கு அடங்கி வருவர். அசுப நட்சத்திரங்கள், விரோதி பகை இவைகள் நீங்கி, பரீட்சை, வர்த்தகம், வழக்கு, லாட்டரி, ரேஸ், உத்தியோகம், சந்தானம், ஐசுவரியம், கடன் நிவாரணம், பயங்கர வியாதிகள் இவைகளில் வெற்றி பெறுவதோடு, அதிருஷ்டசாலியாகவும் இருப்பீர்கள். பொய் என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ 100 இனாம். செப்பு ரூ 2-8-0. வெள்ளி ரூ 3-0-0. சுத்த தங்கம் ரூ 13-0-0.

## நரையை ஒழியுங்கள்.
சாயம் மூலம் இல்லை எமது ஆயுர்வேத வாசனைத் தைலம், நரை மயிரை நிரந்தரமாகக் கருப்பாகச் செய்து, மீண்டும் நரை ஏற்படாமல் பாதுகாக்கும். மூளை பலவீனம், மந்தம் முதலியவற்றைப் போக்கி, தலைவலியைக் குணப்படுத்தும், பார்வையை சீர்படுத்தும். நம்பிக்கையில்லையேல் தொகை வாபீஸ் என்ற உத்தரவாதம் பெறுங்கள், சொற்ப நரைக்கு ரூ. 2-8-0. அதற்கு மேற்பட்டது. ரூ 3-8-0. எல்லா நரைக்கும் ரூ.5.

Shree Kamrup Kamachhya Ashram
No. 6. (P. O. Katrisarai, Gaya)

## ப்ரஸித்த ஜ்யோதிஷர்
சாஸ்திர ஆராய்ச்சியையும், நீண்ட கால அனுபவத்தையும் கொண்டு, வருங்காலப் பலன்கள் தெளிவாகச் சொல்லப்படும்.
மூன்று கேள்விகள் ரூ. 2.
ஒரு வருஷ பலன் (மாதவாரியாக) ரூ. 6.
ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2.
பொருத்தம் பார்க்க ரூ. 2.
(1) ஜாதகம் (2) பிறந்த மணி, தேதி (3) எழுநும் நேரம் இவைகளில் ஒன்று அனுப்பவும்.

**Prof. ஸ்வாமி, M. A.,**
தபால் பெட்டி 1403, மதராஸ் 17.

## புதிய சாஸ்திரீக முறை



உங்களுக்கு இள்மையின் தெம்பும் ஜீவ சக்தியும் குன்றியுள்ளதா? உடனே **டாக்டர் ஏ. ஜி. வால்** அவர்களிடம் ஆலோசனை பெறுங்கள். ஆண், பெண் இருபாலரின் தீராத நோய்களையும் எளிதில் தீர்க்கும் நிபுணர். அவரது விடா முயற்சியுடன் கூடிய ஆராய்ச்சியின் பயனாக அனுசரித்து வரும் "புதிய சாஸ்திரீக முறை" உங்களைப் புதிய மனிதராக்கும். உடனே கீழ்க்கண்ட விலாசத்தில் அவரிடம் ஆலோசனை பெறுங்கள்.

**பம்பாய் ஆஸ்பத்திரி,**
**1-71, பிராட்வே, ஜி. டி. மதராஸ்.**

ஆலோசனை நேரம் :

காலை 9-மணி முதல் பகல் 12-மணி வரை. மாலை 4-மணி முதல் 7-மணி வரை. ஞாயிறு காலை 9-மணி முதல் 12-மணி வரைமட்டும். பதிலுக்கு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

## அனைவருக்கும் திருப்தி யளிக்கக்கூடிய எல்லாவிதமான



வாரியர்

# பிருங்காமலகாதி

**தைலம்**

*குளிர்ச்சி மிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப் படிப்பினாலோ வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.*

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.

ஆர்ய வைத்தியர்

**கே. எஸ். வாரியரின்**

**அஷ்டாங்க ஆயுர்வேத சாலா**

தெப்பக்குளம், திருச்சி.

*(ஸ்தாபிதம் : 1936)*



## வாழ்க்கை அனுபவிக்கவே நீங்கள் பிறந்திருக்கிறீர்கள்



*இளமையும் ஜீவசக்தியும் திரும்பப்பெற்று வாழ்க்கையை நன்கு அனுபவிக்க உடனே டாக்டர் நாருவிடம் ஆலோசனை பெறுங்கள். நூற்றுக்கணக்கான நற்சாட்சிகளுள் ஒன்று.*

*"நான் பலஹீனம், நரம்புத் தளர்ச்சிக்கு டாக்டர் நாருவிடம் மருந்து சாப்பிட்டேன். தற்போது பூரணமாக இளமையும் ஜீவசக்தியும் பெற்றிருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்."*

ஏ. அய்யஸ்னுர்,
வெட்டப்பாளையம்.

டாக்டர் நாரு,
*(ஸெக்ஸாலஜிஸ்ட்)*

**நாரு ஆஸ்பத்திரி,**
**24, பிராட்வே, மதராஸ்.**

**நேரம் :**

*காலை 8-மணி முதல் 12-வரை*
*மாலை 4-மணிமுதல் 8-வரை.*
*ஞாயிற்றுக்கிழமைகளிலும், விடுமுறை நாட்களிலும் காலை 8-மணிமுதல் 12-மட்டும். மாலையில் கிடையாது.*
*இரகசியமான வைத்தியம்.*
*பதிலுக்கு ஸ்டாம்பு அனுப்பவும்.*



# பொன்விழா வருமபோது




பண்டிட் டி. கோபாலாச்சாரலுவின்

# ஜீவாம்ருதம்

*நாட்டில் தேக சுகத்தையும், சுபீட்சத்தையும் பரவச் செய்வதில் தொடர்ந்து ஐம்பது வருஷங்களாக நிலையான ஊழியம் புரிந்து வந்திருப்பதில் பெருமையடைகின்றோம்.*

**ஆயுர்வேதாஸ்ரமம் லிட்.**
**தி. நகர் . . . மதராஸ்.**

EASTERNS 379.



## கைத்தறி கலர் புடவைகள் வேஷ்டிகள், அங்கவஸ்திரங்கள் 80நெ. 100நெ. நூலில் தயாரிப்பவர்கள்



**S. M. S. R.**
பாலசுந்தரம் செட்டி
உறையூர் P. O. திருச்சி.







## ஜோதிஷ வித்வான்
## சேஷாத்ரியாச்சாரியார்

...ா தெரு, தியாகராயநகர், சென்னை 17.

*...கம் விவரமாகப் பார்க்க.......................ரூ. 5.*
*...த்தைப்பற்றிய மூன்று கேள்விகளுக்கு...ரூ. 1.*
*...கேள்வி ஒன்றுக்கு..................................அணா 8.*
*...த்துக்கு ஒரு வருஷ பலன் மாதவாரி எழுத ரூ. 5.*
*...ம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.*
*ஜாதகம் கணிக்க..............................................ரூ. 3.*
*...ருந்த ஊர், தேதி, மணி தேவை. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.*



## குழந்தைகள் விரும்புவது

# காஸ்டொபீன்




*ஏனெனில், சாக்லேட் மணமுள்ளது. இதர மலமிளக்கிகளின் துர்வாசனையால் அவற்றை வெறுக்கின்றனர். நல்ல ஆரோக்கியத்துக்கு சிறந்த உதவியளிக்கும். மலச்சிக்கலை ஒழிக்கும், தனி பழக்கத்தை உண்டுபண்ணாது.*

**ஒருபுட்டி தயாராக வைத்துக் கொள்க.**




# CASTOPHENE
## CASTOR OIL CHOCOLATES



## பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd.)

*குழந்தைகளின் ஈரல், குலை, ஈரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக் கண்டு ஏமாறுதீர்கள்.*

**Dr பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,**
**11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.**

| | |
|---|---|
| *கும்பகோணம் கிளை:—* **7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.** | *திருச்சி கிளை:—* **15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.** |



*கூந்தல் விருத்திக்கு சுலப சிக்கன முறை*
*உங்களுக்கு தேவையான எண்ணெயில் கலந்து கொள்க*

**காஷ்மீர் குஸும்**

**மைசூர் பிரேமலீலா ஊதுவத்தி**

**யுனைடெட் கன்ஸர்ன்,**
*54, பந்தர்தெரு, மதராஸ்.*

★



**நறுமண சரும ரக்ஷிணி**

**ஸான்டல்க்ஸ்**

முகப்பரு
தீப்புண்
காயங்கள்
சொறி
சிரங்கு
குணமடைய

*முகக்ஷவர உதவி*

**ஏஜண்ட்ஸ் : யுனைடெட் கன்ஸர்ன்**
*54, பந்தர்தெரு, மதராஸ்.*

★



ஆயுர்வேத வித்வான் B.V. பண்டிட்ஸ்
*"சத்வைத்யசாலை, நஞ்சன்கூடு"*
**குடும்ப அவசியங்கள்**

**காஸ்மஸ்**
கஸ்தூரி மாத்திரை

**கர்ஜன்**
கோரோஜனை மாத்திரை

**பாலக்ஸ்**
பேதியாக மாத்திரை

**நஞ்சன்கூடு பல்பொடி**

**ஏஜண்ட்ஸ் : யுனைடெட் கன்ஸர்ன்,**
**54, பந்தர்தெரு, மதராஸ்.**

வாழ்க்கையில் இன்பம் எப்போதும் இருக்க
ஆனந்த குசுமாகர லேகியம் (Registered)
சாப்பிடுங்கள்
தாது விருத்தி, இரத்த சுத்தி, ஜீரணசக்தி முதலியவைகளை ஏககாலத்தில் கொடுக்கக்கூடியது
தேகத்தின் உஷ்ண நோய்களுக்கு அற்புத பலனை அளிக்கக்கூடிய ஓர் உயர்ந்த ஔஷதம்
விலை ரூ. 2—8—0 விபரமான காட்லாக் இனும்.
மலையாள மெடிகல் ஹால் (REGD)
189, வக்கீல் புது தெரு, — Post Box 27 — மதுரை.

மாதவிடாய் நின்று விட்டதா? கவலை வேண்டாம்.
சாஸ்திரிக முறை தவறிய அபாயகரமான மருந்துகளை உபயோகிக்காதீர். புகழ்பெற்ற கவர்ன்மெண்டு ரிஜிஸ்டர்ட் ராஜ நியமோனி ஒரே தினத்தில் போக்களிக்கும். தீங்கற்றது. கடுமையானதற்கும் சிறந்த ஔஷதம். விலை ரூ. 3-8-0. ஸ்பெஷல் ராஜ நியமோனி நாள்பட்ட கேஸ்களுக்கு மட்டும் விலை ரூ. 10. உத்தரவாதம்பெற்றது. தபால் செலவு அணா 12. ரோதகி கர்ப்பத்தடைக்கு சிறந்த தீங்கற்ற மருந்து. மாதவிடாய் ஒழுங்காயிருக்கும். நிரந்தரம் ரூ. 5. தாற்காலிகம் ரூ. 2-8-0. தபால் செலவு அணா 12.
Kaviraj. M. BHATTACHARYA (S. W.)
Kavya Vyakarantirta, Vishagacharya,
120/1/1. UPPER CIRCULAR ROAD, CALCUTTA 9.

நிவாரணத்திற்கு ரூ. 1000 இனும் உத்தரவாதம்
எங்களுடைய
"லெப்பர் க்யூர்"
18-வித குஷ்டங்களையும், வெண் குஷ்டம், வெட்டை, வெள்ளை முதலிய வியாதிகளையும் குணப்படுத்தாது என்று நிரூபிப்பவர்களுக்கு:
இலவச காட்லாக் (24 பாஷைகளில்)
தலைமை ஆபீஸ்: வால்டேர், ஆர். எஸ். | லக்ஷ்மி & கோ., 2/135, பிராட்வே, மதராஸ்.
ஸ்திரீகளின் வியாதிகளுக்கு கேசரியை உபயோகியுங்கள்.

ஸ்தாபிதம் 1924.
பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. (ஜனன தேதி, டயம் தேவை.) நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. டி பலனை விஸ்தாரமாக விவரமாக எழுத ரூ. 10. முஹூர்த்தம் அல்லது விவாக பொருத்தம் விவரித்து எழுத ரூ. 2. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.
பண்டித கவுழியூர். ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
"சந்திரிகை" எல்டாம்ஸ்ரோட், தேனாம்பேட்டை போஸ்டு, மதராஸ்.



லோத்ரா பல்லாண்டுகளாக இந்திய ஸ்திரீகளுக்குவிசுவாசத்துடன் சேவைபுரிந்துநம்பிக்கையுள்ள கர்ப்பாசய ரோக நிவாரணி என்று புகழையும் ஸ்தாபித்துக்கொண்டுள்ளது.
லோத்ரா கவர்ச்சி மிக்க ஆரோக்கியத்தையும் சக்தியையும் அளிக்கிறது.
EASTERNS 373.

கேஸரி குடீரம் லிட்.,
மதராஸ்.
★
ஒரிஸ்ஸா, நைஜாம், ஆந்திரா ஜில்லாக்களுக்கும், தமிழ் நாட்டுக்கும் ஏஜண்டுகள்:
ஸீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்,
பர்ஹாம்பூர் - செகந்திராபாத்
பெஜவாடா - மதுரை.



10-8-47
தேசமித்திரன்
விலை 4 அணா.


OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 ... 1947
622
RP.




# தாய்மார்கள் அறிவர்

:: உட்வார்ட்ஸ் க்ரைப் வாட்டரின் ::
மதிப்பு தாய்மார்களுக்குத் தெரியும்.
அது குழந்தைகளை நன்கு பாதுகாக்கும்

**WOODWARD'S GRIPE WATER**

*keeps baby well*

I-WW108-III W. WOODWARD LTD. LONDON ENGLAND





## ரெக்ஸோனாவினால் சருமம் ஆரோக்கியமேற்படுகிறது ... சருமம் ஆரோக்கியமே அழகு

அழகான மேனியின் இரகசியம் சரும சுகமே. உங்கள் சருமம் ஆரோக்கியமுடையதாக இருக்காவிட்டால் அழகு ஏற்படாது. கேடில் எனும் மருந்து சேர்ந்ததும், விரைவில் நுரையைத் தருகின்றதுமான ரெக்ஸோனாவின் உதவியை பயன் படுத்திக்கொள்ளுங்கள். இந்த, ஆன்டிஸெப்டிக்கும் குணமளித்துப் போஷிக்கும் தன்மையுடையதுமான தைலங்கள் சேர்ந்த விசேஷ மருந்தை, ரெக்ஸோனாவின் நுரை சருமத்தின் அடிப்பாகத்திற்கு கொண்டு சேர்த்து, மலினங்களை அகற்றி சருமத்திற்கு சுகத்துடன் வனப்பையுமளிக்கிறது. மேனி அழகிற்கு சரும சுகமே அடிப்படை என்பதற்கும், ரெக்ஸோனாவின் மருந்து கலந்த நுரை சௌந்தர்யமேற்பட உதவுகிறது என்பதற்கும் சந்தேகமே கிடையாது.

ஆடவருக்கு ரெக்ஸோனா: ரெக்ஸோனா பெண்களுக்காகமட்டும் வழங்கப்படும் சோப்பெனக் கருதாதீர்கள். அது ஆடவருக்கும் மிக அவசியமான சோப். ரெக்ஸோனாவிலிருக்கும் கேடில் ஆன்டிஸெப்டிக்கும், குணமளிக்கும் தன்மை வாய்ந்ததுமாதலால் சருமத்தைப் பாதுகாக்கிறது. சரும சுத்தியினாலேற்படும் செழித்த ஆரோக்கியம ஆடவருக்கு தனிப் பெருமையைக் கொடுக்கும்.

குழந்தைகளுக்கு ரெக்ஸோனா: ரெக்ஸோனாவின் மிருதுவான நுரை குழந்தையின் இளம் சருமத்தைத் தேற்றுகிறது. கேடில் மருந்து சிறு அவையவங்களை எரிச்சல் அரிப்பு முதலானவைகளிலிருந்து காப்பாற்றுகிறது. குழந்தைகளுக்கு மிக உத்தமமான சோப்பே உகந்ததாகும்.

★ ரெக்ஸோனாவிலுள்ள கேடில் சுகமளித்துப் போஷிக்கும் தைலங்கள் சேர்ந்த விசேஷ மருந்து. அது சரும ஆரோக்கியத்திற்கு மிகவும் அவசியமானது.




RP. 30-59 TM REXONA PROPRIETARY LIMITED



## கணேஷ் காப்பிக்கொட்டை

சுவை, நறுமணமுள்ளவை




**கணேஷ் & கம்பெனி**

பாண்டி பஜார், தி. நகர்.

பிராஞ்சு: சைனாபஜார், மதராஸ்.
பைகிராப்ட்ஸ்ரோட், திருவல்லிக்கேணி.






*Kalapi*

**TOILET POWDER**

KALAPI INDUSTRIES, BOMBAY, 2.

Sole Agents: KALAPI STORES, BOMBAY, 2.

# ப்ரஸித்த ஜ்யோதிஷர்

சாஸ்திர ஆராய்ச்சியையும், நீண்ட கால அனுபவத்தையும் கொண்டு, வருங்காலப் பலன்கள் தெளிவாகச் சொல்லப்படும்.
மூன்று கேள்விகள் ரூ. 2.
ஒரு வருஷ பலன் (மாதவாரியாக) ரூ. 6.
ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2.
பொருத்தம் பார்க்க ரூ. 2.
(1) ஜாதகம் (2) பிறந்த மணி, தேதி (3) எழுதும் நேரம் இவைகளில் ஒன்று அனுப்பவும்.

**Prof. ஸ்வாமி, M. A.,**
தபால் பெட்டி 1403, மதராஸ் 17.

# முக்கிய அறிவிப்பு

மந்தார விடு இலை, தையல் இலை
சகாயமான விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் எங்களிடம் கிடைக்கும்.

**S. மாணிக்கம் செட்டி &. கோ.,**
6—7, ஆதியப்ப நாயக்கன் தெரு, மதராஸ் 1.
ஏஜண்டு இல்லாத இடங்களுக்கு
ஏஜண்டுகள் தேவை.

நிவாரணத்திற்கு உத்தரவாதம்
ரூ. 1000 இனும்
எங்களுடைய

# "லெப்பர் க்யூர்"

18-வித குஷ்டங்களையும், வெண் குஷ்டம், வெட்டை, வெள்ளை முதலிய வியாதிகளையும் குணப்படுத்தாது என்று நிரூபிப்பவர்களுக்கு:

| தலைமை ஆபீஸ்: வால்டேர், ஆர். எஸ். | லக்ஷ்மி & கோ., 2/135, பிராட்வே, மதராஸ். |
|---|---|

ஸ்திரீகளின் வியாதிகளுக்கு கேசரியை உபயோகியுங்கள்.

# பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd.)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக் கண்டு ஏமாறுதீர்கள்.

**Dr. பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,**
11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

| கும்பகோணம் கிளை:— 7, சாரங்கபாணி கோவில் கீழவீதி. | திருச்சி கிளை:— 15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு. |
|---|---|

மீண்டும் ஜீவ சக்தி



பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

# அருணா

கர்ப்பாசயரோக நிவாரணி

ஸ்திரீகளின் சூதகக் கோளாறுகளை அறவே ஒழித்து இல்வாழ்க்கையின் இன்பங்களை அனுபவிக்க மீண்டும் ஜீவ சக்தியை அளிப்பது அருணா

ஆயுர்வேதாஸ்ரமம் லிட்
மதராஸ் 17



# சக்தி ஆரூடம்!

புகழ்பெற்ற "சக்தி பால ஜோதிடரால்" வருங்கால பலன்கள் தெளிவாகச் சொல்லப்படும். ஸ்ரீ K. ஹரிஹரன், B. A., D. C. T. O. தர்மபுரியிலிருந்து 20-6-47-ல் எழுதுகிறார்:—"தங்கள் பலன்கள் முற்றிலும் பலித்தன. இதுவரை இம்மாதிரி வியக்கத்தக்க பலன்கள் எந்த ஜோதிடரும் கூறவில்லை. தங்கள் கவசத்தின் மகிமை மெச்சத்தக்கது.' 1 முதல் 3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருஷ பலன் ரூ. 5. சக்திகவசம் ரூ. 7—8—0. வி. பி. பி. அணா 5. ஜாதகம் or எழுதும் நேரம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம், P. O. (S. I)




# யாரெல்லாம் ஆங்கிலம் கற்கலாம்

1. ஆங்கில எழுத்துகூடத் தெரியாத பெண்களுக்கும் ஆண்களுக்கும்
2. பாடசாலைகளில் சென்று பயிலமுடியாத குமரிகளுக்கும்
3. சிறிது கற்று நிறுத்தியவர்களுக்கும்
4. ஆங்கில படிப்பு இல்லாத குறையால் பிரமோஷன் கிடையாது வருந்தும் சர்க்கார் சேவகர்களுக்கும்
5. எஸ். எஸ். எல். ஸி. அல்லது மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தோல்வியுற்று, காலேஜில் பிரவேசனம் இன்றி வருந்துபவர்களுக்கும்
6. பிரமோஷன் வேண்டுமென்று எண்ணுகிற ஆசிரியர்களுக்கும்
7. தவிர, எவர்க்கும் தத்தம் இல்லத்தில் இருந்தே தங்கள் வேலைகளுக்கு யாதொரு இடையூறுமின்றிக் குறைந்த காலத்தில் ஆங்கிலம் கற்கலாம். இன்று ஆங்கில எழுத்துகூடத்தெரியாத ஒருவருக்கு ஒரே வருடத்தில் நான்காவது பாரத்தின் ஆங்கில அறிவு பெறலாம்.

தொடர்ந்து மூன்று வருடங்கள் கற்பதாயின், கேம்பிரட்ஜ் ஸீனியர் என்னும் ஒரு பெரிய பரீட்சையில் தேறலாம். கல்வி பூராவும் தபால் மூலம் நடத்தப்படும். ஆங்கிலம் பயில விரும்புவோர், தான் படித்த வகுப்பையும் குறிப்பிட்டு கீழ்க்காணும் விலாசத்திற்கு உடனே எழுதவும்.

**கேம்பிரட்ஜ் காலேஜ், கைதமுக்கு, திருவனந்தபுரம்.**

N. B. தங்களது குமாரர்களை விரைவில் கேம்பிரட்ஜ் ஸீனியர் பரீட்சையில் வெற்றியடையச்செய்து, இன்டர்மீடியட்டுக்குப் பிரவேசனம் செய்ய அரிய ஓர் வழியாகும்.

# மாதவிடாய்

நின்று விட்டதா? கவலை வேண்டாம்.

சாஸ்திரிக முறை தவறிய, அபாயகரமான மருந்துகளை உபயோகிக்காதீர். புகழ்பெற்ற கவர்ன்மெண்டு ரிஜிஸ்டர்ட் ராஜ நியமோனி ஒரே தினத்தில் போக்களிக்கும். தீங்கற்றது. கடுமையானதற்கும் சிறந்த ஔஷதம். விலை ரூ. 3-8-0. ஸ்பெஷல் ராஜ நியமோனி நாள்பட்ட கேஸ்களுக்கு மட்டும் விலை ரூ. 10. உத்தரவாதம்பெற்றது. தபால் செலவு அணா 12. ரோதகி கர்ப்பத்தடைக்கு சிறந்த தீங்கற்ற மருந்து. மாதவிடாய் ஒழுங்காயிருக்கும். நிரந்தரம் ரூ. 5 தாற்காலிகம் ரூ. 2-8-0. தபால் செலவு அணா 12.

Kaviraj M. BHATTACHARYA (S. W.)
Kavya Vyakarantirta, Vishagacharya,
120/1/1, UPPER CIRCULAR ROAD, CALCUTTA 9.

அனைவருக்கும் திருப்தி யளிக்கக்கூடிய எல்லாவிதமான

நவீன
பட்டு & நூல்
ஜவுளி
ரகங்களுக்கு

மாருதி கிளாத் மார்ட்
ராஜவீதி ★ கோயமுத்தூர்.

இண்டோ பாம்
நோவுகளுக்கு சிறந்த அவுஷதம்

ஜூரத்திற்கு
கார்னிக்
எகுமிக்சர்
உபயோகியுங்கள்

KARNIK BROS' BOMBAY 4.

## மாதவிடாய்

நின்றுவிட்டால் எக்காரணத்தினுல் ஆனுலும் ரிதுபிரபர்தினி கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்ட் ஒரே நாளில் ஹானியில்லாமல் வெளிப்படுத்தும். ரூ. 3. பர்பதி கர்ப்பத்தடைக்குச் சிறந்தது. தாற்காலீகம் ரூ. 2. நிரந்தரம் ரூ. 4-8-0. வி. பி. அணு 13.

இம்மருந்துகள் கிடைக்குமிடம்:—

அப்பா & கம்பெனி
286, சைனுபஜார், மதராஸ்.

★

## விரை வீக்கம்

ஹர்னியா, யானைக்கால், முடக்கு வாதம் முதலியவற்றை எளிதில் குணமாக்குவது பிஷிஹா தைலம். தடிப்பு, வலி, வீக்கம், விரைவில் மாயமாய் மறையும் ரூ. 3. உள் மருந்து ரூ. 2. வி. பி. அணு 13.

★

## குஷ்டம், வெண் குஷ்டம்

உள்ளுக்கும் வெளிப் பூச்சுக்கும் மருந்துகள்:—

உத்தரவாதமான சிகிச்சை.
ஒருமாத மருந்து ரூ. 24-13.

★

## விகரின் (தங்கம், கஸ்தூரி, மகரத்வஜம் சேர்ந்தது)

இளமையும், ஜீவ சக்தியும் அளித்து, ஞாபக மின்மை, ஹிருதய பலவீனம், நரம்புத் தளர்ச்சி இவற்றை குணமாக்கும். புதிய ரத்தம் ஊறி தேக திடம் அளிக்கும். விலை ரூ. 3. சக்தி வாய்ந்தது ரூ. 10. வி. பி. செலவு அணு 12.

**Kaviraj R. Chakravorty,**
Ayurveda Sastri (S. W.)
Bhowanipore, Calcutta. 25.



குணமில்லை என்று நிரூபித்தால்
## இனும் ரூ. 100.

அறவே இழந்துபோன வாலிபத்தை மீண்டும் பெற (Regd)

## காமபிந்து

உபயோகியுங்கள். (தங்கம் சேர்க்கப்பட்டது) உங்களுக்கு இளமையின் தெம்பும், ஜீவசக்தியும் குன்றியுள்ளதா? அப்படியானுல் உலகப் பிரசித்தி பெற்ற இம்மருந்தை உபயோகியுங்கள். தாதுவை கெட்டிப்படுத்தியும், அதிகப்படுத்தியும், சப்த நரம்புகளுக்கும் வலுவூட்டி, இல்லற இன்பத்தை இஷ்டம்போல் அனுபவிக்கச் செய்யும். ஆண் பெண் யாவரும் உபயோகிக்கலாம். குணத்திற்கு உத்தரவாதம். 60 மாத்திரைகள் கொண்ட பாக்கட் ரூ. 5-8-0. 30 மாத்திரைகள் விலை ரூ. 3-0-0.

MR. P. K. கல்யாணராம சாஸ்திரி, B. A., ரிடையர்ட் சப்-ரிஜிஸ்ட்ரார், "ஸ்ரீ மஹால்" பரித்தியூர் எழுதுகிருர்:—நான் உங்கள் காமபிந்துவை உபயோகித்ததில் அதிக குணம் அடைந்திருக்கிறேன். ஆகையினுல், உடனே இன்னும் ஒரு பாக்கட் அனுப்பி வைக்கவும்.

Dr. N. V. R. கோபாலன் M. D. (H)
The K. B. பார்மஸி (Regd)
103, ஜஸ் அவுஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, சென்னை 5.
(ஸ்தாபிதம் 1919.)
ஏஜண்ட்: ருகன் & கோ., கோயம்புத்தூர்.
இந்தியாவில் எங்கும் ஏஜண்டுகள் தேவை.

## ஹோமியோபதி வைத்தியத்தில் பட்டம் பெற்றபின் தெரிந்து கொள்ள வேண்டியவை.

தபால்மூலமாக மட்டும் எல்லா வைத்தியர்களும், உயர் வகுப்பு மாணவரும், முன்னணிக்கு வர வேண்டிய ஸ்திரீ. புருஷர்களும் வகுப்பில் சேரலாம். பாடங்கள் கல்கத்தாவின் சக்திவாய்ந்த ஹோமியோபதி வைத்தியரான R. C. கோஷ் அவர்களால். பிராஸ்பெக்டஸுக்கு எழுதுங்கள்.

## இரு அமெரிக்க மருந்துகள்

இவற்றின் திறமைக்கு உத்திரவாதம். ஆண், பெண்களின் மயக்க வியாதிகளுக்கு நியூரைன், பெண்களின் கர்ப்பாசய வியாதிகளுக்கு ஓரகோரைன் புட்டி விலை ரூ. 2. மூன்று புட்டி விலை ரூ. 5.

HOMEOPATHIC DIRECTOR,
42-10, Doctor Lane, Calcutta.

ரமலான் மாதம் படிக்க வேண்டிய

"தாருல் இஸ்லாம்" ஆசிரியர்.
அல்ஹாஜ் பா. தாவூத்ஷா, பி.ஏ.
இயற்றிய நூல்கள்.

| | |
|---|---|
| இஸ்லாமிய ஞானபோதம் (முஸ்லிம்களின் ஞான மார்க்கத்தைப் போதிக்கக்கூடியது) ... | ரூ. 4.0.0 |
| ஈமான்: (இஸ்லாத்தின் மூலக் கொள்கைகள்) ... | ரூ. 0.8.0 |
| நாயகத்தின் நற்குணங்கள்: நபிகள் (நாயகத்தின் குண விசேஷங்கள் நிறைந்தது) ... | ரூ. 1.8.0 |
| மஹான் முஹம்மத் நபி ... | ரூ. 0.12.0 |
| அபூபக்கர்; (முதல் கலீபாவின் சரித்திர வரலாறு) ... | ரூ. 2.0.0 |
| உமரொபாருக் (2-வது கலீபாவின் சரித்திரம் விரிவானது. ... | ரூ. 2.4.0 |
| உதுமான், அலீ (3, 4 ஆவது) கலீபாக்களின் சரித்திரம் | ரூ. 2.0.0 |
| நாயக வாக்கியம் 451 ... | ரூ. 1.8.0 |

வி. பி. வேறு.
ஷாஜஹான் புக் ...
30, சாந்தோம், ...



## சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.



## காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில், ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுகைகளைப் போக்கி கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் **காமினியா ஆயில்** உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

## ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

*Sole Agent:*—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285, Jumma Musjid, P. O. Box 2085, Bombay 2.

**மாதவிடாய்** நின்று விட்டதா? எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சுலபமாகவும் ஹானியின்றியும் 24-மணியில் வெளிப்படுத்தும். "சம்பகிரேசனி" உத்தரவாதமானது. 30 வருஷம் புகழ்பெற்றது. கவர்ன்மெண்டு ரிஜிஸ்டர்ட் விலை ரூ. 4—4—0 தபாற் செலவு அணு 12.

**கர்ப்பத்தடை** நீங்கள் விரும்பிய விதம் கர்ப்பத்தடை செய்ய "தம்பதி சாகா" சிறந்த மருந்து. ஹானியற்றது. நிரந்தரம் ரூ. 4—4—0 தாற்காலிகம் ரூ. 2—0—0 தபாற் செலவு அணு 12 தனி.

**ஆண்மை** "மதன் விலாஸ் ரஸாயன்" அற்புத மருந்து வீர்யமின்மை, நரம்புத் தளர்ச்சி, பசியின்மை இல் வாயு, இருமல் முதலியவை ஒரே வாரத்தில் குணமாகும். வாழ்க்கையை நன்கு அனுபவிக்கலாம். ரூ. 2—8—0 தபாற் செலவு அணு 12.

**Kaviraj M. Kavyatirtha (S. W)**
70, Cornwallis Street, Calcutta 6.
Stockist: Milton & Miller, 157, Broadway, Madras.

டாக்டர்
## கே. வி. மாத்தியூ அவர்களுடைய புத்தகங்கள்

—★—

### (1) மலடும் அதன் நிவாரணமும்
ரூ. 3.

"ஆணிலும் பெண்ணிலும் மலடு ஏற்படும் காரணங்களை டாக்டர் மாத்யூ இப்புத்தகத்தில் விவரித்து, அவைகளை எவ்வகையில் நீக்கலாம் என்று கூறுகிருர்".
—The Hindu.

### (2) இளமை பெறும் முறை
ரூ. 3.

ஆண், பெண்ணைப்பற்றி மிகவும் நுட்பமான விஷயங்களில் இதைச் சாதாரண தெளிவான முறையில் சொல்லப்பட்டிருக்கிறது. விருத்தாப்பியத்தினுல் பீடிக்கப்படும் எல்லோருக்கும் இப்புத்தகம் அனுபவ பூர்வமான சமய சஞ்சீவியாயிருக்கிறது.
—Morning Star

✶

ஹெல்த் புத்தகசாலை,
7/8, கிருஷ்ணன் கோயில் தெரு
ஜி. டி., மதராஸ்.
முன் பணம் அனுப்பினுல் தபால் சார்ஜ் இனும்.

| | | | |
|---|---|---|---|
| A. B. C. Talks | 1 | 4 | 0 |
| ராமானுஜதர்சனம் | 1 | 0 | 0 |
| தீனதயாளு | 0 | 12 | 0 |
| பாலகங்காதர திலக் | 0 | 8 | 0 |
| ஸ்வராஜ்யம் | 0 | 8 | 0 |
| குரு நானக் | 0 | 5 | 0 |
| சங்கராச்சாரியார் | 0 | 5 | 0 |
| ஸ்ரீராம ஜனனம் | 0 | 4 | 0 |

தபால் செலவு பிரத்தியேகம்.
சுதேசமித்திரன் புத்தகசாலை,
மவுண்ட்ரோட், சென்னை.

Rgd. No. 2221.

27 வருஷமாய் தென்னாடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Porp: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம். S.I.R.

ஸ்தாபிதம் 1924.

**பிரபல ஜோதிஷர்**



மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. டி பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. "விவாகப் பொருத்தங்கள்" புத்தகம் விலை ரூ. 1. "வாழ்க்கையில் வெற்றி" என்னும் புத்தகம் விலை அணா 6. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,

"சந்திரிகை" எல்டாம்ஸ் ரோட், தேனாம்பேட்டை போஸ்டு, மதராஸ்.

வாழ்க்கையில் இன்பம் எப்போதும் இருக்க

**ஆனந்த குசுமாகர லேகியம்** (Registered)

சாப்பிடுங்கள்

தாது விருத்தி, இரத்த சுத்தி, ஜீரணசக்தி முதலியவைகளை ஏககாலத்தில் கொடுக்கக்கூடியது

தேகத்தின் உஷ்ண நோய்களுக்கு அற்புத பலனை அளிக்கக்கூடிய ஓர் உயர்ந்த ஒளஷதம்

விலை ரூ. 2—8—0 ;) விவரமான காட்லாக் இனாம்

மலையாள மெடிகல் ஹால் (REGD)

189, வக்கீல் புது தெரு, — Post Box 27 — மதுரை.

ஸ்ரீமத் பகவத் கீதை விலை ரூ. 3—8—0 (தபால் செலவு பிரத்யேகம்)

மானேஜர், "சுதேசமித்திரன்" புத்தகசாலை, சென்னை.

## அறிவிப்பு

கொழும்பு மற்றும் அதைச்சுற்றியுள்ள இடங்களுக்கும் மித்திரன் வாரப்பதிப்பு பிரதிகளை பட்டுவாடா செய்யவும், விற்கவும் கீழ் குறிப்பிட்டுள்ள விலாஸதாரரை 1—8—47 முதல் ஏஜண்டாக நியமித்துள்ளோம். சந்தாதாரர்கள் சந்தாபணத்தை அவரிடம் செலுத்தி, ரசீது பெற்றுக் கொள்ளக்கோருகிறோம்.

ஸ்ரீ K. S. தாவூதலி,
61, நாலாவது கிராஸ் தெரு,
கொழும்பு, சிலோன்.

சர்க்குலேஷன் மானேஜர்,
சுதேசமித்திரன், சென்னை.

ரூ. 100 இனாம்

ஆச்சரியகரமான சக்தி வாய்ந்த சித்த யந்திரம்

சக்தி வாய்ந்தது. "குப்த வசீகரண யந்திரத்தை" வைத்திருப்பதாலேயே கஷ்டமான காரியங்களிலும் வெற்றி பெற்றுவிடலாம். பலன் அளிக்கச் செய்வதில் எவ்வித கடின சாதனமும், தேவைகளும் அவசியமில்லை. இதனால் (ஆண், பெண்) நீர் விரும்பும் எவராகிலும் உனக்கு அடங்கி வருவர். அசுப நட்சத்திரங்கள், விரோதி பகை இவைகள் நீங்கி, பரீட்சை, வர்த்தகம், வழக்கு, லாட்டரி, ரேஸ், உத்தியோகம், சந்தானம், ஐசுவரியம், கடன் நிவாரணம், பயங்கர வியாதிகள் இவைகளில் வெற்றி பெறுவதோடு, அதிருஷ்டசாலியாகவும் இருப்பீர்கள். பொய் என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனாம். செம்பு ரூ. 2-0-0. வெள்ளி ரூ. 3-0.0 சுத்த தங்கம் ரூ. 15-0-0.

நரையை ஒழியுங்கள்.

சாயம் மூலம் இல்லை எமது ஆயுர்வேத வாசனைத் தைலம். நரை மயிர் நிரந்தரமாகக் கருப்பாகச் செய்து, மீண்டும் நரை ஏற்படாமல் பாதுகாக்கும். மூளை பலவீனம், மந்தம் முதலியவற்றைப் போக்கி, தலைவலியைக் குணப்படுத்தும், பார்வையை சீர்படுத்தும். நம்பிக்கையில்லையேல் தொகை வாபஸ் என்ற உத்தரவாதம் பெறுங்கள். சொற்ப நரைக்கு ரூ. 2-8-0. அதற்கு மேற்பட்டது ரூ. 3-8-0. எல்லா நரைக்கும் ரூ. 5-0-0

DIN HITAISHI KARYALAYA
P. O. KATRISARAI (GAYA)

வாழிய செந்தமிழ் **சுதேசமித்திரன்** வாழ்க நற்றமிழர்

வாரப்பதிப்பு

Vol. XVIII] ஸர்வஜித்துஆ ஆடிமீ 25உ ★ 1947-ஆம் ஆகஸ்டுமீ 10உ [No. 28

# இந்திய கவர்னர்கள்

ஆகஸ்ட் 15-ந்தேதி பதவி ஏற்க விருக்கும் கவர்னர்கள் ஜாப்தா வெளியாகியிருக்கிறது. அதிலுள்ள பல பெயர்களைப் பார்க்கையில் இந்திய மக்களுக்கு இதுவரையில்லாத ஒரு தனிப்பூரிப்பு ஏற்படுவது இயற்கை. சுதந்திர சகாப்தம் வெகு விரைவில் துவங்கவிருப்பது அனைவருக்கும் தெரிந்ததுதான். எனினும், சாதாரண மக்கள் சம்பந்தப்பட்டவரை, அதிகார மாற்றத்தை அவர்களுக்கு முதன் முதலாகத் திட்டமாகக் குறிப்பது இந்த அறிக்கையே. இந்திய டொமினியனில் மொத்தமுள்ள மாகாணங்கள் ஒன்பது. எட்டு மாகாண கவர்னர்களின் பெயர்கள் அறிக்கையில் காண்கின்றன. அவற்றில் ஆறுபேர் இந்தியர். இரு மாகாணங்களில் அதாவது சென்னையிலும், பம்பாயிலும் தற்போதைய கவர்னர்களான ஸர் ஆர்ச்பால்ட் நையும், ஸர் டேவிட் கால்வில்லும் இன்னும் சிறிதுகாலம் அப்பதவிகளை வகிப்பர். இதோடு லார்டு மௌண்ட்பேட்டன் மேலும் கவர்னர் ஜெனரலாக நியமனம் பெற்றிருக்கிறார். நமது பிரதிநிதிகளது கோரிக்கையின் பேரிலேயே கவர்னர் ஜெனரலும் அவ்விரு கவர்னர்களும் நீடிக்க இசைந்திருக்கின்றனர்.

காந்திஜியும், மற்ற காங்கிரஸ் தலைவர்களும் நெடுநாளாக வற்புறுத்தி வந்துள்ள ஒரு உண்மையை மேற்குறித்த நீடிப்பு சிறிதும் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிப்பதாகும். அதாவது நமக்கு பிரிட்டிஷார் மீது தனிப்பட்ட முறையில் துவேஷம் சிறிதுமில்லை; இதுவரை இங்கு இருந்துவந்துள்ள பிரிட்டிஷ் ஆட்சி முறையுடனேயே நமது போராட்டமெல்லாம். அந்த முறை தற்போது மறைந்தொழிந்து விட்டது. இனி புதிய சகாப்தத்துக்கு ஒத்த ஒரு மனோபாவத்தோடு நம்முடன் ஒத்துழைக்கக்கூடிய ஆங்கிலேயர் யாராவது உண்டானால், அவரை மேலும் உயர் பதவியில் நீடிக்க தயார் என்பதை நமது தலைவர்கள் தெளிவாக்கியிருக்கின்றனர்.

புதிய கவர்னர்களில் ராஜாஜி ஒருவரென்பது தனி கவனம்பெறும். இந்த நியமனத்தின் மூலம் மத்திய சர்க்காருக்கு ஏற்படும் நஷ்டம் பெரித்தானது. அதுவும் தற்போதைய நிலைமையில் ராஜாஜியின் சேவை அவர்களுக்குப் பன்மடங்கு அவசியமாகும். மத்திய சர்க்கார் முன்னுள்ள பிரச்னைகள் மிகச்சிக்கலானவை. யுத்த முடிவுக்குப் பின் சாதாரண நிலைமைக்கு மாறுவதிலுள்ள சிக்கல்கள் ஒருவகை. இதுவரை அந்நியரிடமிருந்த அதிகாரம் தற்போது மக்களாட்சிக்கு மாறுவதிலிருந்து எழுந்துள்ள பிரச்னைகள் இன்னொரு வகை. இவற்றைச் சமாளிப்பதில் ராஜாஜிபோல், தனிப்பட்ட திறமைவாய்ந்தவர்களின் சேவை எவ்வளவு உதவிகரமாயிருக்குமென்று விளக்கத் தேவையில்லை. ஆனால் வங்காள மக்களுக்கு தற்போது மிகக் கொடிய ஒரு சோதனைக் காலம். பஞ்சத்தைத் தொடர்ந்து கட்டுக்கடங்காத வகுப்புவெறிக்குள்ளாகி இப்போது அம்மாகாணம் துண்டிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் எழுந்துள்ள சிக்கல்கள் இணையற்றவையாகும். இவற்றைத் தீர்த்து அங்கு மக்கள் முறைப்படி வாழ வழி செய்வது சாதாரணமான ஒரு பொறுப்பன்று. மேற்கு வங்காளத்தில் அதை ஏற்கவிருக்கும் ராஜாஜி அதை வெற்றிகரமாக நிறைவேற்றிவைப்பாரென்று நாம் எதிர்பார்க்கலாம்.

# ரசிகனின் மனைவி

கோமதி ஸ்வாமிநாதன்

★

பெரிய பிரபலமான துணிக் கடைகளில் பொம்மைகளுக்கு ஆடைகளை அணிவித்து தத்ரூபமாக மனிதர்களைப்போல் நிற்க வைக்கிறார்களே, அதுபோல் நானும், ஆடையாபரணங்களுடன் பொம்மைபோல் நின்றுகொண்டிருந்த காலம்! அதாவது, என் தகப்பனார் எனக்கு வரன் தேடிக்கொண்டிருந்தகாலம். தினசரி ஒருவர் பெண் பார்க்க வருவார். நான் கண்ணாடிக் கூண்டிலிருக்கும் பொம்மைபோல் அவர் முன்போய் நின்று நமஸ்கரிப்பேன். அவராவது அவரைச் சேர்ந்தவராவது என்னைப் பற்றிய அபிப்பிராயத்தை தெரிவிப்பார்கள் என் தகப்பனாரிடம். உள்ளே நான் அவர்களைப்பற்றிய அபிப்பிராயத்தை தெரிவிப்பேன். இரண்டு சாரார்களின் அபிப்பிராயமும் ஒரு நாளும் ஒத்திருக்காது. ஆகையால் என் ஸ்வயம்வரமும் நீடித்துக் கொண்டே இருந்தது.

ஒருநாள் என் தகப்பனார் அவசரமாக வெளியிலிருந்து வந்தார். "பாமா! ஜோராக டிரஸ் பண்ணிக்கொண்டு இரு. மிகவும் நன்றாக ஜாதகம் பொருந்திவிட்டது. பிள்ளையாண்டான் உன்னைப்பார்த்து சம்மதம் என்று சொல்லவேண்டியதுதான்! இந்த வாரமே முகூர்த்தத்தை வைத்துக்கொண்டு விடலாம்" என்றார் உற்சாகத்துடன்.

பொம்மைக்கு அலங்காரம் செய்வதுபோல்தான் எனக்கும் அலங்காரம் செய்திருந்தாள் என் தாயார். எங்கள் வீட்டிற்கு மாப்பிள்ளையாக வரப் பார்த்துக் கொண்டிருப்பவரும், அவர்கூட வந்த நபர் ஒருவரும் கூடத்தில் உட்கார்ந்திருந்தார்கள். என் தகப்பனாரின் டைரக்ஷன் பிரகாரம் (அவர் ஒரு பாங்கியின் டைரக்டர்தான்! ஆனால் எனக்கு வரன் பார்த்துப் பார்த்து இப்போது ஓர் பெரிய சினிமா டைரக்டரின் சாமர்த்தியத்தை அடைந்துவிட்டார்!) நான், காப்பி, டிபனை, வந்திருப்பவர்கள் முன்கொண்டு வைத்துவிட்டு, என் வீணை வைக்கப்பட்டிருக்கும் பக்கமாகப் போய் பீரோ மறைவில் நின்றுகொண்டேன்.

மாப்பிள்ளையின் தோழர், அப்பாவிடம் லோகோபிராமமாகப் பேசிக்கொண்டிருந்துவிட்டு, முக்ய விஷயத்திலிறங்கினார். "பெண்ணிற்குப் பாடத் தெரியுமா?" என்றார். "ஜோராகப் பாடுவாள். வீணையில் நல்ல சாதகம், ஸ்கூல் பைனல் பாஸ் செய்திருக்கிறாள், ஹிந்தியில் நல்ல ஞானம்" என்று அடுக்கிக்கொண்டே போனார் என் தகப்பனார். கூட வந்தவர் முகத்தில் ஆனந்தம் ததும்பியது. 'ரகு அதிருஷ்டக்காரன்தான்" என்று தமாஷாகச் சொல்லி அந்தப் பிள்ளையாண்டான் பக்கம் கண்ணைக் காண்பித்து சிரித்தார். ஆனால் மாப்பிள்ளை ஆசாமியின் முகபாவத்தில் யாதொரு மாறுதலும் தென்படவில்லை. ஒருவேளை கூச்சமோ என்று எண்ணினேன்! என் சிந்தனையைக் கலைப்பதுபோல் 'எங்கே! வீணையை வைத்துக்கொண்டு ஒரு பாட்டுப் பாடச் சொல்லுங்கள்" என்றார் கூட வந்தவர்.



எனக்குக் குதூகலம் மிகுந்து இருந்தது. என்னை இதற்கு முன் வந்து பார்த்தவர்களெல்லாம் என்னுடைய சங்கீத ஞானத்தைப் பற்றியோ, கல்வியறிவைப்பற்றியோ, கவலைப்பட்டவர்களாகத் தெரியவில்லை. வருவார்கள், டிபன் சாப்பிடுவார்கள். என்னைப் பார்த்துவிட்டு, இன்னொரு கப் காப்பியை சாப்பிட்டுவிட்டு ஊருக்குப் போய் தம் அபிப்பிராயத்தை தெரிவிப்பதாய் சொல்லி போவார்கள். மறுநாளே பெண் கருப்பாயிருப்பதால் பிடிக்கவில்லை என்று எழுதிவிடுவார்கள். ஆகவே, இப்போது வந்திருப்பவர்கள் என் சங்கீத அறிவில் ஆர்வத்தைக் காண்பிக்கவே, நான் உற்சாகத்துடன் வீணையை மீட்டிக்கொண்டு பாரதியாரின் பாட்டு ஒன்றை அனுபவித்துப் பாடினேன். மாப்பிள்ளை முகத்தில் ஒரு மாறுதலையும் கண்டுபிடிக்க முடியாதபோனாலும் கூட, வந்திருப்பவர் முகத்தில் ஆனந்தம் ததும்பியது. அவர்கள் கேட்காமலேயே இன்னொரு சௌக்ககால கீர்த்தனையை வாசித்து நிரவல் செய்தேன். ஒருவேளை சங்கோஜத்தினால் மாப்பிள்ளை பிள்ளையாண்டான் முகபாவங்களை வெளிக்காட்டாமலிருக்கிறார் என்று மனதை சமாதானப்படுத்திக் கொண்டேன். "தியாகராஜ கீர்த்தனை. க்ஷேத்திரஞர் பதங்கள், சியாமா சாஸ்திரி உருப்படிகள் தீக்ஷதர், கிருதி, இவைகளெல்லாம் மாப்பிள்ளைக்கு ரொம்ப பிடிக்கும். அவைகளெல்லாம் பெண்ணிற்குப்பாடம் தானா? என்று தகப்பனாரிடம் அவர் கேட்டுத் தெரிந்து கொண்டார். உள்ளக் களிப்புடன் உள்ளே போனேன். ஒரு தினுசாக எனக்கு விமோசனம் கிட்டிவிட்டது என்று பூரிப்படைந்தேன். நல்ல வசீகரமான தோற்றமுள்ளவர். சங்கீதத்தில் மோகம் கொண்டவர். ஆகவே அவரை எனக்குப் பிடித்திருந்ததில் ஆச்சர்யமொன்றுமில்லை.

அவர்களை அனுப்பிவிட்டு என் தகப்பனார் உள்ளே வந்தார். "அப்பா! எனக்குப் பூர்ண சம்மதம்" என்றேன் ஆவலுடன். "அவர்களுக்கும் சம்மதந்தான். ...ஆனால்..." என்று இழுத்தாற்போல் பேசினார். நான் எதிர்பார்த்த உற்சாகம் அவர் தொனியில் இல்லை. எனக்கு என்னவோ போலிருந்தது." "இரு சாராருக்கும் சம்மதமான பிறகு 'ஆனாலுக்கு' என்ன இடம் இருக்கிறது?" என்று கேட்டேன். 'மாப்பிள்ளையாக விருப்பவர் முழுச்செவிடு. எவ்வளவோ வைத்தியம் செய்தும் பலனில்லையாம். கூட வந்தவர் அவன் நண்பனாம். சங்கீதக் கிருக்குப்போலிருக்கிறது. அதுதான் மாப்பிள்ளையின் சார்பாகக் கேட்பதுபோல் உன்னை பாடச் சொல்லிக் கேட்டுக்கொண்டிருந்தான்" என்றார். என் ஆகாயக்கோட்டைகளின் மீது [illegible] விழுவதுபோன்ற உணர்ச்சி [illegible]பட்டது. ஆனால் அந்த இடியினூடேயே பளிச்சென்று மின்னல்போல் ஓர் யோசனை தோன்றிற்று. "அப்பா! கூடவந்தவர் பிரம்மச்சாரிதானே" என்று கேட்டேன். அந்தக் கேள்வியைக் கேட்க எனக்கு எப்படித்தான் துணிவு வந்ததோ தெரியவில்லை. அப்பாவின் முகத்தில் ஓர் வித சோகப்புன்னகை படர்ந்தது. அதை சமாளித்துக்கொண்டு, "அந்தப் பையனும் நல்ல பையன்தான் பிரம்மச்சாரி ஆனால் பரம ஏழை. எங்கேயோ ஸ்வல்ப சம்பளத்தில் குமாஸ்தா வேலை பார்க்கிறானாம்" என்றார். "அப்பா! நான் ஏழையின் மனைவி என்று கவலைப்படமாட்டேன். ஆனால் ஓர் ரசிகனின் மனைவி என்று பெருமிதம் அடைவேன்" என்று தைரியத்துடன் சொல்லிவிட்டு உள்ளே போய் விட்டேன்.

எனக்கும், அவருக்கும் அடுத்த முகூர்த்தத்திலேயே விவாஹம் நடந்தேறியது. என்னுடைய பொம்மை நாடகமும், ஒரு தினுசாய் முடிவடைந்தது. எவ்வளவோ மனக் கஷ்டங்களுக்கிடையே என் பாட்டை கொஞ்சம் கேட்டால் மனம் பரவசமடைந்துவிடுகிறார். திறமையான குதிரை வீரனால், எப்படி அதன் கடிவாளத்தைப் பிடித்து அடக்க முடிகிறதோ, அதுபோல், ரசிகனின் முன் ஏழ்மை எம்மாத்திரம்?

—:o:—





ஸ்திரீகள் அணிந்துகொள்ளும் "ஹாட்"களில் இது ஒரு புது மோஸ்தர். சமீபத்தில் லண்டன் மேபேர் ஹோட்டலில் இந்த 'ஹாட்' மாடல் காட்டப்பட்டது. உலகத்தின் பல இடங்களிலிருந்தும் இதற்கு ஜனங்கள் வந்திருந்தனர்,

## அட்டைப் படம்

★

ஆசிய தேசங்களில் இனி அந்நிய ஆதிக்கம் ஓங்காதென்பதை தெளிவுற நிரூபித்துவிட்டது இந்தோனேஷியா. போதிய ஆயுதபலமில்லாத போதிலும், இச்சிறு தேசத்திற்கு இத்துணை சக்தியும், திடசித்தமும் எப்படி ஏற்பட்டதென கேட்கலாம். இதற்குப் பதில்தான் டாக்டர் சுகர்னோ. இவர் இன்று முன்னணியில் நிற்பதும் மக்களின் பரிபூரண ஆதரவையும் பெற்றிருப்பதும், இருபது வருஷகால இடைவிடா உழைப்பால்தான். இச்சுதந்திரவீரரான சுகர்னோவின் படமே இவ்வார இதழை அலங்கரிக்கிறது.

# எதிர்பாராதது

பத்மாஸனி

ஆபீஸர் கிருஷ்ண மூர்த்தியின் பங்களாவின் முன் ஹாலில் அவருடைய பேட்டிக்காக அனேகம் பெயர்கள் காத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களில் ராமுவும் ஒருவன். ராமுவின் ஹிருதயம் அப்பொழுது படபடவென்று அடித்துக்கொண்டிருந்தது. அவனுடைய அசடு வழிந்த விழியையும் பயந்த பார்வையையும் கண்டு சிலர் அவனையே கூர்ந்து நோக்கினர்கள். ராமுவின் அருகிலிருந்த நடராஜய்யர், "டேய் ராமு! தைரியமாயிருடா! அசட்டுப் பிசட்டுன்னு நடந்துக்காதேடா! ஆபீஸர் வந்தவுடன் தைரியமாகப் பேசவேண்டும். தெரியுமா? தத்துப்பித்தென்று எதையாவது உளறி வைக்காதே," என்று கண்டித்தார்.

எதிரேயிருந்த ஒருவர், "பையன் சிறுசோல்லியோ பயப்படுகிருன்." என்று சமாதானம் சொல்ல வந்தார்.

இந்தக் காலத்திலே இப்படியெல்லாம் இருந்தால் சரிப்பட்டு வருமா ஸார், 19 வயதாகிறது. வாய்சாலமாயிருந்தால்தான் பிழைக்கமுடியும். பாவம் இவன் அப்பா பெருத்த சம்சாரி. 30 வருஷ காலமாகத் தாலூகா ஆபீஸில் உழைத்து உழைத்து ஓடாய்ப் போய் 2 வருஷ காலமாகத்தான் ஹெட் கிளார்க் வேலையாகியிருக்கிறது. பாவம் இந்த வருஷத்தோடு ரிடையர் ஆகப் போகிருர். குடும்பம் நடக்கவேண்டுமே என் நண்பருக்கு. அதனால் இவனுக்கு ஒரு வேலையை வாங்கிக்கொடுக்கலாமென்று அழைத்து வந்தேன் என்று கூறும்போது, ஆபீஸர் வந்து விட்டார். வந்தவர் முதலில் ராமுவை ஏற இறங்கப் பார்த்து புருவத்தை நெரித்துக்கொண்டார். ராமுவுக்கு உடம்பு நடுக்கவாரம் பித்து விட்டது. நடராஜய்யரே முதலில் பேச்சை ஆரம்பித்து, ராமுவின் தகப்பனுருடைய குடும்பத்தையும், அவனுக்கு வேலை கொடுக்கவேண்டிய அவசியத்தைப்பற்றியும் வெகு உருக்கமாக எடுத்துரைத்தார். ஆபீஸர் பெருத்த சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். பிறகு சரி, பார்க்கலாம், என்று கூறிவிட்டு மற்றவர்கள் விஷயத்தையும் சுருக்கமாகவே முடித்துக்கொண்டு தனக்குச் சில முக்கியமான வேலையிருப்பதாகவும் கூறிவிட்டு மாடியிலுள்ள தன் அறைக்குப் போய்விட்டார். தன்னை ஒரு கேள்வியும் கேட்காமல் விட்டதைப்பற்றி ராமுவுக்குப் பரம சந்தோஷம்.

சோபாவின் மீது சாய்ந்த ஆபீஸர் கிருஷ்ண மூர்த்தியின் மனது ஒரு நிலையிலில்லாது பற்பல விதமாக எண்ணமிடலாயிற்று. பெருத்த மனப்போராட்டத்திலிடையே, பத்து வருஷங்களுக்கு முன்னுல் நடந்த சம்பவங்களைப் பற்றிய சிந்தனையில் ஈடுபட்டார்.

தான் செய்ய ஆரம்பித்த காரியங்கள் எல்லாம் தனக்கு 'எதிர்பாராத'தாகவே வந்ததைப்பற்றி நினைத்து ஆச்சர்யப்பட்டுக்கொண்டார். இந்த அதிர்ஷ்டம் கிடைத்ததும் "எதிர்பாராதது" தான் ராமுவை இப்பொழுது சந்தித்ததும் கூட "எதிர்பாராதது" தான். சிறுவயதிலேயே தாயை இழந்த கிருஷ்ணமூர்த்தி தன் மாற்றாந்தாயின் சவரட்சணையில் வளர்ந்து வந்தவர். பத்து வருடங்களுக்கு முன் அவர் எஸ். எஸ். எல். ஸி. வகுப்பிலிருந்தார். பரீட்சை முடிந்தவுடன் மேலே காலேஜில் படிக்க ஆசைப்பட்டுத் தன் தகப்பனரிடம் பிரஸ்தாபித்தார். ஒவ்வொரு வகுப்பிலும் முதன்மையாகத் தேறி வந்ததால் பையனின் புத்திசாலித்தனத்திற்காக அவனைமேலேபடிக்க வைக்கத் தகப்பனுருக்கும், சிறிது ஆசைதான். ஆனல் வறுமை என்னும் பேயும் இளையாளின் பெருத்த சம்சாரமும் அவருடைய ஆசைக்குக் குறுக்கே நின்றது. 5, 6 குழந்தைகள், 50 ரூபாய் சம்பளம். அதைத்தவிர வேறு வரும்படிக்கு வழியில்லை. என்ன செய்வார் பாவம், அழமாட்டாக் குறையாக மன வருத்தத்துடன் தன் நிலையை எடுத்துரைத்தார். கிருஷ்ண மூர்த்தியும் பதில் வகையின் மனச் சோர்வுடன் வாசற் திண்ணையில் வந்து உட்கார்ந்துகொண்டு ஆழ்ந்த சிந்தனையிலீடுபட்டிருந்தான். அப்பொழுது அவனுடைய சிறிய தாயார் வந்து, அழுது கொண்டிருந்த 3-வயதுப் பெண் குழந்தையைக்கொண்டு வந்து அவன் பக்கத்தில் உட்கார்த்தி வைத்துவிட்டு, இந்தச் சனியன் பிடிச்ச குழந்தை, புதுசா இப்போ பண்ணிண்டு வந்த பவுன் சங்கிலியைப் பத்தர் கையிலேருந்து நான் வாங்கறத்துக்குள் பிடிவாதம் பிடிச்சு அழுது புழுது வாங்கித் தன் கழுத்துலே போட்டுண்டிருக்கு, சித்தே பார்த்துக் கோப்பா, அடுப்புலே சாதம் கொதிச்சுக் கூழாய்ப் போயிடும்" என்று கூறிவிட்டு உள்ளேபோய் விட்டாள். அவ்வார்த்தைகள்







அந்த சம்பவம் நடந்து வெகு நாட்களாகி விட்டிருந்தபோதிலும் அதைப்பற்றிய நினைவு எனக்கு நன்ருக இருக்கிறது. ஒரு நாள் என் பாட்டனுர் சாப்பாட்டிற்குப் பிறகு சிரமபரிகாரம் செய்துகொள்வதற்காக திண்ணையில் படுத்துக்கொண்டிருந்தார். எனக்கு ஏழெட்டு வயதிருக்கும். கச்சத்தைக் கட்டிக்கொண்டு தெருவில் கோலி விளையாடிக்கொண்டிருந்தேன். "டேய் மணி! இங்கே வாடா!" என்று உச்சஸ்தாயியில் கூப்பிட்டார் அவர். கோலியைக் கூடப் பொறுக்காமல் ஓடினேன். "டேய்! வலது கண்ணில் ஏதோ தூசி விழுந்துவிட்டது! கண்ணை அகலவிழித்துக்கொள்கிறேன், நீ பலமாக ஊது. தூசி கண்ணிலிருந்து ஒதுங்கிவிடும்" என்ருர் தாத்தா. அவ்வளவுதான்! தம் பிடித்து, புயல் காற்றைக் கிளப்புவதுபோல் ஒரு ஊது ஊதினேன். தாத்தாவிற்குச் சந்தோஷம். கண் சரியாகப் போய்விட்டது. அந்த ஆனந்தத்தில் என்னை ஆசீர்வதித்தார். "நீ மகராஜனுய் பெரிய பெரிய பரீட்சைகளையெல்லாம் ஊதித் தள்ளப் போகிருய்" என்ருர். அவர் ஆசீர்வாதம் பலிக்கத்தான் செய்தது!

எப்படித் தெரியுமா? பரீட்சைகளை ஊதினேனே என்னவோ! கலாசாலையில் நுழைந்ததும் சிகரெட் ஊதக் கற்றுக்கொண்டேன்! இப்போது மகராஜனுக பெரிய பெரிய சிகரெட்டுக்களையெல்லாம் நிமிஷத்தில் ஊதித் தள்ளி விடுகிறேன்.

சட்டினி இல்லாத இட்டிலி எப்படி ரசிக்காதோ, அதேமாதிரி குரு இல்லாத வித்தையும் ரசிக்காது என்று யாரோ சொல்லியிருக்கிருர்கள்! எனக்கு சிகரெட் பிடிக்கும்

*

வித்தையைக் கற்றுக் கொடுக்க என் நண்பன் நாராயணன் குருஸ்தானத்தை மனமுவந்து ஏற்றுக்கொண்டான் (இப்போதுகூட குரு தக்ஷிணையில் ஏதோ பாக்கி இருப்பதாகச் சொல்லிக்கொண்டு கண்டபோதெல்லாம் இரவல் சிகரெட்டிற்கு, உயிரை வாங்குகிருன்!) நாராயணன் குஷிப் பேர்வழி. "இதோபார் மணி! பாடப் புஸ்தகங்களை மாத்திரம் படிச்சு பஸ்டு கிளாசில் பாஸ் பண்ணுவதில் ஒரு தம்பிடி பிரயோசனம்கூட இல்லை. முதலில் 'லைப்'பை 'எஞ்சாய்' பண்ணத் தெரிந்துகொள்ளத் தெரிய வேண்டும். அதற்கப்புறம் தான் படிப்பின் மதிப்பெல்லாம். அப்படி ஸ்டைலாக உதட்டில் சிகரெட்டை வைத்துக்கொண்டு கால் சட்டை' பாக்கெட்டில் கையை விட்டுக்கொண்டு, லாவகமாகப் பேசும் தோரணையிலல்லவா 'லைப்' (Life) இருக்கிறது" என்பான். கலாசாலை விவாதத்தில் ஒரு சமயம் "பரம்பொருளும் புகையிலையும்" என்னும் விஷயத்தைப் பேச எடுத்துக்கொண்டு சக்கைபோடு போட்டான். புகையிலை, பொடி, சிகரெட், இவைகளை பிர்மா விஷ்ணு, சிவன், மூவருக்கும் ஒப்பிட்டு வெளுத்து வாங்கினுன்! அப்படிப்பட்ட குருவிடம் நான் சிக்ஷை பெற்றுக் கொண்டது வீணுகப் போகுமா என்ன? அவனே என்னைப் பார்த்து மூக்கில் கை வைக்கிருன்!

ஒரு நாள் மாலை கலாசாலையில் பந்தாட்டப் போட்டி நடைபெற இருந்தது. ஆட்டம் ஆரம்பித்த பிறகு மழை கிழை வந்து இடைஞ்சல் செய்யக்கூடாதே என்று நினைத்து, ஆரம்பிக்கு முன்பே வானிலை ஆராய்ச்சி செய்தார்கள். தெற்குப் புற வானத்தில் ஒரே கரு மேகம்! அவ்வளவுதான்! மழை கொட்டப்போகிறது என்று நினைத்து அன்றைய ஆட்டத்தை ஆரம்பிக்காமலே நிறுத்தி விட்டார்கள். கடைசியில் பார்த்தால், ஹாஸ்டல் தெற்கு கோடி வராண்டாவில் நானும், என் நண்பர்களும் சிகரெட் புகையினுல் மேக மண்டலம் சிருஷ்டித்ததைக் கண்டுதான் அவர்கள் மழை மேகம் என்று நம்பி மோசம் போனுர்கள்.

கலாசாலை ஹாஸ்டலில் எங்கள் பகுதியிலுள்ளவர்கள் எல்லோரும் சேர்ந்து "புகை பிடிப்போர் சங்கம்" என்று ஒரு சங்கத்தை ஆரம்பித்தோம். அதற்கு நாராயணன் தான் தலைவர். ராகவன்தான் காரியதரிசி! ராகவனின் தாத்தா, அனேக அபூர்வ, யாகங்கள், ஹோமங்கள் செய்து பிரசித்தி பெற்ற வைதீக கனவானும்! "என்னடா ராகவா! இப்படி உன் தாத்தா பெயரைக் கெடுக்கிருய்?" என்ருல் "போடா! அவர் செய்ய விட்டுப் போன அக்னி ஹோத்திரங்களையெல்லாம் இப்போது நான் செய்கிறேன்! அவருக்குத் தானேடா புண்ணியம்!" என்று சவுடாலாகப் பதிலளிப்பான். அப்போது அவன் உதட்டில், எரிந்து கொண்டிருக்கும் அரை சிகரெட் லாவகமாக ஊசலாடிக்கொண்டிருக்கும்!

சங்க மெம்பர்கள் அனைவரும் தினம் இரவுச் சாப்பாட்டிற்குப் பிறகு பதினைந்து நிமிஷம் பொது ஹாலில் கூடி புகைக்க ஆரம்பிப்போம். சிகரெட்டுக்களின் தராதரத்தைப்பற்றியும் குணதோஷங்களைப் பற்றியும் சர்ச்சைகள் நடத்திவிட்டு தத்தம் அறைகளுக்குப் போவோம். அந்தக் காக்ஷி

கண்கொள்ளாக் காக்ஷியாக இருக்கும். சுமார் அறுபது பேர்கள் சேர்ந்து புகை விளப்பினால் சாமான்யமாகவா இருக்கும்? பெரிய மடாதிபதிகள் பூஜைக்கு அரைடன் சாம்பிராணியை அனலில் கொட்டுவது போலல்லவா இருக்கும்! ஒரு சமயம்; யாரோ, ஒரு ஐந்தாங்கால நபர், நாங்கள் சாப்பாட்டிற்குப் பிறகு கூடியிருக்கும்போது, ரகசியமாய் தீயணைக்கும் படைக்கு போன் செய்து விட்டான்! பூம்! பூம்! என்று நெருப்பணைக்கும் இன்ஜின்கள் வந்து ஜலக்குழாயை திறக்கத் தொடங்கின. அப்புறம் நாங்கள் அலறிப்புடைத்த ஓடி விஷயத்தைச் சொல்லி அவர்களை திருப்பி அனுப்ப வேண்டியதாயிற்று.

இத்த சமாச்சாரம் பிரின்சிபால் காதுவரை எட்டி, அவர் எங்க சங்க நடவடிக்கைகளை கவனிக்கப் போக, நாங்கள் சிலகாலம் எங்கள் சங்க நிர்வாகத்தை 'அண்டர் கிரவுண்ட் ஆக்டிவிடி'யாக வைக்க நேரிட்டது.

ஒருநாள் ராகவன் அறை வாசலில் கொட்டை எழுத்தில் "இஞ்சின் ஷெட்" என்று யாரோ எழுதி வைத்து விட்டார்கள். ராகவனுக்கு வந்த கோபத்தைப் பார்க்கவேண்டுமே எல்லோரையும் விசாரித்துப் பார்த்தான் ஒருவராவது ஒப்புக்கொள்ளவில்லை. கடைசியில் தீர்மானமாக 'இது யாரால் எழுதப்பட்டது என்று தெரியும் வரை நான் சிகரெட் பிடிக்கப் போவதில்லை" என்று சாத்வீக சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு விட்டான். எங்களில் அநேகம் பேருக்கு சுருக்கென்றிருந்தது. ஏனென்றால், எங்களுக்கு சிகரெட் தட்டிப் போகும் போதெல்லாம் ராகவனிடத்தில் தான் ஓசிக்குப் போய் நிற்போம்



அவன் இந்தமாதிரி சத்தியாக்கிரகம் செய்ய ஆரம்பித்துவிட்டால் நாங்கள் என்ன செய்வது? அதற்காக நாங்கள் ஏழெட்டுப்பேர்கள் "நான் தான் எழுதினேன் நான்தான் எழுதினேன்' என்று ஒவ்வொருவராகச் சொல்ல ஆரம்பித்தோம். அதன்மேல் ஒரு சிகரெட்டைப் பற்றவைப்பது மூலம் தன் சத்தியாக்கிரகத்தை அவன் முறித்தான்!

, யாரும் புள்ளி விவர இலாகா அதிகாரிகள், கணக்கெடுத்திருந்தால், எங்கள் ஹாஸ்டலில் பிரதி மாதம் எத்தனையோ கோடி சிகரெட்டுகள் காலியாவதாக கணக்கு எடுத்திருப்பார்கள். நான் ஒருவன் ஒரு மாதத்தில் உபயோகிக்கும் சிகரெட்டுகளையே நீளவாக்கில் அடுக்கிக்கொண்டே போனால் மதராசிலிருந்து மாஸ்கோவரை வைக்கலாம்.

கலாசாலையைவிட்டு வெளியே வந்தேன். அங்கே படித்த பாடங்கள் ஒரு அக்ஷரங்கூட பாக்கி இல்லாமல் மறுநாளே மறந்துபோய் விட்டது. ஆனால் புகைப் பிடிப்புப் பாடம் மாத்திரம் கல்லில் செதுக்கினதுபோல் என் மனதில் நின்றுவிட்டது. அதோ போகிறார் நம் லோக்கல் சர்ச்சில் என்பார் ஒருவர். நடக்கும் காளைவாய்டோய் என்பான் ஒருவாண்டு ரயில்வே இஞ்சின் டிரெயிலாகி தெருவிலே ஓடரதுடோய் என்பான் ஒரு அரை டிக்கட். அதையெல்லாம் யார் காதில் போட்டுக் கொள்ளுகிறார்கள்.

ஒருநாள் மைலாப்பூர் டிராமில் போய்க்கொண்டிருந்தேன். ஏகக் கூட்டம்! வாயில் சிகரெட். கையில் ஓர் ஸ்வாரஸ்யமான புஸ்தகம். புகை குபுகுபு என்று வந்து கொண்டிருக்க நான் புஸ்தகத்தில் லயித்திருந்தேன். "மிஸ்டர்! உங்களைத்தானே! அந்த சிகரெட் வாடை சகிக்கமுடியவில்லை. கொஞ்ச நாழிதான் ஊதாமல் இருங்களேன்!" என்றது ஓர் குரல். குரலுக்குச்சொந்தக்காரரை ஏரெடுத்துப் பார்க்காமலேயே நான், "நீங்கள்தான், உங்கள் மூக்கை கையிலே எடுத்து அந்தப் பக்கம் வைத்துக்கொள்வது தானே!" என்றேன். யாரோ 'ஆண்டி சிகரெட்' பேர்வழி என்று நினைத்தேன். அதே வினாடியில் ஆட்டம்பாம் வெடித்தமாதிரி கொல் என்று பெரிய சிரிப்பு எழுந்தது டிராமில். என்னடா என்று தலையை நிமிர்ந்து பார்த்தால், அப்ஸரஸ்போலே, ஓர் காலேஜ் மாணவி என்முன் நின்றுகொண்டிருந்தாள். அவள்தான் எனக்கு தடை உத்திரவு போட்டவள்! அவள் மூக்குக்கூட சற்று பெரிதாக இருப்பதுபோல் என் கண்களுக்கு தென்பட்டது. எல்லோரும் எங்கள் இருவரையும் பார்த்து சிரிக்க ஆரம்பித்துவிட்டார்கள். புஸ்தகத்தைக் கையில் மடக்கி வைத்துக் கொண்டேன். அவள் இறங்கும் ஸ்டாப்பில் இறங்கி அவளிடம் நாகுக்காகப் பேசாததிற்கு மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று நினைத்தேன். ஆனால் அவள் அதற்காக மறுபடியும் சண்டைக்கு வந்துவிட்டால்! எனக்குத் தைரியம்வரவில்லை. மறுபடியும் புஸ்தகத்திலாழ்ந்தேன். அவள் எந்த ஸடாப்பில் இறங்கினாளோ தெரியாது.

அந்த டிராம்சமாச்சாரம் நடந்த சில நாட்களுக்கெல்லாம்,



எனக்கு விவாஹம் நடந்தேறியது. கல்யாணப்பெண், அபூர்வமான அழகு என்று என் வீட்டார்கள் ஏகோபித்து வர்ணித்ததின்பேரில், பெண்ணைப் பார்க்காமலேயே கல்யாணத்திற்கு சம்மதித்துவிட்டேன் நான். முகூர்த்தத்தின் போதாவது அவளை நன்றாய்ப் பார்க்கலாமென்று நினைத்தேன். ஹோமப்புகை அதற்கு இடைஞ்சல் செய்தது. முகூர்த்தம் முடிந்து சாப்பாட்டிற்கு முன்பு சற்று சிரமபரிகாரம் செய்துகொள்ளலாம் என்று நினைத்து தனிமையில் மாடிக்குப் போய் சிகரெட் பிடித்துக்கொண்டிருந்தேன். சிறிது நேரத்திற்கெல்லாம் மாடிப் படிகளில் கலீர் கலீர் என்ற ஓசை கேட்டது. மணப்பெண்ணே சற்றுகூட சங்கோஜமில்லாமல் என்னை நோக்கி வந்தாள். எனக்குத்தான் கொஞ்சம் வெட்கமாயிருந்தது. இருந்தாலும் கடைக்கண்ணால் அவள் முகத்தைப் பார்த்தேன். எனக்குத் தூக்கி வாரிப்போட்டது! அவளேதான்! அன்று டிராமில் என்னை ஆட்டி வைத்தவள். என்ன ஒற்றுமை பாருங்களேன். வாழ்க்கையிலும் என்னை ஆட்டி வைக்க வந்துவிட்டாள்! தொண்டையைக் கனைத்துக்கொண்டு "மன்னிக்க வேண்டும். அன்றைக்கே உன்னிடம் எக்ஸ்கியூஸ் கேட்க வேண்டுமென்று நினைத்தேன்" என்றேன். அவள் கன்னங்கள் குழிந்தன. புன்சிரிப்புச் சிரித்தாள். "மன்னிப்பா! நான் அல்லவா உங்களுக்கு வந்தனம் செலுத்த வேணடும். அன்று டிராமில நீங்கள் ஓரேயடியாய் புஸ்தகத்தில் லயித்திருக்கக் கண்டுதான் அந்தப் புஸ்தகத்திலுள்ள உங்கள் அட்ரஸைத் தெரிந்துகொள்ள முடிந்தது. உடனே அப்பாவிடம் சொல்லி உங்கள் ஜாதகத்தை வாங்க ஏற்பாடு செய்தேன். உங்கள் முகத்தைப்பார்க்க வேண்டுமென்ற ஆசையால்தான், சகிக்க முடியவில்லை சிகரெட் வாடை என்று சொன்னேனே தவிர, நிஜமாக அல்ல" என்றாள். அடேயப்பா! நீ பெரிய வாயாடி!" என்றேன்.

"நீங்கள் அன்று டிராமில் விட்ட புகைதான் என்னிடம் வந்து தூது சொல்லிற்றே" ஏ பெண்ணே! "என் உள்ளம் உன்னைப் சரணாகதி அடைந்துவிட்டது" என்று, ஆகையால் பக்தருக்கு அபயம் அளித்தேன்" என்றாள் அவள். இப்போது சொல்ல என்ன வெட்கம்?

அன்று அவளைப்பார்த்தபோது, மனம் ஒரு நிலையில் இல்லாமல் தானிருந்தது. அவள் மனோதத்துவ சாஸ்திரமாணவியல்லவா! என் உள்ளத்தை சரியாகப் புரிந்துகொண்டிருந்தாள்.

என்மேல் சாய்ந்துகொண்டாள். நான் விட்ட புகை, எங்கள் இருவரையும் திரைபோட்டு, மற்றவர்கள் பார்வையிலிருந்து மறைத்தது. பரீட்சைகளுள் மகாகடினமாகிய காதல் பரீட்சையையும் ஓர் ஊது ஊதிவிட்டேன்!



வாஷிங்டனில் உள்ள இந்திய தூதர் காரியாலயத்திற்கு ராணுவ ஆலோசகராகச் செல்லும் கர்னல் பி. எம். கால். பக்கத்தில் இருப்பது அவர் மனைவி ஸ்ரீமதி தன்ராஜ் காலும், இரு புத்திரிகள் சித்ரலேகாவும், அனுராதாவும்.

சுருட்டைக் குடித்துப்பார்
சுகத்தை நினைத்துப்பார்.

என்று சும்மாவா சொல்லியிருக்கிறார் ஓர் பெரியார்!




அவள் அந்த அறையில் துவண்டு போய் விழுந்து கிடந்தாள். காலையிலிருந்து அவளால் நகரவும் முடியவில்லை. நேற்றுகூட தட்டுத் தடுமாறி எழுந்து அந்த மரத்தடியில் போய் உட்கார்ந்துகொண்டு வழக்கப்படி தன் கண்ணீரால் அதன் தரையை நனைத்தாள். நடுங்கும் கைகள் குரானைப்பற்றி இருந்தது. அதைப் பார்த்துப் படிக்க அவளால் முடியவில்லை. கண் இருண்டது, மனப்பாடம் செய்திருந்த வரிகளை வாய் முணுமுணுத்தது. இன்று அதுகூட அவளால் முடியவில்லை.

நிசப்தமாயிருந்த அந்த சிறைச்சாலையை-ஆம் அது சிறைச்சாலைதான். ஆனால் குறுகிய அறையும் இரும்புக் கம்பிகளும் கிடையாது. அரண்மனையின் விஸ்தாரமான ஒரு அறையும் நல்ல படுக்கையும் பின்னால் உலாவத் தோட்டமும் இருந்தாலும் மற்றபடி சிறைச்சாலைக்குள்ள சகல கண்டிப்பும் இங்குமுண்டு. என்ன இருந்தாலும் பாதுஷா ஔரங்கசீப்பின் அன்பிற்குகந்த புத்திரி ஜபுன்னிஸா அல்லவா சிறையில் இருப்பவள். அதனால்தான் இவ்வளவு சலுகை.

அவள் உடல் நெருப்பாகக் காய்ந்துகொண்டிருந்தது. 'ஜ்வர வேகத்தினால் முகத்தில் ஒரு பளபளப்பு. கண்கள் பஞ்சடைந்திருந்தன. மரண தாகம் எடுக்க ஆரம்பித்தது. அவளுக்கு சிரமத்துடன் படுத்தபடியே அருகிலிருந்த பொற்பாத்திரத்தை கைகள் ஸ்பரிசித்தன. நடுங்கும் கை நிதானம் தவறவே பாத்திரம் உருண்டது. அதனடியிலிருந்த சிறிது தண்ணீர் தரையில் ஓடி உலர்ந்தது அவள் வாழ்க்கையைப்போல!

சப்தம் கேட்டு சிறைக் காவலன் உள்ளே வந்தான். "சாஹிபா...!" என்றான் தலை குனிந்தபடி. உருண்ட பாத்திரத்தை எடுத்துக்கொண்டே அவள் நிலை அவன் கண்களையும் ஈரமாக்கியது.

"தண்ணீர்......" என்றாள் ஜபுன்னிஸா ஈனஸ்வரத்தில்.

சிறிது நேரத்தில உள்ளே வந்த அவன் கையில் ஒரு பாத்திரமிருந்தது. அதில் சுடுதண்ணீர் ஆவியைக் கக்கிக்கொண்டிருந்தது. பாயிசாஹிபாவுக்கு உடல் சரியாயில்லையே என்று பரிவோடு சுடுநீர் கொண்டு வந்திருந்தான் அவன். சுருண்டு சுருண்டு போகும் அதன் ஆவியைப்பார்த்ததும் ஜபுன்னிஸா பயங்கரமாக விழித்தாள். முகம் விகாரமாக மாறியது. அதன் புகை சுழலச் சுழல அவள் தலை சுழன்றது. உலகமே பயங்கரமாகச் சுழல்வதுபோலிருந்தது. "ஹா......" என்று உள்ளம் வெடிக்க அலறினாள் மறு நிமிஷம் அவளது தலை சாய்ந்தது. உடல் ஜில்லிட்டு விட்டது.

சேவகனுக்கு ஒன்றும் புரியவில்லை, திகைத்து நின்றுவிட்டான்.

ஆவியைக் கக்கும் அந்தச் சுடுநீர்தான் அவள் வாழ்க்கையைச் சுட்டு அவளை இந்த அலங்கோலத்திற்கு உள்ளாக்கியது என்பதை அவன் அறிவானா.....?

ஜபுன்னிஸாவின் கைப் பொம்மையாக ஔரங்கசீப் இருந்த காலமும் உண்டு. அப்போது அவளுக்குப் பதினெட்டு வயதுதான். அந்த வயதிலேயே அவள் பெயர் சாம்ராஜ்ய முழுதும் பரவி இருந்தது. அவள் கல்வியும், கவி புனையும் சக்தியும் அதற்குக் காரணமாயிருந்ததோடு அவள் அழகும் அதற்கு ஒத்தாசை செய்தது. அந்தக் காலத்தில் அழகிற்கு உவமையாக அவளைத்தான் சொன்னார்கள்.

ஔரங்கசீப் அவள் மீது உயிரையே வைத்திருந்தார். அவர் போற்றிப் பூஜித்து வந்த அல்லா அருளிய குரானை அவள் மனப்பாடமாக வைத்திருந்ததுதான் அவள் மேல் அவர் கொண்ட அன்பிற்குக் காரணம். ராஜாங்க விஷயங்களில்கூட அவள் யோசனையைக் கேட்பார் ஔரங்கசீப்.

அந்தக்காலத்தில் ஜபுன்னிஸாவிற்கு இவ்வுலகம் இன்ப உலகமாகக் காட்சி அளித்தது. காட்டுமான்போல் துள்ளியது அவள் உள்ளம். அப்போதெல்லாம், அவன் உருவம்தான் அவள் மனக்கண்முன் தோன்றும். அகன்ற மார்பும், உறுதியான தோள்களும் ...அந்தப் புன்சிரிப்பை நினைக்கும்போது...அவள் உள்ளத்தில்ஏதோ ஒருவேதனை. இன்பவேதனைதான். அன்று பதவி ஏற்று லாகூர் போகும்போது பாதுஷாவிடம் விடைபெற்றுப் போக வந்தான் அகேல்-கான் (Akel-Khan) அப்போதுதான் அந்த சுந்தர உருவத்தைக் கண்டாள். அது முதல் அவள் இன்பக் கனவுகளில் அவன் இடம் பெற ஆரம்பித்துவிட்டான்.

அவள் போல் காதல்கொண்டு ஏங்கித் தவிக்கும் வேறொருவனும் இருந்தான். அவன்தான் கவி நாஸிர் அலி (Nazir Ali) அறிவொளி வீசும் முக்ய பொலிவு இளமை கொழிக்கும் உடல், அதோடு கவி. இயற்கையைப் போற்றுபவன் ஜபுன்னிஸாவை (Zeb-un-nessa) அவன் தன் மனக் கோயிலில் வைத்துப் பூஜித்து வந்தான். அவள் அழகோடு அவள் அறிவும்கவிதைகளும்தான் அவனை அவளுக்கு அடிமையாக்கியது.

ஆனால் 'ஜபு'வின் மனதில் அவன் ஒரு இடத்தைப் பெற்றுத்தான் இருந்தான். ஆனால் அது அவன் நினைத்தபடி இல்லை. அவளுக்கு அவனிடம்—அவன் கல்வியிடம்—கற்பனையிடம்—தனி மதிப்பு. ஒரு சிறந்த அறிவாளி என்ற நோக்கோடுதான் அவனைப் பார்த்தாள். அதற்குரிய மதிப்பும் கொடுத்தாள். ஆனால் அவன் விரும்பியது அந்த மதிப்பும் மரியாதையும் இல்லையே அவள் காலடியில் மண்டியிட அவன் காத்திருந்தான்......அவள் காதலுக்காக..."

திடீரென்று ஔரங்கசீப்பின் உடல் நிலை பாதிக்கப்பட்டது. அவர் சில காலம் தலைநகரத்திலிருந்து விலகி நிம்மதியான ஒரு இடத்தில் வசிக்க வேண்டும் என்று அரசாங்க 'ஹக்கீம்கள்' (வைத்யர்கள்) கருதினார்கள்.

லாகூருக்குப் போகலாம் என்று தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தாள் ஜபுன்னிஸா. அங்குள்ள ரம்யமான இயற்கைக் காட்சிகளையும் ஆரோக்கிய வாழ்க்கையையும் அதற்குக் காரணங்களாகச் சொன்னாள். ஆனால் அவள் உள்ளம் அகேல்கானை சந்திக்க இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளத் துடிப்பது அரசருக்குத் தெரியுமா? மகள் விருப்பத்திற்கு மாறுபட்டு நடப்பது கிடையாது. அதன்படியே உடல் நலனைக் கருதி லாகூருக்குச் சென்றார்.

அரசரைவிட்டுப் பிரியாத ஜபுன்னிஸாவும் கூடச் சென்றாள் என்று சொல்லவேண்டியதில்லை.

அப்போது தான் அவள் காதல் நாடகம்—வாழ்க்கையின் இறுதி நாடகத்திற்கு திரை தூக்கப்பட்டது. அகேல் கான் ஜபுன்னிஸாவைப்பற்றி அவள் அழகையும், அறிவையும்பற்றிக் கேள்விப்பட்டிருந்தான். சக்கரவர்த்தி தங்கி இருக்கும்போது அரண்மனைப் பாதுகாப்பு சரியாக இருக்கிறதா? என்று பார்வையிட அவன் எங்கும் ...அந்தப்புரத்திலும்கூட தாராளமாகப் போகக்கூடிய அவனுக்கு ஜபுன்னிஸாவைச் சந்திப்பது கஷ்டமாயில்லை. அவனிடம் மதிப்புக் கொண்ட ஔரங்கசீப்பும் சந்தேகிக்கவில்லை

அகேல்கானின் வீரத்தையும் ஆட்சியையும்பற்றிக் கேள்விப்பட்டிருந்த ஜபுன்னிஸா — அவனைப் பற்றிய கற்பனையிலேயே இருந்த அவள், அவனை நேரில் சந்தித்ததும் விவரிக்க முடியாத உணர்ச்சிப் பெருக்கில் சிலையாகிவிட்டாள். அது வெட்கமோ, ஆனந்தமோ, எங்கோ ஒரு இன்பலோகத்தில் மிதப்பதுபோலிருந்தது. அவள் உள்ளத்தின் உணர்ச்சிப்பெருக்கை அவள் முகம் காட்டிவிட்டது.

தன் வாழ்வின் ஒளியை, கற்பனைக் காதலியைக் கண்டவுடன் அகேல்கானும் பேச முடியாத மோன நிலையில்தான் அவள் அழகைப்பருகிக்கொண்டிருந்தான்.

முதல் சந்திப்பு மௌனத்திலேயே முடிந்தது! மறு தடவை அவள் நந்தவனத்தில் ரோஜாக் கொய்துகொண்டிருக்கும்போது 'குலாப்' என்ற இன்ப நாதம் கேட்டுத் திரும்பினாள். அவள் முகம் ரோஜாப்போலச் சிவந்துவிட்டது. ஆண்களே வரக்கூடாத- அரசர் கூடத்தான்-அந்த இடத்தில் அகேல் நின்றுகொண்டிருந்தான்-

"இங்கு தங்களை அரசர் கண்டால் என்ன நேருமென்று தெரியுமா?" என்றாள் தலைகுனிந்தபடி.

"அந்தக் கத்திகளின் சுழலைக் கண்டு நான் பயப்படவில்லை. உன் விழிச்சுழலில்தான் நான் தலை குனிய வேண்டி இருக்கிறது."

அவள் மோகனப் புன்னகையிலே அவன் எதையும் எதிர்க்க-வரவேற்க-தயாராயிருந்தான். அவன் மூச்சுக் காற்று தன் மேல் படும் இன்பத்திலே அவள் இவ்வுலகையே மறந்தாள். தகப்பனாரின் மூர்க்க குணத்தையும் மறந்தாள். காதல் எதையும் மறக்கச் செய்துவிடும்போலிருக்கிறது. அவர்கள் சந்திப்பும் நாளுக்கு நாள் பலப்பட்டது. நேரம் போவது தெரியாமல் காதல் விளையாட்டுகளில் மெய்மறந்து லயித்திருந்தனர். ரகசியமாகச் சந்தித்து சல்லாபிப்பதில்தான் பூரண இன்பமிருப்பதாகத் தோன்றியது அவர்களுக்கு. இளங் காதலர்களுக்கு ரகசிய சந்திப்பில்தான் இன்பம்போலும்.

ஒருநாள் ஜபுன்னிஸா வரவில்லையானால் உடனே அகேல் அந்தப் பிரிவாற்றாமையை அழகாக ஒரு பாட்டில் அமைத்து அந்தப்புரமனுப்பி விடுவான். அவன் பாரசீகப் பாஷையில் கவி புனைவதில் வல்லவன். அரசரும் அதில் சந்தேகப்படமாட்டார். 'தன் மகளிடம், தன் கவிதையைப்பற்றி மதிப்புரை பெறத்தான் அகேல் அதை அனுப்பி இருக்கிறான்' என்று அவர் தன் மகளின் அறிவில் பூரித்துப் போவார். இப்படி அவர்கள் தங்கள் உள்ளத்து உணர்ச்சிகளை கவிகளிலும் பேசிக்கொள்வதுண்டு. ஔரங்கசீப் தலை நகரை விட்டு



வந்து ஒரு மாதமாயிற்று. அவரால் இனி தாமதிக்க முடியாது, உடல் நிலையும் திருப்திகரமாக இருந்ததால் கிளம்ப ஏற்பாடு செய்தார்.

காதலர்களுக்கு அச்செய்தி வேதனை அளித்ததில் வியப்பில்லை.

"என் ஹிருதய ராணி என்னைத் தவிக்க விட்டுச் செல்லப்போகிறாள் போலிருக்கிறது" என்றான் அகேல். அவன் முகத்தில் பிரிவின் வேதனை ஓடி இருந்தது.

"அகேல்...நம்மைக் காலத்தாலோ தூரத்தாலோ இனி பிரிக்க முடியாது" என்றாள் ஜபுன்னிஸா. அலைபாயும் அவன் அகன்ற மார்பிலே நெளிந்தபடி அன்று வெகு நேரம்வரை ஏதேதோ பேசிக்கொண்டிருந்தார்கள். தங்கள் வியப்புக்களையும் வேதனைகளையும், உள்ளத்து உணர்ச்சிகளையும் பரிமாறிக்கொண்டதில் நேரம் போனதே தெரியவில்லை. ஆனால் பிரியும்போதுமட்டும் ஏதோ முடிவுக்கு வந்திருப்பதை அவர்கள் முகக்குறி காட்டியது.

மறுநாள் அரசர் கிளம்பப் போகிறார், படபடப்புடன் ஒரு தோழி ஓடிவந்து அரசரிடம் எதையோ முணுமுணுத்தாள். உடனே ஔரங்கசீப் ஜனானாவிற்கு விரைந்து சென்றார். அங்கு ஜபுன்னிஸா மஞ்சத்தில் துவண்டு கிடந்தாள். அனல்பட்ட ரோஜாபோலிருந்தது அவள்மேனி. உடனே ஹக்கீம்கள் வரவழைக்கப்பட்டனர்.

அவள் இந்நிலையில் இன்னும் ஒரு மாதத்துக்குப் பிரயாணம் செய்யக்கூடாது என்று அவர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். ஆனால் அரசரால் இன்னும் ஒரு மாதம் காத்திருக்க முடியாதே! ஜபுன்னிஸாவை ஹக்கீம்களின் ஆதரவில் அகேல்கானின் பொருப்பில் விட்டுவிட்டு ஔரங்கசீப் அன்றே கிளம்பிவிட்டார்.

ஔரங்கசீப் என்னவோ மகா தந்திரசாலிதான். ஹிந்துஸ்தானத்தையே நடுநடுங்க வைத்தவர் தான். ஆனால் அவருக்கு காதலர்களின் சூழ்ச்சிமட்டும் ஏனோ தெரியாமல் போயிற்று!

ஆனால் டில்லியில் காதல் தீயால் கருகிக்கொண்டிருக்கும் நாஸிர் அலியின் உள்ளம் மட்டும் இதை நம்பத்தயாராக இல்லை. உடனே தன் ஆட்களை ரகசியமாக உண்மை அறிந்துவர லாகூருக்கு அனுப்பினான். அங்கு ஜபுன்னிஸாவும் அகேல்கானும் நடத்தும் காதல் நாடகத்தைக் கண்டுபிடிப்பது அவர்களுக்கு ஒரு பெரிய விஷயமாக இல்லை. முன்பாவது சக்ரவர்த்திக்குப் பயப்பட வேண்டி இருந்தது இப்போதோ......!

அவர்கள் தங்களை மறந்தார்கள். சூழ்புறத்தையும் ஔரங்கசீப்பின் அரசாட்சியில் அவர்களுக்கும்-ஏன் காற்றுக்குக்கூட காது உண்டு என்பதை மறந்துவிட்டார்கள். காதல் போதையில் திளைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு வெளி உலகைப்பற்றிய உணர்வேது!

உண்மை அறிந்த நாஸிர் அலியின் உள்ளம் துடித்தது. காதலில் ஏற்பட்ட ஏமாற்றத்தால் அவன் வெந்துகொண்டிருந்தான். பொறுமைத் தீ கொழுந்து விட்டது. அந்தத் தீயின் நாக்குகள் ஔரங்கசீப்பைத் தழுவ அதிக நேரமாகவில்லை. தன்னை ஏமாற்றச் சதி நடக்கிறது என்பதை அறிந்தபோது அரசருக்கு வந்த கோபத்திற்கு அளவே இல்லை.

அதன் பலன்.........?

திடீரென்று ஒரு நாள் லாகூர் கவர்னர் பாதுஷாவை எதிர்பாராதவிதமாக வரவேற்கும்படியாயிற்று. நடு நடுங்கிவிட்டனர் காதலர்கள். ஆனால் ஔரங்கசீப் தன் உள்ளத்தில் குமுறிக்கொண்டிருக்கும் கோபக் கனலைப் புன் சிரிப்பால் மூடிக்கொண்டார். இவ்வளவு நாள் இளவரசியை தகுந்தபடி காப்பாற்றிகுணப்படுத்தியதற்காக நன்றி செலுத்திவிட்டு, ஜபுன்னிஸாவுடன் டில்லியைநோக்கி விரைந்தார் சக்ரவர்த்தி. போகும்போது லாகூர் கவர்னரை எப்படி வஞ்சம் தீர்த்துக்கொள்வது என்று திட்டமிட அவர் மறக்கவில்லை.

டில்லி வந்ததும் அவர் நாட்களை வீணாக்கவில்லை. உடனே தன் மனதிற்குப்பிடித்தமான அரசர்களின் பிரபுக்களின் படங்களை எல்லாம் வரவழைத்து ஜபுன்னிஸாவிடம் அனுப்பினார்.

அகேல்கானிடம் மனதைப் பறிகொடுத்திருக்கும் அவளுக்கு-அவன் ஸ்பரிசத்திலே-அணைப்பிலே இன்பங்கண்ட அவளுக்கு வேறு ஒரு உருவம் அவள மனதில் பதியுமா? அவளுடைய அப்போதைய நிலையில் அவன் மன்மதனானாலும் தான் என்ன...?

"பாபா...என் கணவனை நான் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் உரிமையை எனக்கு அளிக்கக்கூடாதா. என் சுகவாழ்வை நீங்கள் விரும்பவில்லையா?" என்றாள் ஜபுன்னிஸா. ஔரங்கசீப்பின் மனமும் இளகும்படி. ஆனால் அவள் தேர்ந்தெடுத்த கணவன் லாகூர் கவர்னர் அகேல் கான் என்பதை அவள் வாயாலேயே கேட்டபோது ஔரங்கசீப்பிற்கு வெறுப்பும் கோபமும் குமுறிக்கொண்டு வந்தது. ஆனால் இந்தத் தடவையும் அவர் அதை உள்ளத்தினடியிலேயே புதைத்துக்கொண்டுவிட்டார்.

தன் வெண்மையான தாடியை உருவியபடி சிந்தனையுடன் ஹுக்காவிலிருந்து புகைச் சுருளைக் கிளப்பிக் கொண்டிருந்தவர் சட்டென்று தூதனைக் கூப்பிட்டு 'லாகூர் கவர்னரை உடனே தர்பாரில் வந்து ஆஜராகும்படி ஒரு உத்திரவைக் கொடுத்தனுப்பினார். அவர் முகம் மர்மமானதொரு புன்னகையால் மலர்ந்திருந்தது.

உத்தரவைப் பெற்ற அகேல்கானுக்கு விஷயம் விளங்கிவிட்டது. அவன் வெகு நாட்களாக பயந்து எதிர்பார்த்துக் கொண்டிருந்ததுதான் அந்த உத்திரவு. தவிர அவனை எச்சரித்து டில்லியிலிருந்த அவன் நண்பர்களும் வேவுகாரர்களும் அப்போதைக்கப்போது செய்தி அனுப்பிக் கொண்டிருந்தனர். அதேபோல இப்போது இந்த உத்திரவைக் கண்டதும் அகேல்கான் ஔரங்கசீப் விரித்திருந்த வலையிலிருந்து தப்ப, அறிரவே மறைந்துவிட்டான்.

அகேல்கான் மறைந்த செய்தி கேட்டு ஜபுன்னிஸா உள்ளம் பதைத்தது. ஒரு நல்ல சந்தர்ப்பத்தை அவன் இழந்து விட்டதாக எண்ணியது பேதை உள்ளம். எவ்வளவு பெரிய கஷ்டமாயிருந்தாலும் எதிர்த்து நிற்கக்கூடியவன் என்று எண்ணி இறுமாந்திருந்த அவளுக்கு இச்செய்தி என்னவோ போலிருந்தது. தன் தகப்பனாரின் மர்மப் புன்னகையை நினைத்தபோது அவள் உடல் நடுங்கியது. அவள் தன் உள்ளத்து வேதனையை ஒருவரிடம் சொல்லலாமென்றால் அது கவி நாஸிர் அலிதான். கல்வி விஷயமாக இருவரும் எப்போதாவது சந்திப்பதுண்டு. அப்போது அவர்கள் தங்கள் கவிதைகளைப் பற்றி விவாதிப்பார்கள். நாஸிர் அலியின் மலர் வதனத்தின் பின்னால் சீறிக்கொண்டிருக்கும் நாக சர்ப்பத்தை அவள் பார்க்கவில்லை. அந்த நல்ல பாம்பு விஷத்தைக் கக்க சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

நாட்கள் சென்றன. ஜபுன்னிஸா அகேல்கானின் நினைவால் ஏங்கிக்



கொண்டிருந்தாள். ஒருநாள் ஒரு பக்கீர் அவள் உள்ளத்தை மகிழ்விக்கும் செய்தியொன்றைக் கொண்டுவந்தான் அவள் காதலனிடமிருந்துதான்.

அகேல்கான் இளவரசன் அக்பரிடம் அடைக்கலம் புகுந்திருப்பதாகவும் விரைவில் அக்பரோடு டில்லிக் கோட்டைக்குள் வெற்றி மாலையுடன் நுழையப்போவதாயும் உடனே தன் காதலியை விமரிசையுடன் ஏற்றுக்கொள்வான் என்பதுதான் பக்கீர் கொண்டு வந்த செய்தி.

அப்போது ஔரங்கசீப்பின் நான்காவது புதல்வன் அக்பர் தன் தகப்பனாருக்கு விரோதமாகக் கலகம் செய்துகொண்டிருந்தான். அவர் காலத்திலேயேதான் டில்லி சிங்காதனத்தில் ஏறப்போவதாகக் கனவு கண்டுகொண்டிருந்தான். அந்த அக்பரிடம்தான் அடைக்கலமடைந்திருந்தான் அகேல்கான்.

இருவரிடையேயும் ரகசியச் செய்திகள் பறந்தன. ஒரு கடிதத்தில் ஜபுன்னிஸா தன்னால் இனி அவனை விட்டுப் பிரிந்திருக்க முடியாதென்றும், உடனே ஒரு முறை வந்து போகும்படியும் எழுதி இருந்தாள். அவனாலும் அவள் பிரிவை தாங்க முடியவில்லை.

சிலநாளைக்கெல்லாம் ஜபுன்னிஸாவின் தோட்டத்தில் ஒரு புது வேலைக்காரன் காணப்பட்டான். அவனுக்கு இளவரசியின் சலுகைகள் பலமாய் இருந்தன. இருள் கவியும் நேரத்தில் இளவரசி அவனோடு நெடுநேரம் தனிமையில் கழித்தாள். பிரிந்த காதலர் கூடினால் அவர்களுக்கு ஒருநாள் ஒரு நிமிஷமாகத்தானே இருக்கும். புதுத்தோட்டக்காரன் அவள் காதலன் அகேல்கானைத்தவிர வேறு யாராய் இருக்க முடியும்?

நாளாக ஆக, இளவரசியும், தோட்டக்காரனும் நடுநிசிக்குமேல் ஜனானாவில் சந்தித்து சல்லாபிக்க ஆரம்பித்தனர். அவன், அக்பரின் திட்டங்களையும் தங்கள் பிற்காலத்தையும்பற்றிச் சொல்வான்.

ஆனால் இது எவ்வளவு நாள் தான் அந்தப்புர ரகசியமாக இருக்க முடியும். அதுவும் நாஸிரின் பாம்புச் செவிக்கும் ஔரங்கசீப்பின் சந்தேக உள்ளத்துக்குமிடையில்!

காதலர்கள் கவலையின்றி இந்திரபோகம் அனுபவிப்பதை எண்ண எண்ண நாஸிரின் உள்ளம் கொதித்தது. பாம்பைப்போல பெருமூச்சுவிட்டான். அவர்கள் இன்ப வாழ்வை அவனால் நினைக்கவும் முடியவில்லை.

இளவரசியின் அன்பைப்பெற்றிருக்கும் தோட்டக்காரனைப்பற்றி மன்னருக்கு அறிவிக்கப்பட்டது.

"ஜகாம்பனாஹ்...நாளை இரவு நடு நிசிக்குமேல் ஒருவித அறிவிப்புமின்றி இளவரசியின் ஜனானாவிற்குப் போனீர்களானால் உண்மையை நேரில் காணலாம்" என்றான் நாஸிர் பாதுஷாவின் முன் மண்டியிட்டு.

ஔரங்கசீப்பின் கண்களில் தீப்பொறி பறந்தது.

நிர்மலமான வான வீதியில் கவலையின்றி ஆட்சி செலுத்திக்கொண்டிருந்தான்; முழுமதி இன்னும் சிறிது நேரத்தில் நடக்கப்போகும் பயங்கரத்தை அறியாமல் நடுநிசி. ஜனானாவில் அரவமடங்கி ஒரு நாழிகையாகிவிட்டது. ஆனால் உள்ளே அழகிற்காகக் கட்டப்பட்டுள்ள தாமரைத் தடாகத்தின் கரையிலே பூச்சொரிந்து நிற்கும். நீர் குழாய்களின் அடியில் அகேல்கானின் மடியில் படுத்திருந்தாள் ஜபுன்னிஸா. மெய்மறந்த நிலையிலிருந்தனர் அவர்கள்.

திடீரென்று ஏற்பட்ட அந்த சப்தம் அவர்களை நினைவுலகிற்குக் கொண்டு வந்தது. ஆம். யாரோ கதவை இடிக்கும் ஓசைதான்! அந்த நடு இரவில் அதை அவர்கள் எதிர்பார்க்கவே இல்லை. அவர்கள் உடல் சில்லிட்டுவிட்டது. நகரவும் தோன்றவில்லை. சப்தம் தொடரவே பரபரப்புடன் ஓடினாள் ஜபுன்னிஸா. காதலனை மறைக்க சுற்றுமுற்றும் பார்த்தாள். சட்டென்று அவள் கவனத்தைக் கவர்ந்தது அருகிலிருந்த ஒரு பெரிய தாமிரப்பாத்திரந்தான். கால் கழுவிக் கொள்ள பன்னீர் கலந்த தண்ணீர் வைக்கப்பட்டிருக்கும் அப்பாத்திரத்தில் அகேல்கானை ஒளிந்து கொள்ளச் சொல்லி சாதாரணமாக அதை மூடிவிட்டு உடலின் படபடப்பை நிதானப்படுத்திக்கொண்டு கதவைத் திறந்தாள். இருந்தும் முகத்தில் முத்து முத்தாக வியர்வை பூத்துவிட்டது. உற்றுக் கேட்டிருந்தால் அவள் ஹிருதயத் துடிப்பை நன்றாக உணர்ந்திருக்கலாம்.

ஒரு மெய் காவலனுடன் சக்ரவர்த்தி ஔரங்கசீப் நின்றுகொண்டிருந்தார். அவர் முகத்தில் சந்தேகத்தின் ரேகை பலமாக ஓடி இருந்தது. "குழந்தாய்......இன்னுமா தூங்கவில்லை...நடு இரவுக்கு மேலாகப் போகிறதே...எனக்குத்தான் அரசாங்கக் கவலைகள். மலை எலி...தக்காணத்தில் கொடுக்கும் தொல்லைகளைப்பற்றிய சிந்தனையில் தூக்கமில்லை. உனக்கென்னம்மா 'ஸெபு'...?" மிகுந்த பரிவோடு குரலில் பதட்டமின்றி கேட்டார் ஔரங்கசீப்; அப்போது அவர் கண்கள் அறையை ஊடுருவி ஆராய்ந்துகொண்டிருந்தன.

"இல்லை—அப்பாஜான்......தூக்கமே வரவில்லை...அதனால் குரானைப்படித்துக்கொண்டிருந்தேன்." என்றாள். ஜபுன்னிஸா-பொய்யாக ஒரு கொட்டாவியை வரவழைத்துக்கொண்டே இருந்தாலும் அவள் குரலின் நடுக்கம் குறையவில்லை.

நடு இரவில்...தனியாக...கூடாதம்மா...... என்று சொல்லியபடி அங்கு போட்டிருந்த ஒரு மெத்தை விரிப்பில் சாய்ந்தார். அறையில் ஒரு அடையாளத்தையும் காணாததால் சிறிது ஏமாற்றம் அவர் முகத்தில் தெரிந்தது. "......ம்... ..ஜபுன்னிஸா....... இப்போதெல்லாம நீ எனக்குக் குரான் படித்துக் காண்பிப்பதே இல்லை... வர வர...நீ என்னை கவனிக்கவே மாட்டேன் என்கிறாய்...எங்கே... கொஞ்சம் படி கேட்கலாம்" என்றபடி சாய்ந்துகொண்டு கண்களை மூடிக்கொண்டார். அவர் மனதில் எவ்வளவோ எண்ண அலைகள்... 'ஆகா...நாஸிர் பேச்சைக் கேட்டு குழந்தைபேரில் தவறாக சந்தேகப்பட்டோமே...' என்ற எண்ணம் பளிச்சிட்டது.

தகப்பனாரின் ஆதரவான அன்பான வேண்டுகோளைக் கேட்டதும் ஜபுன்னிஸாவின் மனம் குளிர்ந்தது. நடுக்கத்திலிருந்து நிதானப்பட்டு குரானைப்படிக்க ஆரம்பித்தாள். அப்போது ஒரு சேவகன் வந்து மண்டியிட்டு ஒரு ஓலையைக் கொடுத்தான்.

அது நாஸிர் அலியால் எழுதப்பட்டிருந்தது. 'குளிர்ந்த நீலக் கடலின் ஆழத்திலேதான்—அதனடியிலேதான்—குரூரம் நிறைந்திருக்கும்...எவ்வளவோ பயங்கரமான ஜீவன்கள் அங்குதான் மறைந்து வாசம் செய்கின்றன. மேலே அழகாய் இருக்கிறதே என்று ஏமாந்துபோகக்கூடாது...' என்ற பொருள்படும்படியான ஒரு பாட்டுதான் அதில் எழுதி இருந்தது.

ஜபுன்னிஸாவின் ஒவ்வொரு அசைவையும் ரகசிய சாரளத்தின் மூலம் கவனித்துவரும் நாஸிர் அலிக்கு அகேல் பாத்திரத்தில் ஒளிந்திருப்பது தப்பமுடியுமா? ஆனல் அரசர் தடையும் கிடைக்காமல் தடுமாறவேதான் இந்தக் கவிதையை எழுதி அனுப்பினன். அது ஒரு தூண்டுகோல்தான் அரசருக்கு காய்ந்த சரகில் ஒரு பொறி நெருப்புபோல.

முதலில் அவருக்குத் தாமரைக் குளம்தான் ஞாபகத்திற்குவந்தது. ஆனல் அதில் முழங்காலளவு ஆழந்தானே. அதில் ஒருவனல் ஒளிந்து கொள்ள முடியாது. அதோடு அந்த ஸ்படிகம் போன்ற நீரினடியில் ஒளிய முயற்சிப்பவன் முட்டாள்தான். மறுநிமிஷம் அவர் பார்வை அறையின் மூலையிலிருந்த செப்புப் பாத்திரத்தின் மேல்—பன்னீர் கலந்த தண்ணீர் உள்ள பாத்திரத்தின்மேல் சென்றது......ஆம்... அவர் மூளை உடனே தீவிரமாக வேலை செய்தது. சக்ரவர்த்தியின் முகம் சுளுங்கிற்று. சிறிது நேரம் மகளின் முகத்தைக் கூர்ந்து நோக்கினர். கடிதம் வந்ததிலிருந்து அவளுக்குப்போன பயம் திரும்பி இருந்தது. அதைமறைக்க குரானை வேகமாகப் படித்துக்கொண்டிருந்தாள். சட்டென்று சக்ரவர்த்தியின் குரல் அதிர்ந்தது—அப்படி இருந்தது அவளுக்கு—"பேட்டிமறந்தே விட்டேன் பார்த்தாயா......இந்த அரசாங்கக் கவலைகளில் கடமையைகூட மறந்துவிடுகிறேன். நீ ஆண்டவனுடைய குரானைப் படிக்கிறய் நான் கால்கூடக் கழுவாமல் சாய்ந்து கிடக்கிறேனே..." என்று சொல்லி பரபரப்புடன் அந்தப்பாத்திரத்தினருகில் சென்ருர் கால் கழுவ...

ஜபுன்னிஸாவிற்குப் பகீர் என்றது. ஒரு தாவலில் முன்னல் சென்று "அப்பாஜான்...என்னிடம் சொன்னல் நான் கொண்டு தரமாட்டேன...இதற்காக நீங்கள் எழுந்திருக்க வேண்டுமா...?" என்று சொல்லி பாத்திரத்திலிருந்து நீரை மொண்டு அவர் கையில் கொடுத்தாள். அவள் கை நடுங்கிக்கொண்டிருந்தது.

ஔரங்கசீப்பின் கண்களிலிருந்தா அவள் நடுக்கமும் படபடப்பும் தப்பமுடியும்?

சட்டென்று அவர் மூளை வேலை செய்தது. தண்ணீரைக் கையில் வாங்கியவர் 'ஹா...ஹா..."என்ற படி அதைக் கீழே வைத்தார். "ஏனம்மா குளிர்ந்த நீரிலா நீ கால் கழுவிக்கொள்கிருய்... அடாடா... இந்த மார்கழி சீதளத்தில் இந்த குளிர்ந்த நீர் உடலில் படலாமோ பிறகு உடம்பிற்கு ஏதாவது வந்தால்...பேட்டி...இந்தமாதிரி எல்லாம் செய்யக்கூடாது. முன்பு அப்படித்தானே......நாம் பீஹாரி லிருந்தபோது திடீரென்று நீ படுத்துவிட்டாய்......இதிலெல்லாம் கண்டிப்பாய் இருக்க வேண்டும்...ஏய்...யார் அங்கே...!" உடனே தாமதிக்காமல் அந்தப் பாத்திரத்திலுள்ள தண்ணீரை காய்ச்சக்கட்டளையிட்டுவிட்டு அங்கேயே உட்கார்ந்தும் விட்டார். சீக்கிரம் சூடேறுவதற்காக பாத்திரத்தின் மூடியை வேறு இறுக மூட உத்திரவிட்டார். சக்ரவர்த்தியின் கட்டளை! பாத்திரம் அதிவேகமாக சூடேற்றப்பட்டது. தாமிரப்பாத்திரம்—அவனின் அடியில் அந்த இரவில் பயங்கரமாகக் காட்சி அளித்தது.

அரசரின் கட்டளை ஜபுன்னிஸாவிற்கு இடி விழுந்ததுபோலிருந்தது. வாயடைத்து நின்ருள். அவள் ஹிருதயத்தில் ஆயிரம் ஈட்டிகள் ஏககாலத்தில் சொருகியது போலிருந்தது. துடித்தாள், உடல்பதறியது, காதலனை 'உயிருடன் வேக வைப்பதை' எந்த உண்மைக்காதலியால்தான் பார்த்துக்கொண்டிருக்க முடியும். ஆனல் ஜபுன்னிஸா பார்த்துக்கொண்டுதான் நின்ருள்! என்ன செய்வது? உண்மையைச்சொல்லி தகப்பனரிடம் மன்னிப்புக்கேட்பதா? அதனல் பலனில்லை என்று அவளுக்குத்தெரியும். அவர் குணம் அவளுக்குத்தெரியும். இருவருக்கும் சாவுதான். அதோடு எப்படிப்பட்ட அவமானம். அனல்கொழுந்துவிட்டு எரிவதானது அவள் உடலே பற்றி எரிவது போலிருந்தது. உடலில் ஒவ்வொரு நரம்பும் தெறித்தது. பாத்திரத்தினருகே சென்று உள்ளே வெந்துகொண்டிருக்கும் காதலனிடம் ஒரு வார்த்தை சொல்ல அவள் உள்ளம் துடித்தது. ஆனல் அதன் அருகில் எப்படிப் போவது......?

அப்போதுதான் ஔரங்கசீப்... "பேட்டி......அந்த ஹுக்காவை எடு..." என்ருர்.

ஆ...சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது. ஹுக்காவை அவரிடம் நகர்த்திவிட்டு அதற்குக் 'கங்கு' எடுக்க எரியும் பாத்திரத்தினருகே சென்ருள்.

மெதுவாக 'காதலா......நமது காதல் உண்மையானல்......நமது கௌரவத்தைக் காத்துக்கொள்ள மௌனமாக சாவை ஏற்றுக்கொள்ளுங்கள்...அல்லா முன்னிலையில் நாம் மறுபடி சந்திப்போம்.' இதைச் சொல்வதற்குள் அவள் கண்களில் நீர் நிறைந்துவிட்டது. குமுறிக் கொண்டுவரும் விம்மலை அடக்க முடியவில்லை.

உண்மைக்காதலனன அகேல்கான் அவள் சொல்வற்கு முன்பே மௌனமாக அவளுக்காக—அவள் கௌரவத்தை காப்பதற்காக—அவள் காதலுக்காக—தன்னைப் பலி கொடுத்துக் கொண்டுவிட்டான்.

பாத்திரத்து நீர் குமிழியிட்டுக் கொதித்து ஆவியைக் கக்கும்வரை ஔரங்கசீப் அதை விட்டு நகரவில்லை. சரியானபடி வஞ்சம் தீர்த்துக்கொண்டதாக அவர் உள்ளம் களிப்பால் துள்ளியது.

நமது எதிரியை—நம் காதலுக்கு தடையாயிருந்தவன் வெந்துகொண்டிருப்பதை ரகசிய பலகணி வழியே பார்த்து மகிழ்ந்துகொண்டிருந்தது ஒரு ராட்சஸ உள்ளம். அது நாஸிர் அலி என்று சொல்லத் தேவையில்லை.

அரசர் போனபின்பு அந்த உண்மைத்தியாகியின் புனிதமான உடலை எடுத்து ஒருவர் உதவியுமின்றி தானே தன் தோட்டத்தில்—முன் தினங்களில் காதல் கனவுகளில்—களியாட்டங்களில் மூழ்கி இருந்த அதே மரத்தடியில் அடக்கம் செய்தாள் ஜபுன்னிஸா. அந்த இடத்தைத் தன் மனதில்தான் அடையாளமிட்டுக் கொண்டாள். தினம் மாலை வேளைகளில் அந்தப் பவித்ரமான பூமியைத் தன் கண்ணீரால் மெழுகுவாள். அதனடியில் உட்கார்ந்து, தன் காதலனின் ஆத்மா சாந்தியடைய குரான் படிப்பாள்.

பிற்காலத்தில் பல காரணங்களால் அவளை ஔரங்கசீப் சிறைப்படுத்தியபோதும் அந்த நந்தவனத்தின் அருகிலேயே தன்னை சிறை வைக்கும்படி கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். தான் இறந்தபின் தன்உடலை அந்த மரத்தடியிலேயே அடக்கம் செய்யும்படியும் கேட்டுக்கொண்டாள்.

தன் அருமை மகளின் கடைசி ஆசையை நிறைவேற்ற ஔரங்கசீப் மறக்கவில்லை.

---





# அலமுவின் கடிதங்கள்

என்.எஸ்.ஸ்ரீ

*அன்புள்ள அம்மாவுக்கு அலமு அநேக தண்டம் ஸமர்ப்பித்த விஞ்ஞாபனம்.*

உலகத்திலே புராண வாயிலாகவும் சரித்திர வாயிலாகவும் மக்கள் பட்டினியால் மாண்டதைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். வேலை அகப்படாமல், குடும்பத்தைக் காப்பாற்ற வகையின்றி எத்தனையோ படித்த வாலிபர்கள் தற்கொலை செய்து கொண்டிருப்பதைப்பற்றியும் கேள்விப்பட்டிருக்கிறோம். தாது வருஷக் கருப்பில்(பஞ்சம்) ஜனங்கள் ஆகாரமின்றி இறந்ததைப் பற்றி நம்ம தாதா கதையாய்ச் சொன்னதையும் கேட்டிருக்கிறோம். அவ்வளவுதூரம் போவானேன். சமீபத்தில் வங்காளத்தில் தெருக்களிலும் சாலையோரங்களிலும் உண்ண உணவின்றி பட்டினியால் லக்ஷக் கணக்கான ஜனங்கள் செத்து மடிந்ததை நேரிலேயே பார்த்துவிட்டோம். ஆனல் இருப்பதற்கு இடம் அகப்படாமல் ஜனங்கள் தற்கொலை செய்துகொண்டதைப்பற்றி இதுவரையில் நான் கேள்விப்பட்டதில்லை. அதையும் பார்த்துவிடும்படியான துர்தசைக்கு நம் தேசம் வந்துவிட்டதே அதைச் சொல்லு. முந்திய கடிதத்தில் வீட்டு கஷ்டத்தைப்பற்றி எழுதுகையில் வீட்டின் சொந்தக்காரர்களைப் பற்றி கொஞ்சம் கடுமையான பாஷையை உபயோகித்துவிட்டோமே என்று பயந்துகொண்டிருந்தேன். ஆனல் சென்ற வாரம் பத்திரிகையில் வெளியாகியிருந்த ஒரு விஷயத்தைப் பார்த்தபோது நான் எழுதினது போறவேபோருதென்ற முடிவுக்குதான் வரவேண்டியிருக்கிறது. பம்பாயில் மதராஸி தம்பதிகள் இரண்டு பேர் தாங்கள் இருந்து வந்த இடத்திலிருந்து வெளியேற்றப்பட்டு தங்குவதற்கு இடமின்றி இரவில் ஒரு காரேஜில் தங்கி மண்ணெண்ணெயில் அவர்களுடைய ஆடைகளைத் தோய்த்து நெருப்பு வைத்து தற்கொலை செய்துகொண்ட செய்தியைப்பார்க்க மனஸுக்கு எவ்வளவு கஷ்டமாயிருந்தது தெரியுமா? நீயேதான் கொஞ்சம் யோசித்துப் பாரேன். இருப்பவர்களை வீட்டைவிட்டுக் கிளப்பிவிட்டால் அவர்களுடைய கதியென்ன ஆவது? எங்கே போவார்கள்? குமாஸ்தா வேலைக்காக கிராமத்தில் கொஞ்சநஞ்சமிருந்ததையும் படிப்புக்கு அழுது தொலைத்தாகிவிட்டது. ஆகவே அந்தப்பக்கம் திரும்புவதற்கு ஆசையில்லை என்பதை முன்னமே ஒரு கடிதத்தில் எழுதியிருக்கிறேன். எங்காவது பந்துக்கள் வீட்டிலோ, சிநேகிதர்கள் வீட்டிலோ வேறு இடம் அகப்படுகிறவரையில், கொஞ்ச நாளைக்குத் தங்கியிருப்போமென்பதற்காவது ஆசையுண்டா? ஒரு வீட்டில் எத்தனை அறைகள் இருக்கின்றனவோ அத்தனை அறையிலும் ஒவ்வொரு குடும்பம் அடைத்துக்கொண்டிருக்கிறது. காற்று, வெளிச்சம் வருவதற்கு இடமில்லாமல் எலி போன்மாதிரி ஒரு சிறிய அறை. அதிலேயே சமையல், படுக்கை. இதற்கிடையில் வருகிறவர்கள் போகிறவர்கள், எல்லாம் நடந்தாக வேண்டும். தாயார், தகப்பனர், பிள்ளை, நாட்டுப் பெண், ஒரு தள்ளாத கிழவி எல்லோருக்கும் சாப்பாடு, படுக்கை எல்லாம் அந்த அறையிலேயே தான். தெருத்திண்ணையிலாவது வந்து படுப்போமென்ருல் இப்பொழுதெல்லாம் அநேக வீடுகளுக்குத் தெருத் திண்ணையே கிடையாது. கட்டிட அமைப்பில் இது ஒரு நாகரிகம் போலும். ஒருவர் படுக்கலாம், இருவர் உட்காரலாம், மூவர் நிற்கலாம் என்று ஆழ்வார்களைப்பற்றிய ஐதிகம் ஒன்று கர்ண பரம்பரையாய்ச் சொல்லப்பட்டு வருகிறது.

ஆனல் அப்படிப்பட்ட சம்பவத்தை இந்த இருபதாம் நூற்ருண்டில் நாகரிகத்துக்கு தனி உரிமை கொண்டாடும் நகரங்களில் பிரத்யக்ஷமாய்ப் பார்த்துவிடலாம். பாஞ்சாலியைப் பற்றிப் பாரதத்தில் படித்திருக்கிறோம். கணவன் ஒருவனக இருந்தாலும் இடக் கஷ்டத்தினல் மாமனர், மைத்துனன் என்று ஐந்தாறு புருஷர்களுக்கிடையில் ஒரே அறையில் அடைந்து கிடக்கும் பாஞ்சாலிகள் எத்தனை பேர்கள் சென்னைப்பட்டினத்தில் இருக்கிருர்கள் தெரியுமா? இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் ஒரு குடும்பம் திடீரென்று வீட்டைவிட்டுக் கிளப்பிவிட்டால் அவர்கள் எங்கே போவார்கள் பாவம்! ஆடையில் மண்ணெண்ணெய் ஊற்றி நெருப்பையும் வைத்துக்கொள்வார்கள். நல்ல தங்காள் மாதிரி குழந்தைகளைக்

கிணற்றில் தள்ளிவிட்டுத் தாங்களும் விழுந்து பிராணனை விடுவார்கள். எனக்கென்னவோ, இங்கே ஜனங்கள் இடத்துக்குப் படுகிற பாட்டைப் பார்த்தால் அப்படித்தான் சொல்ல வேண்டும் போலிருக்கிறது! வர வர இந்த வீட்டுக்கு ஜனங்கள்படும் கஷ்டத்தைச் சொல்லி முடியாது போயேன். கஷ்டம் அதிகரிக்க அதிகரிக்க பணம் பண்ணும் 'சந்தர்ப்பத்தை வீட்டுச் சொந்தக்காரர்கள் பயன்படுத்திக் கொள்வது இயற்கைதானே! அவர்கள் மேல் கூடக் குற்றம் சொல்வதற்கில்லை. இப்படிப்பட்ட அவசரமும் அவசியமுமான ஒரு விஷயத்தில் எறும்பு வேகத்தில் சிரத்தை காட்டப்பட்டு வருவதுதான் வேடிக்கையாக இருக்கிறது. என்னமோ திட்டம் திட்டம் என்று சொல்லி சுதந்திர தினவிழாவின் போது எங்கோ ஒரு இடத்தில் எட்டு வீடுகள் கிரகப் பிரவேசத்துக்கு லாயக்காக இருக்கும் என்ற செய்தி யொன்றைப் பார்த்தபோது எனக்கு ஒரே சிரிப்பாய்த்தான் இருந்தது. மலையை விழுங்குகிற மகாதேவனுக்கு நல்ல பசிக்கு ரேஷன் காலத்து அப்பளம் ஒன்றைக் கொண்டு கொடுத்தால் எப்படியிருக்குமோ அதைப்போலல்லவோ இருக்கிறது விஷயம்! நமக்கெதற்கடியம்மா இந்த வீண் வம்பெல்லாம் என்று நீ சொல்லலாம். நானும் அப்படித்தான் ஒவ்வோர் சமயம் எண்ணுவதுண்டு. இருந்தாலும் இப்படிப்பட்ட செய்திகளைப் பார்க்கிறபோது நம்மையும் அறியாமல்ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்லாமல் இருக்க மனஸு இடந்தரவில்லை. அத்துடன் நான் சொல்ல வந்தது எதற்காகவென்றால் பம்பாய் சம்பவம் சென்னையில் ஏற்படாமல் இருக்க வேண்டுமே என்பதற்காகத்தான்.



"..தம்பதிகள் நெருப்பு வைத்துக் கொண்டார்களாம்..."

வாஸு இப்போது அங்கு வருவதாக இல்லை. இந்திராவினால் ஆனமட்டும் சொல்லிப் பார்த்தாய்விட்டதாம். பிடிவாதமாக இப்பொழுது முடியவே முடியாதென்று சொல்லி விட்டாராம். 'இப்படிக் கூடவா ஒரு முரட்டுப்பிடிவாதம் இருக்கும். அந்த சினிமாக்காரி அடிக்கடி இங்கே வருவதும், அவளைத் தேடிக் கொண்டு அடிக்கடி இவர் ஓடுவதும், இதில் ஏதோ மர்மம் இருக்கத்தான் வேண்டும். சிரோமணிமாதிரிமோசம்தான் போய்விடப்போகிறோம்' என்று பயந்துவிட்டது இந்திரா. 'தனியாக ஒருநாளைக்கு அந்த 'குருகுலத்தை' (சினிமாக்காரியால் ஏற்படுத்தப்பட்டுள்ள கல்லூரி) நாம் பார்த்துவிட்டு வந்தபிறகுதான் இதைப்பற்றி ஒரு முடிவுக்கு வரவேண்டும்' என்றாள் மன்னி. அதேமாதிரி ஒருநாள் நான், மன்னி, இந்திரா, சௌந்தரம் எல்லோருமாக அந்தக் குருகுலத்துக்குத் திடீர் விஜயம் செய்தோம். அதாவது வாஸு அங்கே போயிருக்கும் ஸமயம் பார்த்து. உண்மையிலேயே நாங்கள் பிரமித்தேபோய் விட்டோம். வெகுநேரம் வரையில் எங்கள் கண்களை நம்பவே முடியவில்லை. ஸ்வப்னம் என்றுதான் நினைத்துவிட்டோம் போயேன். 'பாவம்! அந்த சினிமாக்காரியைப்பற்றி வீணிற்காவது சந்தேகப்பட்டோமே! வழி தெரியாது அந்தகாரத்தில் சென்று கொண்டிருக்கும் உலகத்துக்கு அவளால் எப்படிப்பட்ட நன்மை ஏற்படப் போகிறது என்பதைப் பார்த்த போது, அவளைப்பற்றி வீணிற்காவது சந்தேகப்பட்டதற்கு ரொம்பவும் வருத்தப்பட்டுக் கொண்டோம்.

அந்த ஆச்சரியத்தை என்னவென்று தான் சொல்வேன்! அந்த குரு குலத்தில் ஐந்து வயது முதல் 15 வயது வரையில் 100 பேர்களுக்குமேல் படிக்கிறார்கள். நாங்கள் சென்றபோது கீதை வகுப்பு நடந்து கொண்டிருந்தது. என்ன அழகாக கீதை சுலோகங்களைப் பிழையில்லாமல் ஒப்பிக்கிறார்கள் தெரியுமா? இது தவிர திருக்குறள், கம்பராமாயணம், வால்மீகி ராமாயணம் மகாபாரதம் தேவாரம், திருவாசகம், திவ்யப்பிரபந்தம், எல்லாம் அர்த்தத்துடன் ஒப்பிக்கவேண்டுமாம். வடமொழி, தென்மொழி என்ற வித்தியாஸம் பாராட்டாமல் அவரவர்களுக்கு இஷ்டமான பாடம் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. அத்தியாவசியமாய்



"......அடைந்து கிடக்கும் பாஞ்சாலி,......"






## 4

## திருவளர் தாமரை

★

'என்ன அழகான நீலமலர்! அழகே கண்விழித்து நம்மை உற்று நோக்குவது போல் இருக்கிறது!' என்றான் ரஸிகன்.

'அப்படியா செய்தி? உன்னையா பார்க்கிறது? உண்மைதானா? பூக்கள், அழகான இதழ்களைக்கொண்டு உன்னை முத்தமிட வரவில்லையப்பா! இருந்த இடத்தில் இருந்து கொண்டே, பறக்கும் பூச்சிகளின் உதவியைப் பெறுவதற்கு அவற்றின் கவனத்தையல்லவா இழுக்கின்றன? தங்கள் வம்ச விருத்திக்காக அல்லவா இப்படிச் செய்கின்றன? மேலும் இந்த நீல மலர் ஒரு வகைக் களைதான். குடியானவர்களைக் கேட்டுப்பார்: களையைப் பிடுங்கி யெறிந்து உபயோகமான உணவுப் பயிர்களை வளர்ப்பார்கள், இந்த உணவுப் பஞ்சக் காலத்திலே!' என்றான் அறிஞன்.

இந்தச் சம்பாஷணையைக் கேட்டுத்தானோ என்னவோ, அருகே மேய்ந்துகொண்டிருந்த 'நீள் செவியர்,' தம் வெள்ளி மூக்கைச் சிறிது உயர்த்திக் கொண்டு, 'இதுவும் உணவுப் பொருள்தானே; நமக்குச் சத்துள்ள பட்சணம்தான்!' என்று கனைத்துவிட்டு, அப்போதுதான் 'செய்தித் தாள்க'ளைப் போஜனம் செய்திருந்த அருமை வயிற்றில் இந்தப் பட்சணத்தையும் தள்ளிவிட்டார்!

### அனிபெஸன்டின் நோக்கம்

இது, ஆராய்ச்சிக்காரர்களுக்கு வினயமாகச் சமர்ப்பிக்க வேண்டிய ஓர் அருமைக் கதை. இக்கதையில் வரும் 'நீள்செவிய'ரைப்போல் எந்தப் பொருளையும் ரஸித்துப் பார்க்கும் மனிதரும் உண்டு. இந்துக்களுடைய மதக் கொள்கைகளையும் நாகரிகத்தையும் பண்பாட்டையும் இப்படிச் சோதனை பார்த்து அனுபவிப்பவர் உண்டு; வெறுத்துத் தள்ளிவிடுகிறவர்களும் உண்டு. உயர்ந்த மதக் கொள்கைகளை விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்து, 'இவையெல்லாம் மனித முன்னேற்றத்திற்குக் களைதான்!' என்று களைந்தெறிய முயல்பவர்கள் நமது நாட்டிலும் உண்டு. இத்தகைய ஒரு நெருக்கடியான சந்தர்ப்பத்திலே டாக்டர் அனிபெஸன்ட் இந்தியாவிற்கு வந்து, இந்து மதத்தையும் இம்மதச் சார்பிலே பூத்த நாகரிகப் பண்பையும் அபூர்வ அழகு வாய்ந்த பூக்களைப் பார்ப்பதுபோல் பார்த்து அனுபவித்தார்.

விஞ்ஞானி பூக்களை ஆராய்ந்து பார்ப்பதைப்போல் டாக்டர் பெஸன்ட் பார்த்தார் என்று சொல்ல முடியாது. 'மலர் என்பது இலையின் பேதம் தானே; வம்ச விருத்திக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கும் உறுப்பே மலர் என்பது. பூவில், அழகிய இதழ்களைக் காட்டிலும் முக்கியமான உறுப்புகள் மகரந்தத் தூள் கொண்ட கேசரங்களும் சூல் தரிக்கும் தாய்த் தாதுக்களுமே!' என்ற ரீதியில் டாக்டர் பெஸன்ட் இந்து மத ஆராய்ச்சி செய்யாததால், இந்து மதத்திற்கு விசேஷ நஷ்டம் ஒன்றும் ஏற்படவில்லை.

### எச்சரிக்கை-மந்திரம்

அன்னிய சமயிகளும் அன்னிய ஆதிக்கத்தை இந்நாட்டில் நீடூழி காலம் நிலைநிறுத்த விரும்பியவர்களும், 'இந்து மதக் களையைப் பறித்தெறிந்தால்ஒழிய நாட்டுக்கு நன்மையில்லை!' என்று அறை கூவிப் பறை சாற்றினார்கள். நம்மவர்—வைதிகரும் லௌகிகரும்—நடுங்கிப் போயினர். 'ஆமாஞ்சாமி!' என்றனர் சிலர். அக்காலத்திலே டாக்டர் பெஸன்ட் அஞ்சாது பிரசங்க மேடையில் ஏறி நின்று, 'இந்து மதம் இறந்துபோனால், இந்தியாவும் இறந்து போகும், தப்பிப் பிழையாது' என்று எச்சரித்தார்.

அந்தப் பிரசங்கத்தை நான் திருநெல்வேலி ஹிந்து கலா சாலையில் நேரில் கேட்டேன். கர்னல் ஆல்காட் இறந்தபிறகு, பெஸன்ட் அம்மையார் 1907-ம் ஆண்டில் 'தியாஸபி' என்ற பிரம்ம ஞான சங்கத்தின் தலைமைப் பதவி பெற்றார். அப்பதவி பெற்றதும் நாடெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்து, இந்து மதத்திற்கும், நாகரிகப் பண்பிற்கும் அரணாகத் தம் அறிவுத் திறமையுமை உபயோகித்துச் சொற்பொழிவுகள் ஆற்றி வந்தார். அத்தகைய

பிரசங்கங்களில் சிறந்ததொன்று திருநெல்வேலி ஹிந்து கலாசாலையில் நடைபெற்றது. அப்போது "இந்து மதம் அழிந்து போனால், இந்தியாவும் அழிந்துபோகும், தப்பிப் பிழையாது" ('If Hinduism dies, India does not survive but die with it')என்று அவர் மிகவும் உருக்கமான குரலில் சொன்ன அந்த வாக்கியம், ஏதோ ஒரு மந்திர வாக்கியம்போல் என்னை வசீகரித்தது.

## 'வசந்தம்மை'மீது பக்தி

பிறகு நான் பெஸன்ட் அம்மையாரின் பல்வேறு உபந்யாஸங்களையும் புத்தகங்களில் படிக்கலானேன் அவ்வுபந்நியாசங்களின் ஆங்கில நடையழகும் என் உள்ளத்தை வசீகரிக்கத்தான் செய்தது. எனினும் முதல் முதல் நேரில் கேட்ட பிரசங்கமும், வெண்கல இனிமை வாய்ந்த குரலும், கம்பீரமான தோற்றமும், ஈடுபட்டுப் பேசும்போது வசீகர ஒளிவீசிய விசால நெற்றியும் வட்ட முகமும், அன்பு-மின்சாரம் பொழியும் கண்களும் வசீகரித்ததுபோல், அச்சுவாகனம் ஏறிவந்த சொற்பொழிவுகள் அவ்வளவு தூரம் வசீகரித்து விடவில்லை.

நேரில் அம்மையார் பிரசங்கங்களை மேலும் மேலும் கேட்க ஆசைப்பட்டேன். அதிசய மன உறுதி பிரதிபலித்த முகப் பொலிவையும், ஆஜானுபாகுவாய் விளங்கிய அந்த ஞான சொரூபத்தையும் நோக்கியவண்ணம் அச் சொற்பொழிவுகளைக் கேட்பது அமுதமாக இருந்தது. பாதிரிமார்களும் ஐரோப்பியர்களும் 'அஞ்ஞானம்' என்றும் 'அநாகரிகம்' என்றும் இகழ்ந்த கொள்கைகளின் அருமை பெருமைகளை அனிபெஸன்ட் அம்மையாரின் வாக்குவன்மை வாயிலாக அறிந்துகொண்டதும், என்றுமில்லாத சுயமரியாதையும் தன்னம்பிக்கையும் எனக்கு வந்துவிட்டது போலத்தோன்றின.

நமது நாட்டு அறிஞர்களிலும் மேலை நாட்டுக் கல்வி கற்றவர்கள் நமது நாகரிகத்தையும் மதத்தையும் பழிக்கும்போது, அன்னிய நாட்டுப் பெண்மணி—ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த ஆங்கில மங்கை—கடல் கடந்து வந்து நமது மதத்திற்கும் நாகரிகத்திற்கும் அரண் செய்து வருகிறாரே!—என்ற உணர்ச்சி என் இளமையுள்ளத்தை ஒருகாலத்தில் மிகவும் உருக்கிவிட்டது. அனிபெஸன்ட் அம்மையை 'வஸந்தம்மை' என்று சொல்வதில் எனக்கு விசேஷ விருப்பம் ஏற்பட்டது.

இந்தியாவைத் தாய்நாடாகக் கொண்ட பெஸன்ட் அம்மை இந்திய அன்னையின் ஸ்வீகார புத்திரி ஆனதுடன், தமிழ் நாட்டின் தவப்புதல்வியும் ஆகிவிட்டார். சென்னைமாநகரைச் சேர்ந்த அடையாற்றில் பிரம்ம ஞான சங்கம் தன் தலைமை ஸ்தாபனத்தை ஏற்படுத்தியது தமிழ் நாட்டுக்கு விசேஷமான பெருமை என்று எண்ணினேன். அடையாற்றிலே சொர்க்கம்போன்ற சங்க நிலயத்தையும், இந்து மதவளர்ச்சிக்கு ஓர் அறிகுறி போலத் தோன்றும் பிரமாண்டமான ஆலமரத்தையும் நேரில் கண்ணுற்றதும் என்னுடைய பெஸன்ட்-பக்தி பன்மடங்கு அதிகரித்தது.

## கல்விப்பணி-சமுதாயப்பணி

அந்நாளில் அனிபெஸன்ட் அம்மையாரும், பிரம்ம ஞான சங்கமும் அரசியல்—துறையில் இறங்கி உழைக்கவில்லை. இந்து மதத்திற்குப் பாதுகாப்பு அளித்ததோடு, கல்வித்துறையில் டாக்டர் பெஸன்ட் விசேஷ நற்பணி புரியத் தொடங்கினார். இப்போதுள்ள காசிஹிந்து சர்வகலாசாலை அந்நாளில் மத்திய ஹிந்து கலாசாலை (Central Hindu College என்றபெயருள்ள ஸ்தாபனமாக டாக்டர் பெஸன்ட் அம்மையால் தோற்றுவிக்கப்பட்டது.

சமுதாயப் பணியிலும் பிரம்மஞான சங்கம் முனைந்து நின்றதுஎன்பதற்கு ஹரிஜனங்களுக்காக, அனிபெஸன்டுக்கு முன் பிரம்ம ஞான சங்கத் தலைமை வகித்த ஆல்காட் என்பவரின் பெயரில் தோன்றிய கல்விச்சாலையும் ஒரு சான்றாகும். அந்நாளில் டாக்டர் பெஸன்ட் ஜாதிபேதத்தை அவ்வளவாகக் கண்டிப்பதில்லை.

"நாற்பாற்குலம்" என்ற வர்ணாசிரம தர்மத்தை ஒரு லட்சிய அமைப்பாகப் பாராட்டி வந்தார். இது, வைதிகப் பற்றுள்ளவர்களும் பெஸன்ட் அம்மையைப் பாராட்டுவதற்கு ஒரு காரணமாக இருந்தது.

எனினும் பிரம்ம ஞான சங்கம் ஜாதிபேதங்களை ஒப்புக்கொள்ளவில்லை. டாக்டர் பெஸண்ட் அம்மையைக் குருவாகக் கொண்டதே ஜாதி-உணர்ச்சியை மறுப்பதுதானே? அந்நாளில் ருக்மிணி-அருண்டேல் திருமணம் ஒரு பெருங்கிளர்ச்சியை நாட்டில் உண்டாக்கியது. நாளடைவில் டாக்டர் பெஸண்டின் மத அபிப்பிராயங்களைக் காட்டிலும் சமுதாயச் சீர்திருத்தக் கொள்கைகள் என் உள்ளத்தை வசீகரிக்கத் தொடங்கின. எனினும், பெஸண்ட் விக்கிரக வழிபாட்டிற்கு அளித்த ஆதரவும் எனக்குப் பிடித்திருந்தது.

## விக்கிரக வழிபாடு

கிறிஸ்து மதத்தின் தாக்குதலிலிருந்து ஹிந்து மதத்தைக் காப்பாற்றத் தோன்றிய பிரம்ம சமாஜம் பாதி வழியில் நின்றுவிட்டதாகவே எனக்குத் தோன்றியது. ஆரிய சமாஜம் வேதத்திற்கும் இந்துநாகரிகப் பண்பிற்கும் முழு ஆதரவு அளித்தபோதிலும், விக்கிரக வழிபாட்டைக் கண்டிப்பதில் பிரம்ம சமாஜத்தையே ஒத்திருந்தது.



எனக்குப் பிரம்ம சமாஜ ஆரியசமாஜங்களின் தொடர்பு இருந்தபோது, 'விக்கிரக வழிபாடு ஒழிந்துபோனால் இந்துமதம் பிழைத்துப் போகும்!' என்று தோன்றியது. 'உளியிட்ட கல்லையும் புளியிட்ட செம்பையும் போற்றுவது பேதைமை'' என்று அந்நாளில் நானும், திரு கைலாசம் பிள்ளையவர்களின் பிரம்ம சமாஜ ஆதரவில் பேசியது உண்டு.

> **கல்லீலும் செம்பிலு மோஇருப்-**
> **பான்எங்கள் கண்ணுதலே!**

[கண்ணுதல்—நெற்றிக் கண்ணராகிய சிவபெருமான்.] என்ற பட்டினத்துப் பிள்ளையாரின் வாக்கைக்கொண்டு விக்கிரக வழிபாட்டைக்கண்டித்து, 'ராஜராமமோகனராயின் பிரமசமாஜத்தை எங்கள் தமிழ்ப் பேரறிஞர்களும் ஆதரிக்கிறார்கள்!' என்று அந்நாளில் ஆவேசமாய்ப் பேசியது இன்றும் என் நினைவிற்கு வருகிறது. அந்நிலையில் விக்கிரக வழிபாட்டையும் ஆதரித்துப் பேசிய டாக்டர் பெஸன்ட் அம்மையாரின் கொள்கைகளை என்னை அறியாமலே என் பழக்க வழக்கங்கள் ஏற்றுக்கொண்டன என்றுதான் சொல்ல வேண்டும்.

"இந்து மதம் அநாகரிக மதமன்று, அஞ்ஞானிகளின் மதமன்று; இந்து வேதாந்தம் உலகத்திற்கே அவசியமானது; இந்து நாகரிகப் பண்பு இந்தியாவுக்கு இன்றியமையாதது" என்ற அபிப்பிராயம் எனக்கு உறுதிப்பட்டதும், தென்னாட்டுத் திருக்கோயில்களும் விக்கிரக வழிபாடும் அவசியமானவை என்றே எனக்குத் தோன்றிவிட்டன. இந்த நிலைமைக்கு எனக்கு வழிகாட்டியவர்கள் டாக்டர் அனிபெஸன்ட் அம்மையாரும், சுவாமி விவேகானந்தரும்தான். தக்க சீர்திருத்தங்களுடன் ஆலய வழிபாடு எதிர்காலத்திலும் நமது சமய உணர்ச்சிக்கு அவசியம் என்றே இன்றும் கருதுகிறேன்.



ஜப்பானிய சிறுவர்களுக்கு ஆங்கிலம் போதிக்குந் திட்டம் தற்சமயம் டோகியோவில் ஜரூராக நடந்து வருகிறது. "சாக்" (சுண்ணாம்பு) என்ற ஆங்கிலப் பதத்திற்கு ஏற்ற ஜப்பானியப் பதம் என்ன என்பதை யோசிக்கிறார் ஜப்பானிய இளவரசர்.

## பெஸன்டின் தேசீயம்

நாளடைவில் டாக்டர் பெஸன்டின் தேசியப் பற்று எனக்கு ஒரு வரப்பிரசாதம் ஆயிற்று. 'காமன் வீல்' (Common Weal) என்ற பெயரால் டாக்டர்பெஸன்ட் நடத்திவந்த பத்திரிகையை நான் அந்நாளில் பேராவலுடன் படித்து வந்தேன். அனிபெஸன்ட் அம்மையார் நடத்திய 'நியு இந்தியா' என்ற பத்திரிகையுடன் நான் ஏஜண்டாகவும், நிருபனாகவும் தொடர்பு கொண்டு; ஒரு பாதிரியைப்போல் அதன் கொள்கைகளைப் பரப்பி வந்தேன். டாக்டர் பெஸன்ட் அரசாங்கத்தாரின் அடக்குமுறைப் பாணங்களுக்கு 1917ல் இலக்கானதும், என்னுடைய பெஸன்ட்-பக்தி அளவு கடந்து பொங்கியது. கொஞ்சகாலம் பிரம்ம ஞான சங்கத்தின் உறுப்பினனாகவும் இருந்தேன்.

1919-ல் டாக்டர் பெஸன்ட் மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரகப் போராட்டத்தைக் கண்டித்ததும், என் காந்தி-பக்தி பெஸனட்-பக்தியை வென்றுவிட்டது. எனினும் டாக்டர் பெஸன்ட் இந்து சமயத்தை ஓர் அழகான பூவைப்போல்-திருவளர் தாமரைப்போல், கண்டு காட்டிய அந்த அபூர்வ பக்தி சிரத்தை இன்றும் என் உள்ளத்தைவிட்டு மறையவில்லை.

———




ஒரு நாள் கோபுவும் அவன் சிநேகிதர்களுமாகச் சேர்ந்து ஒரு விஷமத்தை செய்துவிட்டு, அவரவர்களுடைய தகப்பனாரிடமிருந்து நல்ல உதை வாங்கிக்கொண்டு விட்டார்கள். அவர்கள் செய்த விஷமத்தினால், அவர்களுடைய அம்மாக்களும் அவர்களுக்கு அன்று காப்பி-டிபன் கொடுக்க மறுக்கவே, என்ன செய்வதென்று தெரியாத நாலு பேரும் விழித்துக்கொண்டு ஒரு மரத்தடியில் போய் உட்கார்ந்து கொண்டார்கள்.

"எங்க அப்பாவும் அம்மாவும் எனக்குக் கொஞ்சம்கூட மூளையே இல்லேங்கரு, நான் செய்த நல்லதை எல்லாம் மறந்துட்டு, நான் செய்யற விஷமத்தை மட்டும்தான் ஞாகத்திலே வெச்சுக்கரு. நமக்கு "வானர சேனை"ங்கற பேர் பொருத்தமாகத்தானும் இருக்கு" என்று சற்று வருத்தத்துடன் சொன்னான் கோபு.

இதற்கு அம்பி, "போடா, பயித்தியம்; அவா என்னமோ சொல்லட்டும், நாங்க மூனு பேரும் உனக்குக் கூடை கூடையா மூளை இருக்குன்னுதானே சொல்றோம்? அதை கேட்காத நீ, இப்படி வருத்தப்படறயே?" என்றான்.

"உங்களுக்கு என்னை நன்றாக்த் தெரிந்திருக்கு, மற்றப் பேருக்கு தெரியவில்லே. அவர்களுக்கும் என் கெட்டிக்காரத்தனத்தை எப்படித் தெரியப்படுத்தறது என்றுதான் தெரியல்லே" என்றான் கோபு.

"எல்லாம் ஒருநாள், தானே தெரிய வறது. நீ வெறுமனே அலட்டிக் கொள்ளாதே" என்று மணி அவனைத் தேற்றினான். இதற்குள் பாலு ரொம்ப பசி எடுப்பதாகப் புகார் சொல்லவே, மற்றவர்களுக்கும் பசி எடுப்பதாகத் தோன்ற ஆரம்பித்தது. நாலு பேரும் பழைய சம்பாஷணையை மறந்து, சாப்பாட்டைப்பற்றிக் கவலைப்பட ஆரம்பித்து விட்டார்கள்.

"இன்றைக்குப் பள்ளிக்கூடத்துக்குப் போறதுக்கு முன்னால் சாப்பிட்டோமே, அப்போ சாப்பிட்டதுதான். இதுவரை இன்னும் சாப்பிடவில்லே. ஏழுமணி நேரமா இப்படி பட்னி கிடந்தா, பசிக்காமல் என்ன செய்யும்?" என்று ஏங்கினான் கோபு.

"நான் ஒரு யோசனை சொல்றேன் கேட்டயளா? அங்கே இருக்கே, அந்த ஓட்டல்லே போய் சாப்பிட்டிட்டு வந்துடலாம்," என்று பாலு யுக்தி சொன்னான்.

"போடா மட்டி, பணம் இருந்தாத்தானேடா ஓட்டலிலே சாப்பாடு போடுவா? நீ மாட்டுக்கு சும்மா சாப்பிட்டுட்டு வந்தா, விறகுக்கட்டையாலேதான் மண்டேலே போடுவா. அடி படறதை விட பட்னி கிடக்கலாம்" என மணி பாலுவைக் கோபித்துக் கொண்டான்.

இதற்கிடையில் கோபு தீவிரமாக யோசனை செய்யலானான்.

"பாலு சொல்றப்பலே அங்கே போய் காப்பியும் டிபனும் வயிறு நிறைய திங்கலாம், ஆனா, நாம் எல்லோரும் சாப்பிட்டானதும் யாராவது இரண்டு பேர் மயங்கி விழறாப்பலே விழுந்துடணும்..." என்று ஆரம்பித்தான் கோபு.







"சிரிக்காதேன்னு ஒரு சினிமாவிலே காட்டருளே, அந்த மாதிரிதானே?" என்று குஷியுடன் கேட்டான் அம்பி.

"ஆமாண்டா, நடுவிலே பேசாதே" என்று அவனை அதட்டிவிட்டு, கோபு மேலே சொல்லத் தொடங்கினான். "இரண்டு பேர் மயங்கி விழுந்துடுவோமோ இல்லையோ, மற்ற இரண்டு பேரும் சேர்ந்து, 'தண்ணீ, தண்ணீ'ன்னு கத்தணும். பின் அந்த ஓட்டல் மானேஜரையும் பிடிச்சுதிட்ட ஆரம்பிச்சுட்டா, அவா பயந்து போய் நம்ம கிட்டே காசு வாங்கிக்காமே வெளிலே விட்டுடுவா. நமக்கும் காப்பி பலகாரம் ரொம்ப ஜோரா கிடைச்சுடும்" என்று தன் பிரசங்கத்தை முடித்தான் கோபு.

"அப்பா, அம்மாவையும் ஏமாத்தலாம் நன்னா" என்று மணி தன் அபிப்பிராயத்தை வெளியிட்டான்.

இந்த முடிவுக்கு வந்த 'வானர சேனை' பக்கத்திலிருந்த ஹோட்டலின்மேல் படை எடுத்து உள்ளே நுழைந்து, ஒரு மேஜையைச் சுற்றி விரைப்பாக உட்கார்ந்துகொண்டது. உள்ளே இருந்தபடியே "பசங்களா! உங்களுக்கு என்ன?" என்று கேட்ட ஹோட்டல் சிப்பந்தியிடம் "நாலு மசால் தோசை, நாலு காப்பி' என்று 'ஆர்டர்' பண்ணிவிட்டு, கோபு தன் சகாக்களைக் கம்பீரமாகப் பார்த்தான். அவர்களும் சற்று நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டார்கள். சிறிது நேரத்தில், "நாலு மசால், நாலு காப்பி!" என்று சொல்லிக்கொண்டே, அவர்களுக்கு முன் தான் கொண்டு வந்ததை வைத்துவிட்டுப் போனான் சிப்பந்தி. நாலு பேரும் நல்லவர்கள்போல, தமாஷாகப்பேசிக்கொண்டே சாப்பிட ஆரம்பித்தார்கள்., தட்டுகள் காலியானதும், கோபு மெள்ள அம்பிக்கும் மணிக்கும் ஏதோ ஜாடை காட்டினான். உடனே, இருவரும் மயங்கி விழுந்துவிட்டது போல, "தபால்" என்று நாற்காலியை விட்டுக் கீழே சாய்ந்தனர். கோபுவும், பாலுவும்ஆளுக்கொருவரை தூக்க முயற்சி செய்யலானார்கள். இதற்குள் ஹோட்டல் சிப்பந்தி, மானேஜர் எல்லோருமாக, இது என்ன என்று பார்க்கப் பர பர வென்று ஓடி வரவே, கோபு பெரிய ரகளை பண்ண ஆரம்பித்துவிட்டான். "என்ன ஸார் இது? காப்பியிலே விஷத்தை சேர்க்க ஆரம்பிச்சுட்டயளா என்ன? நான் இவா அப்பா அம்மா கிட்ட என்ன பதில் சொல்ல?" என்று கத்தினான்.

மயங்கி விழுந்துவிட்ட அம்பியும் மணியும், கோபு 'தண்ணீ' என்று கத்துவான் என்று சற்று காத்திருந்தார்கள். ஆனால், கோபு அதை மறந்தேவிட்டான். பாலுவும் பேசாமல் நின்றான். இதனால், தாங்கள் ஒன்றும் பேசாமல் இருக்கவேண்டும் என்று தெரிந்துகொள்ளாமல், அம்பியும், மணியும் கண்களை மூடிக்கொண்டு ஏககாலத்தில், "ஐயோ மயங்கி விழுந்துட்டோமே! தண்ணீ தண்ணீ! என்று கூச்சல் போட்டார்கள். மயக்கம் போட்டு விழுந்தவர்களுக்குப் பேசமுடியாது என்பது அவர்களுக்கு எப்படித் தெரியும்?

இவர்கள் இப்படிக் கூச்சல் போடவே, மானேஜருக்கு இவர்களுடையகுட்டுவிளங்கி விட்டது. அம்பியையும்



மணியையும் முரட்டுத்தனமாய்க் குலுக்கி, "எழுந்திருங்களடா, திருட்டுப் பசங்களா! எனக்கு உங்கள் வேலை எல்லாம் தெரியும். அப்படி மயக்கம் போட்டாலும், இரண்டு பேருக்கும், ஒரே சமயத்தில் ஒரேமாதிரிதான் போடுமோ? நானும் 'சிரிக்காதே' சினிமா பார்த்திருக்கிறேன். மயங்கி விழுந்தவர்கள் இப்படித்தான் கத்துவார்களோ? 'பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்' என்பது உங்களுக்குத் தெரியாதுபோல் இருக்கு! என்று பரிகாசமாக அதட்டினார். அம்பியும் மணியும் வேறு வழியின்றி எழுந்து உட்கார்ந்து கொண்டார்கள். கோபு தன் யுக்தி பலன்பெறாதுபோகவே, 'திரு திரு' என்று விழித்தான்.

"போக்கிரிப் பசங்களா! ஏமாற்றலாம் என்று நினைத்தீர்கள்? வையுங்கள் பணத்தை!" என்றார் மானேஜர். 'வானர சேனை' பணத்துக்கு எங்கே போகும்? பாவம்!

இவர்களிடம் பணம் இல்லை என்றறிந்த மானேஜர், அவர்களை முறைத்துப் பார்த்துவிட்டு, "காசு கொடுக்காமல் என் ஓட்டலில் சாப்பிட்டதற்கு இதை எடுத்துக்கொள்ளுங்கள்" என்று ஓங்கி தலைக்கு ஒரு குட்டுக்குட்டி, அவர்கள் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினார். அடிபட்டதை நினைக்க, நினைக்க, 'வானர சேனை'க்கு அவமானம் தாங்க முடியவில்லை.

வீட்டுக்குப் போகும் வழியில் கோபு சொன்னான். "எங்க அப்பா எனக்கு மூளை இல்லைன்னது சரியாத்தான் இருக்கு." "போடா, நாங்க உனக்கு மூளை இருக்குங்கறது சரியாத்தான் இருக்கு. நமக்கு இப்பொ வயிறு நிறைஞ்சுதே அது நீ சொன்ன யுக்தியினாலே தானே! இன்னிக்கி அப்பா அடிச்சாரே அவ்வளவுகூட வலிக்கல்லை அந்த மானேஜர் குட்டினது. அதனாலே நமக்கு ஒன்னும் குறைஞ்சு போயிடலை." என்று சந்தோஷப்பட்டான் பாலு.

"நல்ல வேளையா சுப்புவும், பிச்சையும் நாம் அடிபட்டதைப் பார்க்காமல் இருந்தாளே! இல்லாட்டா இப்போ பள்ளிக்கூடம் பூராவும் பரவியிருக்கும் இந்த சமாசாரம்" என்று சமாதானம் அடைந்தது வானர சேனை.

அன்று வீடு சென்றதும், தங்கள் கௌரவத்தை விட்டுக்கொடுக்காமல் இருப்பதற்கு, நாலு பேரும் ராத்திரி சாப்பிடாமலே படுக்கச் சென்றனர். ஹோட்டல் சங்கதியும் வெளியே வரவில்லை.

—




பேசும் இயந்திரமொன்றின் உதவியுடன் ஸ்திரீ போலீஸார் ரஸ்தாக்களில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதை இப்போது ஐரோப்பாவில் காண்கிறோம்.



# தாய்மார்களுக்கு

ஆர். லக்ஷ்மி அம்மாள்

## அன்பே ரட்சை

★

'புதிய கல்வி முறை' என்று குடும்பத்திலும் பள்ளிக்கூடத்திலும் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் குலைத்து விடப் பார்க்கிறார்கள். கட்டுப்பாடில்லாமல் எப்படித்தான் கல்விப்பயிற்சி பெறமுடியும்?' என்று ஆட்சேபிக்கிறவர்கள் உண்டு. 'சரியான கட்டுப்பாடு இல்லாவிட்டால், பிள்ளை துஷ்டப்பிள்ளையாகிவிடும்; படிப்பு வராது, துடுக்குத்தான் வரும்!' என்று வாதிக்கிறவர்கள் உண்டு. இந்நாளில் மாணாக்கர்கள் வேலைநிறுத்தம் செய்வதையும் இவர்கள் தங்கள் கட்சிக்குச் சான்றாக எடுத்துக் காட்டுகிறார்கள்.

### அன்புப் பாசம்

'கட்டுப்பாடு வேண்டாம்' என்று ஒருவரும் சொல்லவில்லை. 'உண்மையான கட்டுப்பாடு அன்பின் விளைவு' என்றுதான் வற்புறுத்த விரும்புகிறேன்.

துள்ளித் திரிகின்ற காலத்திலே, என்
துடுக்(கு) அடக்கிப்
பள்ளிக்கு வைத்திலனே தந்தை
யாகிய பாதகனே!

என்று, கட்டுப்பாடும் கல்விப்பயிற்சியும் பெறாத பிள்ளை பிற்காலத்தில் பிரலாபித்ததாகக் கூறும் தமிழ்ப் புலவர், கல்விப் பயிற்சியின் ஸாரமான நிலையைக் குறித்தாவது கட்டுப்பாட்டின் ஸாராம்சத்தைக் குறித்தாவது உள்ளபடி உணர்ந்து கொண்டவரில்லை என்றுதான் தோன்றுகிறது.

அன்பில்லாத கட்டுப்பாடு அச்சத்தினால் ஏற்படுவது. அச்சமானது குழந்தையின் வளரும் நுண்ணிய சக்திகளைக் குன்றச் செய்துவிடும். அன்புதான் குழந்தைக்குத் தானே கற்றுக்கொள்ளும் வழியில் தக்க துணையாகும். உண்மையான அன்புள்ள தாய்க்குக் குழந்தை உண்மையாகவே கட்டுப்படும் என்பது அறிவுள்ள தாய்க்கு அனுபவம்தான். எந்தத் துஷ்டக் குழந்தையையும் அன்புக் கயிறால் கட்டிவிட முடியும். மற்றக் கயிறுபோல் இதனால் வடு ஏற்படாது, மான உணர்ச்சிக்குக் குறைவு வராது.

### ஒழுங்கு

ஆனால் அன்பைக் குறித்த உண்மையையும் ஒருவாறு தெரிந்து கொள்ளவேண்டும். 'என் குழந்தை மேல் காற்று வீசாமல், வெயில் படாமல் வளர்த்தேன்! என்று பெருமை பாராட்டிக்கொள்ளும் அன்பு உண்மையான அன்பன்று. 'அல்வா, லட்டு, ஜிலேபி என்று கேட்ட கேட்ட தித்திப்புப் பட்சணங்களையெல்லாம் வாங்கிக் கொடுத்து வயிற்றைக் கெடுப்பதும் அன்பாகாது. 'அங்கே போனால் ஆபத்து, இங்கே வந்தால் கஷ்டம்; அது பேய், இது பூச்சாண்டி!' என்று பயமுறுத்துகிற அன்பும், வீணாகச் செல்லம் கொடுக்கிற அன்புபோல் மெய்யன்பாகாது. குழந்தைக்குச் சுதந்திரம் கொடுக்கவேண்டும். உடம்பை உழைக்கும் விளையாட்டுகளிலும் வேலைகளிலும் விருப்பத்தை வளர்க்கவேண்டும்.

'மழையில் கரைந்து போவதற்கும், வெயிலில் உருகிப் போவதற்கும், குழந்தையுடம்பு பாலோ வெண்ணெயாலோ ஆக்கப்பட்டதன்று. கஷ்டப்பட்டுத் தான் காரியங்களைச் சாதிக்க முடியும்; அப்படிக் காரியங்களைச் சாதித்துக்கொண்டு வெற்றிபெறுவதே உண்மையான இன்பம்' என்ற உணர்ச்சியைக் குழந்தைகளிடையே வளர்க்க வேண்டும். இது உண்மையான தாயன்பு விளக்கும் நிலை. இத்தகைய அன்பின் பயனாகக் குழந்தைகளுக்கு ஒழுங்கு தெரிந்துவிடும்; கட்டுப்பாடும் வந்துவிடும்.

பிரம்பை நீட்டி அடித்தாவது, பிரம்பைக் காட்டிப் பயமுறுத்தியாவதுதான் கட்டுப்பாடு ஏற்படுத்த முடியும் என்ற அபிப்பிராயம், குழந்தையின் சுபாவத்தையும் உணர்ச்சிகளையும் குறித்த அறியாமையைத்தான் வெட்டவெளிச்சமாக்குகிறது. தண்டனை முறை அன்புச் செயலன்று, மிருகத் தன்மைதான். மிருகத்தனம் மனிதர்களுக்கு நன்மை தராது, குழந்தைகளுக்கோ மிகமிகக் கேடு விளைக்கும்.

மனோதத்துவக் கலையிலும், குழந்தைகளின் மனோதத்துவத்தை விசேஷமாகத் தெரிந்து கொள்ளவேண்டும். இம் முயற்சி இங்கிலாந்து, அமெரிக்கா, இத்தாலி முதலான நாடுகளில் தீவிரமாக அபிவிருத்தி அடைந்து வருகிறது. நமது நாட்டில் இத்துறையிலே அபிவிருத்தியின் அடையாளங்கள் தெளிவாய்க் காணப்படவில்லை. இத்தகைய ஆராய்ச்சி திடமாக அபிவிருத்தி அடையும்போது 'அன்பினாலும் சுதந்திரத்தினாலுமே ஒழுங்கும் கட்டுப்பாடும் ஏற்படுத்த முடியும்' என்ற அபிப்பிராயம் உறுதிப்படும்.

பயத்தால் ஒரு பையன் பேசாமல் ஊமைபோல் இருந்து விட்டால், அல்லது துள்ளித் திரியாமல் துடுக்கடங்கி இருந்து விட்டால், அது எப்படிக் கட்டுப்பாடாகும்? நெருப்பைக் கட்டுப்படுத்தித் தீபமாக ஏற்றிக்கொள்ளலாம்; நெருப்பையே அணைத்து விட்டால் அது தீபமாகுமா? அப்படியே ஒரு சிறுவனுடைய, வளரும் உணர்ச்சியைக் கொலை செய்ய முயல்வதுதான் கடுமையான தண்டனை முயற்சியெல்லாம்!

### முள்வேலி

வெள்ளைக்காரர்கள் கடுமையான அடக்கு முறைகளால் நாட்டில் அமைதி ஏற்படுத்தி விட்டதாகச் சொல்லவில்லையா? அதற்கு நம் தலைவர்கள் என்ன பதில் சொன்னார்கள்? 'சவக்குழியில் கிடக்கும் பிணமும் அமைதியாகத் தான் கிடக்கிறது; அத்தகைய அமைதி உயிர்ச் சக்தியுள்ள எங்களுக்கு வேண்டவே வேண்டாம்!' என்றார்

கள். அத்தகைய அமைதி குடும்பத்திலும் வேண்டாம், பள்ளிக்கூடத்திலும் வேண்டியதில்லை. ஒவ்வொரு உறுப்பிலும் உயிர்ச்சக்தி நிறைந்து ததும்புகிறதால் அல்லவா குழந்தை விளையாடுகிறது, துஷ்டத்தனம் செய்கிறது? இத்துடுக்கை அடக்குமுறைகளால் அடக்கிவைப்பது உயிர்ச்சக்தியைக் குறைப்பதுதான், வளர்ச்சியைத் தடைபடுத்துவதுதான்; கல்விப் பாதையில் குறுக்கே முள்வேலி போடுவதுதான் அறியாமையின் சிகரம்.

'அரசன் தவறு செய்வதில்லை!' என்று சொல்லி வந்தார்கள். இந்தக் கொள்கையை இந்நாளில் ஒப்புக்கொள்பவர் இல்லை. 'அரசர் தெய்வப் பிறவிகள்!' என்ற அரசியல் கொள்கை மறைந்துவிட்டது. ஆனால், குழந்தையின் தெய்விக உரிமையை ஒப்புக்கொள்ளவேண்டிய யுகம் இது. உண்மையில், குழந்தை செய்வது, தவறாகாது, துடுக்காகாது, துஷ்டத்தனம் ஆகாது. குழந்தை தவறான காரியத்தைச் செய்யக்கூடும்; ஆனால் தவறென்று தெரிந்து தவறு செய்யவில்லை. கள்ளங்கபடற்ற குழந்தையுள்ளத்தில் தவறு இழைக்க இடமில்லை. இதைக்கூட அறிந்துகொள்ள முடியாத தாய் தந்தையர்கள் கலாசாலைப் பட்டங்கள் பெற்றிருந்தபோதிலும் உண்மையான கல்விப் பயிற்சி இல்லாதவர்களே! அறிவுப் பயிற்சியோடு அன்புப் பயிற்சியும் சேரும்போதுதான் சரியான கல்விப் பயிற்சி ஏற்படுகிறது.

'இப்படியெல்லாம் வேதாந்தம் பேசுகிறாய், குடும்பத்தில் பதார்த்த நிலை தெரியாமல்! எத்தனையோ கவலைச் சுமைகளைத் தாய் தாங்க வேண்டியிருக்கிறது! வீட்டு வேலை செய்த களைப்பும் பணக் கவலை முதலியவற்றோடு சேர்ந்துகொள்கிறது. அதனால் தான் தாய்க்குக் கோபம் வருகிறது, குழந்தைக்கு அடி விழுகிறது!' என்று வாசகர்களில் சிலர் பேசிக்கொள்வது என் காதில் விழுகிறது. தலையிலே தாங்க முடியாத சுமையையும் தாங்கலாம்; நெஞ்சிலே கவலைச் சுமை தாங்குவோர் முழு ஆற்றலுடனும் தங்கள் கடமைகளைச் செய்ய முடியாது' என்று தெரிந்துகொள்வதும் கல்விப் பயிற்சியின் முக்கியமான அம்சமாகும். மேலும் நெஞ்சில் உள்ள கவலை தன் முகத்திலே தோன்றத் தாய், குழந்தையை நோக்குவதே தவறு: கவலைக் குறியைக் கோபவெறியாக்கிக்கொண்டு குழந்தையை மொத்துவது தவறுமட்டுமல்ல, அறியாமையின் சிகரமாகும்.

தக்க அறிவுப் பயிற்சி வாய்ந்த தாய் தன் கவலைகளைக் குழந்தைகள் பாராமல் மறைத்துவிடுவாள்: முகத்திலே புன்னகை தோன்ற அகமகிழ்ச்சியை வருவித்துக் கொண்டுதான் குழந்தையை நோக்குவாள். கவலை நின்ற முகத்தைக் காட்டாமல் அகமகிழ்ச்சியும் முகமலர்ச்சியுமாகக் குழந்தையைக் குளிர நோக்குவதே ஒரு வகைக் கல்விப் பயிற்சிதான்! இத்தகைய தன்னடக்கமும் மகிழ்ச்சியுணர்வும் குழந்தைகளையும் தொத்திக்கொண்டு அவர்களுக்கும் நன்மை செய்யும் என்பது திண்ணம். பயிர்பச்சைகளுக்குச் சூரிய வெளிச்சம் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியமானது குழந்தைகளுக்கு மகிழ்ச்சி. குழந்தைகளை உத்ஸாகப்படுத்தினால், அவர்கள் தாமே ஒழுங்கு பெற்றுச் சுதந்திரமாக, அன்பு-நெறியில் கட்டுப்பாடு பெறுவர்.

## ரட்சை

சந்தோஷம், நம்பிக்கை, பிரியம், மரியாதை ஆகிய சக்திகளை உபயோகித்துக்கொண்டுதான் கட்டுப்பாடு உண்மையாக ஏற்பட முடியும். தாய்க்கும் குழந்தைக்கும் தோழமையுணர்ச்சி ஏற்படுவதே நலம் தரும். இது தெரியாத் தாய்மார் "எல்லாம் குழந்தையின் நன்மைக்காகத்தான்! அன்பினால் தான் தண்டிக்க வேண்டியிருக்கிறது'!" என்றெல்லாம் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளலாம். ஆனால் 'குழந்தையின் பிழைகள் பெரும்பாலும் வளரும் பருவத்தின் இயற்கை அறிகுறிகளே' என்று தெரிந்துகொண்டு, அன்பையும் பொறுமையையும் அதிகப்படுத்திக்கொள்வதுதான் குழந்தையின் நன்மைகளுக்கெல்லாம் உரிய சூழ்நிலை அமைப்பதாகும்.

குழந்தையின் ஊக்கத்தையும் உத்ஸாகத்தையும் மங்கவோ மழுங்கவோ செய்யாமல் அவற்றைச் சரியான வழிகளில் திருப்பி விடவேண்டும் என்பது மனோதத்துவக் கலையின் போதனைகளில் ஒன்று. இந்தப் போதனைக்கு இணங்கக் குழந்தைகளை உற்று நோக்குவோமானால், 'துடுக்கில்லாத, துஷ்டத்தனம் செய்யாத, குழந்தைகள் பெரும்பாலும் ஆரோக்கியக் குறைவுள்ளவர்கள், அல்லது ஏதோ சூட்சுமமான நோயுள்ளவர்கள்!' என்று நிர்மானிக்கவும் நேரிடலாம்.

துஷ்டப் பிள்ளையைத் தாய் உள்ளபடித் தெரிந்துகொள்ள வேண்டும்; அன்புடனும் அகமகிச்சியுடனும் தெரிந்து கொள்ள வேண்டும்; அப்போது குழந்தையும் தாயைத் தெரிந்துகொண்டு, தானே ஒழுங்காகத் தன் ஊக்கத்தையும் உத்ஸாகத்தையும் பயன்படுத்தக் கற்றுக்கொண்டு விடும்.

ஆகவே, அன்புதான் கட்டுப்பாட்டுக்குச் சிறந்த வழி. ராஜபாதை, தண்டனை முதலான குறுக்கு வழிகள் காட்டு வழிகளே; மிருகத் தன்மையான உபாயங்களே. அன்புச் சூழலில்தான் குழந்தைப் பயிர் ஒழுங்காக முழு வளர்ச்சியும் பெற முடியும். அன்புச் சூழலில் 'தாய்மனம் கோணலாகாது' என்ற உணர்ச்சியைக் குழந்தை தானாகவே அடைந்து திருந்திவிட இயலும். அடக்குமுறைக்கும் தண்டனைக்கும் அஞ்சும். குழந்தைகள் தவறுகளை மறைக்கப் பார்க்கும். அன்பும் அனுதாபமும் பொறுமையும் தாய்மையின் சக்திகள்: இவை குழந்தைகளுக்குப் பயன்படவேண்டியது மிகவும் அவசியமாகும்.

சில குழந்தைகள் அதீத உணர்ச்சி வாய்ந்தன. இத்தகைய உணர்ச்சியைக் கடுஞ்சொல்லும் புண்படுத்தும். இக்குழந்தைகள் மீது அடக்குமுறைகளைப் பிரயோகிப்பது தவறுமட்டுமில்லை. ஒரு பெரும் பாவச் செயல் என்றே சொல்லலாம். மிருகங்களுக்குச் செய்யும் கொடுமைகளைத் தடுக்கக்கூடச் சங்கம் இருக்கிறது. குழந்தைகளுக்கோ இத்தகைய பாதுகாப்பும் இல்லை. தாய்மார் அடைந்திருக்கும் அல்லது அடைய வேண்டிய பயிற்சிதான் தக்க ரட்சையாக இருக்க முடியும்.

---





வரகூர் வேங்கடதாஸன்

## இதற்கு முன்

"உக்ரோதயம்" என்பது, ஓர் அதிசய நாகரத்ன மாலையின் பெயர். அம்மாலையை அணிந்தவள் 'பூஸுந்தரி' என்பவள். கங்கநாட்டரசன் சிவமாறன் என்பவனின் புதல்வி பூஸுந்தரி. அவளையும் அம்மாலையையும் அடையவேண்டும் என்று உறுதிகொண்டான் பாண்டியன் ராஜஸிம்மன். பூஸுந்தரியைப் பாண்டியனுக்குக் கொடுக்க மறுத்தான் சிவமாறன். அது காரணமாகப் போர் மூண்டது.

போரில் ராஜஸிம்மனிடம் தோல்வியடைந்தான் சிவமாறன். உடனே தன் புதல்வி, புதல்வர்களுடன் பல்லவ நாட்டின் தலைநகரான காஞ்சியை அடைந்தான். பல்லவன் உதவிபுரிவதாக வாக்குறுதி அளிக்கின்றான். திடீரென்று பல்லவன் மரணமடைகிறான். அவனுக்குப் பின் அரசாளச் சந்ததி இல்லை.

ராஜவம்சத்து நந்திவர்மனும், பல்லவனின் கணிகை மகனான சித்திரமாயனும் அரசாட்சிக்குப் போராடுகிறார்கள். நகரமக்கள் சபை கூடுகிறது. அதில் நந்திவர்மன் அரசனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். இதனால் சித்திரமாயன் பகை கொண்டு நாட்டை விட்டோடி பாண்டியனை அடைகிறான்.

இந்நிலையில் சிவமாறன் பூஸுந்தரியை நந்திவர்மனுக்கு மணம் புரிவிக்க முற்படுகிறான். அவள் மறுத்து பாண்டியனை விரும்புகிறாள்; அவள் சகோதரர்களான வல்லபன், குணபரன், இருவரும் பூஸுந்தரியைப் பாண்டியனுக்குக் கொடுக்க விரும்பி பாண்டியனுடன் போகிறார்கள்.

பூஸுந்தரியை அடைய விரும்பிய நந்திவர்மனும் அவளால் அவமானம் அடைகின்றான்.

எனவே, பாண்டியன் படைகளுடன் காஞ்சியை முற்றுகையிடுகிறான். போருக்குப் புறப்பட்டுக் கடும்போர் செய்கிறான் நந்திவர்மன். பல்லவ-பாண்டியப் போரில் பாண்டியனுக்கு உதவிபுரிய வந்த சளுக்கிய விக்கிரமாதித்தனை அநிருத்தர் சூழ்ச்சியால் சமாதானப்படுத்தி, அவனை நாடு திரும்பச் செய்கிறார். போர் நடக்கின்றது. நந்திவர்மன் தனிப்படையுடன் சென்று தானுரவியின் உபாயத்தினால் பாண்டியனைமட்டும் சிறைப்படுத்தி விடுகின்றான். அவனை மீட்க வந்த சேனாதிபதி மாறன்எயினனும் சிறைப்படுகின்றான்.

பாண்டியன் ராஜஸிம்மனும் சேனாதிபதி மாறன் எயினனும் பல்லவ வீரர்களால் சூழ்ந்து கொள்ளப்பட்டு நின்றார்கள்.

மூர்ச்சையுற்ற கங்கராஜ குமாரியைத் தாங்கிக்கொண்டு பேடி சித்ரமுகியும், கங்காதேவியும் கண் கலங்கி நின்றார்கள்.

மல்லரங்கம் 'புடை' கொண்டதென ஆரவாரம் மிக்கது.

செங்கதிர்க் கடவுள் மேல் வானத்தில் பாய்ந்து சென்றான்.

அப்போது மல்லரங்கமே நிலை கலங்கும்படியாகப் பெருஞ் சத்தம் அருகில் கேட்டது. யாவரும் ஒரு திசை நோக்கினார்கள்.

நூற்றுவர் குதிரை வீரர்கள் பேராரவாரத்துடன் மல்லரங்கில் கடுகி வந்து, புரவிகளிலிருந்து நிலமதிரும்படியாகக் குதித்தார்கள்.

பல்லவ மல்லன் முதலிய அனைவரும் திடுக்கிட்டார்கள். நூற்றுவரும் பல்லவ மகிபனை அணுகி வணங்கினார்கள்.

'பிரபு தேவ,...'' என்று அவர்கள் பேசத் தொடங்கினார்கள்.

"ஓ!...ஒற்றர்களா?...செய்தியை விரைவில் சொல்லுங்கள்,...தானுரவி,..."என்று கூறியவனாய் ஒற்றர் தலைவன் தானுரவியைப் பார்த்தான் நந்திவர்மன். தானுரவி உடனே அங்கு வந்து நின்ற ஒற்றர்களை அணுகி வினவினான்.

'பிரபுதேவ, நம் நகரைச் சூழ்ந்துகொண்டார்கள் பாண்டிய வீரர்கள்; பெரும் படை வந்துகொண்டிருக்கிறது. வடமேற்குப் புறத்திலும் எதிர்பாராத வகையில் ராஷ்டிர கூடப் படைகள் வந்து குவிகின்றன. நம் நகருக்குள் புகுந்த ராஷ்டிர கூட ஒற்றர் இருவரைச் சிறை செய்து பிடித்து வந்துள்ளோம்; அவர்கள் தங்களிடம் கொடுப்பதற்காக திருமுகம் ஒன்று கொண்டுவந்துள்ளார்கள். இனி தாமதம் செய்வது பெருங் கேடுகளுக்கு...'' என்று கூறினான் ஒற்றர்களில் பிரதானமானவன்.

அவன் மேலே பேசுவதற்குள்ளாகப் பல்லவமல்லன் திடுக்கிட்டவனாய்க் கேட்டான்.

"ஹா!...பாண்டியனின் படைகள் மீண்டும் சூழ்ந்துவிட்டனவா?...—அவர்களுடன் ராஷ்டிர கூடர்களும் சேர்ந்துகொண்டு விட்டார்களா!......அநிருத்தரே,...... செய்தி உமது செவிகளில் எட்டி-

64

## 'திருமுகம்'

னவா?"—இவ்விதம் கேட்டுவிட்டு மீண்டும் கேட்டான் வியப்புடன்:

"அடே, ராஷ்டிரகூட ஒற்றர்கள் எங்கே? என் முன் அவர்களைக் கொண்டுவருக..."

உடனே பல்லவ ஒற்றர்கள், சிறைப்படுத்தப்பட்ட ராஷ்டிர கூட ஒற்றர்களைப் பிடித்த வண்ணம் அரசனுக்கு முன் கொணர்ந்து நிறுத்தினார்கள்.

நந்திவர்மனும், மற்றவர்களும் பதற்றத்துடன் அவ்விருவரையும் நோக்கினார்கள்.

"வேந்தரே, நாங்கள் ராஷ்டிர கூட சக்கரவர்த்தி வைர மேகப் பிரபுவால் அனுப்பப்பெற்ற ஒற்றர்கள்; தங்களைச் சந்தித்து இந்தத் திருமுகத்தைச் சமர்ப்பிக்குமாறு எங்கள் வேந்தர் கட்டளையிட்டபடி வந்தோம்; இவர்கள் எங்களைச் சிறைப்படித்துக் கொணர்ந்ததால் வருத்தமில்லை எங்களுக்கு. எங்கள் வேந்தர் சேனா சமுக சமேதராக தங்கள் நகர் எல்லையில் பாடி தங்கியுள்ளார்......இதோ திருமுகம்...!'' என்று கூறி நந்திவர்மனிடம் திருமுகத்தைக் கொடுத்து நின்றார்கள் ராஷ்டிர கூடத்து ஒற்றர்கள்.

நந்திவர்மன் அந்தத் திருமுகத்தை வாங்கிப் பதற்றத்துடன் படித்தான்: உடனே இருதயத் துடிப்புடன் அந்தத் திருமுகத்தை அநிருத்தரின் கையில் கொடுத்தான். அவர் வாசித்தார்:—

"பல்லவ ராஜேந்திரனுக்கு, ராஷ்டிர கூட வைரமேகன் வரைந்தனுப்பிய திருமுகம் காண்க! முன்னம் நாம் ஸ்ரீ காஞ்சி நகரிலே சந்தித்த காலையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் மறக்கமுடியாதவை. எனினும், உன்மீது கடுங்கோபங் கொண்டு பெரும்படையுடன் இங்கு வந்துவிட்டேன். முடிந்த முடிவாக என் புதல்வி ராஜகுமாரி ரேவாதேவியின் இஷ்டசித்திக்கு நான் மனம் ஒப்பியே உன்மீது கருணை காட்டுகிறேன். ராஜகுமாரி ரேவாதேவி உன்னை விரும்பி நிற்கிறாள் என்பதை உணர்வாய். உன் கண்ணோட்டத்தை உடனே மாற்றிக்கொள்வதுடன், பல்லவ ராஜ்யத்தின் பட்டத்தரசி ராஷ்டிரகூட ராஜகுமாரி ரேவாதேவி என்பதையும் உடனே உன் பிரஜைகளுக்குப் பிரகடனம் செய்து என்னைச் சந்திக்க வருக! இல்லையானால் என் சபதத்தை நிறைவேற்றுவேன். இப்போது உன்னைச் சூழ்ந்து நசுக்க முற்பட்டிருக்கும் பாண்டியப்படைகளுக்கும் விரைவில் வெற்றிகிட்டுமாறு செய்வது என் கடமையாகிவிடும்; உன்னால் சமாதானம் செய்தனுப்பப்பெற்ற விக்கிரமாதித்தனை என் அடிமையாக்கிக்கொண்டேன் என்பதையும் நீ உணர்ந்து தெளிந்து முன் வருக. உன் வரவை எதிர்நோக்கிக்கொண்டிருக்கும் ராஜகுமாரி ரேவாதேவியின் லட்சியம் சித்தி பெறுமாக!..."

அநிருத்தர் அத்திருமுகம் படித்தவுடன் வியப்பால் பேச்சுமூச்சற்றுச் சிறிதே யோசனைசெய்தார்.

"நந்திவர்மா, இனி யோசனை என்ன?—விரைவில் பாண்டியனை அனுப்பக் கட்டளையிடு; நாம் புறப்படவேண்டும்......" என்றார் அநிருத்தர்.

"தானுரவி, பாண்டியனைக் காவலில் வைத்து கவனமாக இருக்க காவல் வீரர்களுக்குக் கட்டளையிடு..." என்றான் நந்திவர்மன்.

"பல்லவ மல்லா!...உன் திறமையை நீ இன்னும் உணரவில்லையா?...பாண்டிய வீரர்களை அற்பமாக மதிப்பிட்ட நீ...அடையப்போகும் இன்னல்களுக்குக் கணக்கிரா!...கவனமாக நடந்துகொள்." என்று பாண்டியன் ராஜஸிம்மன் எச்சரித்தான்.

மறுகணமே பாண்டியனும், மாறன் எயினனும் வீரர்கள் சூழத் தானுரவியால் சிறைக்கோட்டத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

"சித்ரமுகி,...புறப்பட்டுச் செல்...அதோ சிவிகை சித்தமாக இருக்கிறது."—என்று நந்திவர்மன் கட்டளையிட்டான்.

ராஜகுமாரி பூஸுந்தரியைத் தாங்கிய வண்ணம் சித்ரமுகியும் கங்காதேவியும் சிவிகையை அடைந்து அதில் அமர்ந்து மன்னவனின் அந்தப்புர மாளிகை நோக்கிச் சென்றார்கள்.

மல்லரங்கிலிருந்து நந்திவர்மனும் புறப்பட்டவாறே சொன்னான்;



"உதயசந்திரா, இனி நடக்க இருக்கும் போராட்டத்தைத் தகர்த்தெறியவேண்டும்: கங்கராஜ குமாரர்களையும் சித்திரமாயனையும் கொன்றாலன்றி அமைதி இராது.

"நந்திவர்மா, வீண் யோசனை—வா போவோம்." என்றார் அநிருத்தர்.

உடனே அனைவரும் அநிருத்தரைப் பின் தொடர்ந்தார்கள்.

அநிருத்தர், நந்திவர்மன் முதலிய அனைவருடனும் மந்திராலோசனை மண்டபம் நோக்கிச் சென்றார்.

மல்லரங்கிலிருந்த யாவரும் மனக் கலக்கத்துடன் வெளியேறினார்கள்.

* * * *

மந்திராலோசனை மண்டபத்தில் அநிருத்தருடன் நந்திவர்மன் யோசனை செய்தான். பல்லவ ஒற்றர்களும் ராஷ்டிரகூட ஒற்றர் இருவரும் முத்தரையனுக்குப் பின் நின்றுகொண்டிருந்தார்கள், சிவமாறப்பிரபு, ஹிரண்யவர்மர், அநிருத்தர், உதயசந்திரன், சோழ சேனாதிபதிகள் எண்மர்-யாவரும் நந்திவர்மனுக்குமுன் அமர்ந்திருந்தார்கள்.

'யோசனையின் முடிவு' என்னவாகுமோ என்று யோசித்து ஆதுரத்துடன் நின்றார்கள் ராஷ்டிர கூட ஒற்றர்கள்.

யாவருடைய யோசனைகளையும் ஏற்றுக்கொள்ளாமல் அநிருத்தர் தம் யோசனையை வற்புறுத்திக் கூறினார்:

"நந்திவர்மா உன் லக்ஷ்யம் வீணாகாமல் இருக்க வேண்டுமானால், வைரமேகனின் வேண்டுகோளை ஏற்றுக்கொ[illegible] நிச்சயம் பாண்டியனை வென்றுவிடலாம். பாண்டியப் படைகளை அழித்துவிடலாம்: இப்போதுள்ள நிலையில் [illegible]...ராஷ்டிரகூடனுடன் போராடு[illegible]து முடியாத காரியம்; நாம் இனி [illegible]ரும்புவது சமாதானம்...உன்னை விரும்பிய...ராஜகுமாரி ரேவாதேவியே உன் பட்டத்தரசி! எல்லா வகையிலும் உன் பெருமைக்கு ஈடானவள்..." என்றார் அநிருத்தர்.

அதைக்கேட்ட உதய சந்திரன் பூரிப்படைந்தான்.

'கவிஞரின் யோசனையே சிறந்ததாகும்' என்றான்.

"என்ன?...ராஷ்டிரகூட ராஜகுமாரியை மணப்பதென்றா?'' என்று மனப்புழுக்கத்துடன் கேட்டார் சிவமாறப்பிரபு.

"நந்திவர்மன் ராஜகுமாரி ரேவாவை மணப்பதே தகுந்த காரியமாகும்'' என்றார் ஹிரண்ய வர்மர்.

"யோசனையை நானும் மனமொப்புகின்றேன்'' என்றான் முத்தரையன்.

சிவமாறனின் மனம் மட்டும் தீப்பட்ட புண்போலத் துடித்தது.

"நந்திவர்மா, எனக்குக் கொடுத்த வாக்குறுதியை மறந்தாயா?'' என்றார் சிவமாறப்பிரபு.

'சிவமாறப்பிரபு, கவலைப்பட வேண்டாம். உமக்குக் கொடுத்த வாக்குறுதிப்படி, பாண்டியனைச் சிறைப்பிடித்தாயிற்று. பாண்டியப் படைகளையும் இனி அழித்துவிட்டு உமக்குக் கங்க நாட்டைத் திரும்பக்கொடுக்கின்றேன். என்னைப் பலவகையிலும் வெறுத்த கங்க கன்னிகையை இனி நான் விரும்புவதா? அதுமுடியாத காரியம்; ஆனால் உம்முடைய விருப்பம்போல் அவளைப் பாண்டியன் அடையாதவாறு பாதுகாப்பது என் கடமை! இதற்கு நீர் அஞ்ச வேண்டாம்!...'' என்றான் நந்திவர்மன்.

"நந்திவர்மா,......பாண்டியனை வஞ்சம் தீர்ப்பதென்றால், அவனை என் நாட்டில் சிறைவைக்க வேண்டும்: அவ்விதம் செய்வது உன் கடமை; அது ஒன்றே போதுமானது......கங்க கன்னிகையின் தலைவிதி!...எப்படியோ' என்றார் சிவமாறப்பிரபு.

உடனே அநிருத்தர் ராஷ்டிர கூடத்து ஒற்றர்களைக் கூப்பிட்டார்.

ஒற்றர்கள் தலைவணங்கி நின்றார்கள்.

"ஒற்றர்களே, உங்கள் அரசனைக் காண நாங்கள் வருகின்றோம்; நீங்கள் முன்னதாகச் சென்று தெரிவியுங்கள்..." என்று கூறினார் அநிருத்தர்.

உவகைப் பெருக்குடன் அவர்கள் தலைவணங்கியவர்களாய், "பிரபு! ஆக்ஞை!' என்று கூறி ஓடினார்கள்.

"உதயசந்திரா, நீ விரைவில் நம் படைகளைப் பாண்டியப்படைகளுக்கு முன் தாக்குவதற்கு ஏற்பாடு செய்! எந்த வகையிலும் பாண்டியப்படைகளை முறியடிப்பதற்கான வழிகளைத்தேட வேண்டும்; ராஷ்டிரகூட வேந்தனின் நட்பு கிடைத்தபின் பாண்டியப் படைகள் பறந்தோடிவிடும்!...... விரைவில் முன்னதாகச் செல். நாங்கள்...ராஷ்டிரகூட வைரமேகனைச் சந்தித்து அவனுடன் வருகின்றோம்...'என்று அநிருத்தர் கட்டளையிட்டார்.

"கட்டளை!...இப்போதே நான் சென்று பாண்டியப்படைகளைத் தாக்குகின்றேன்..." என்று புறப்பட்டான்.

'சோழ சேனாபதிகளும் உடன் செல்லட்டும்'' என்றான் நந்திவர்மன்.

உதயசந்திரனைப் பின்தொடர்ந்து சோழ சேனாபதிகளும் கடுகிச் சென்றார்கள்.

"முத்தரையா, நீ நம் நகரில் இப்போதே போர்ப்பறை முழக்கச்செய்து, 'ராஷ்டிரகூடத்து வைரமேகன் புதல்வி ராஜகுமாரி ரேவாதேவி, பல்லவ சக்கரவர்த்தியின் பட்டத்தரசியானாள்' என்று பிரகடனம் செய்யவேண்டும்; நம் நகரத்து ஜனங்கள் யாவரும் நன்கு உணரும்படியாகச் செய்தி பரப்பி, நீயும் போர்க்களம் செல்,...' என்று முத்தரையனுக்கும் கட்டளையிட்டார் அநிருத்தர்.

"இதோ, புறப்பட்டேன்; வெற்றி வாழ்க!" என்று கூறி வணங்கி மறைந்தான்.

"நந்திவர்மா, இனி புறப்படலாம்,...சிவமாறப்பிரபு, ஹிரண்யவர்மரே!...நீங்களும் புறப்படுங்கள்!..." என்று கூறி எழுந்தார் அநிருத்தர்.

'எதிர்பாராத இந்த மாறுதலை...நான் என்னென்பேன்?'' என்று கூறிக்கொண்டே எழுந்தான் நந்திவர்மன்.

அனைவரும் தேர்க்கொட்டிலை அடைந்தார்கள். அநிருத்தரும், நந்திவர்மனும் ஒரு தேரிலும், ஹிரண்யவர்மரும், சிவமாறப்பிரபுவும் மற்றொரு தேரிலும் ஏறி அமர்ந்து கொண்டார்கள்.

இரு தேர்களும் காஞ்சி நகரின் வடமேற்கு எல்லைப்புறம் நோக்கிக் கடுகின.

(தொடரும்)




## விஸ்ப்போட ஜ்வரம்

★

வைத்திய ரத்ன பண்டித
எம். துரைசாமி ஐயங்கார்

விஸ்ப்போட ஜ்வரம் என்பது பலமான ஸாங்கிராமிக வியாதியாகும். அதாவது ஒருவரிடமிருந்து மற்றவரிடம் எளிதில் ஒட்டிப் பரவக்கூடிய தொற்று வியாதி. முற்காலத்தில் இந்நாட்டில் இவ்வியாதியால் ஜனங்கள் அதிகமாகப் பீடிக்கப்பட்டதில்லை. வெளி நாடுகளிலிருந்து இது இத்தேசத்தில் பல முகாந்தரங்களால் அதிகமாகப் பரவத் தொடங்கிற்றென்று தெரிய வருகிறது. நமது ஆயுர்வேத நூல்களில் காணப்படும் ஆதாரங்களைக்கொண்டு இச் சாங்கிராமிகரோகம் இந்நாட்டிலும் சிற்சில விடங்களில் பரவி, பிரஜைகளுக்கு இன்னல் செய்து வந்ததாகத் தெரிகிறது. மற்ற அம்மைகளைப்போலவே, இது ஒருவனுக்கு ஒருமுறை தோன்றினால், மீண்டும் இது ஆயுள்காலத்தில் அவனுக்கு உண்டாவதரிது.

### காரணம்

ஒருவகைப் பூச்சிக்கடியினால் இந்நோய் உண்டாவதாகச் சிலர் கருதி வந்தார்கள். அதில் பாதி உண்மையுண்டு. ஒருவித நுண்ணிய விஷப்பூச்சி இரத்தத்தில் கலப்பது இவ்வியாதிக்குக் காரணமாவதாக ஆராய்ச்சிகளால் கூறப்படுகிறது. பசு முதலிய மிருகங்களுக்கு இது ஏற்பட்டால், அந்நோயை ஒருவித கோமாரி அல்லது கால் நடை நோய் என்று வழங்குவர். அப்பசுவின் பாலைக் குடிப்பவருக்கு இந்நோய் தோன்றும். இவ்வியாதி கண்ட வீடுகளிலிருந்து வண்ணான் எடுத்துப்போகும் துணிகள் மூலமாகவும், வேறு பொருட்கள் மூலமாகவும் இவ்வியாதிக் கிருமிகள் வேறிடங்களுக்குப் பரவுகின்றனவாம். நுண்ணிய இவ்விஷப் பூச்சிகள் வியாதியாயிருந்த ஒருவனுடைய வீட்டில் சுவர்களிலும், பாய் படுக்கைகளிலும், ஆஸனங்களிலும் பல மாதங்களாகவும் தங்கியிருந்து, அவற்றில் ஸம்பந்தப்படுகிற மனிதர்களிடம் பற்றிக்கொண்டு, இந்நோயை அவர்களுக்கும் உண்டு பண்ணும்.

### பரவும் வகை

இவ்விஷம் ஒருவனுடைய உடலில் பற்றிய பிறகு ஸாதாரணமாய் ஒரு வாரத்திலிருந்து பத்து நாட்களுக்குள்ளாக வியாதிக் குறிகளை வெளிப்படையாகக் காட்டுவது வழக்கம். சிலருக்கு ஏழெட்டு யாமங்களுக்குள்ளேயே (அதாவது 24-மணி நேரத்திலும்) அக்குறிகள் தோன்றும்; வேறு சிலருக்கு இரண்டு வாரங்களுக்குப் பிறகு வியாதிக் குறிகள் வெளிப்படுவதுண்டு. இவ்வியாதி ஒரு பிணியாளியிடமிருந்து பிறருக்குத் தாவிப் பரவக்கூடிய கால அளவும் அவ்விதமே பலவாறு மாறுபடும். இவ்வியாதியால் வருந்திய ஒருவன் வெளிப்படையாக குணமடைந்த பிறகு, சுமார் பத்து வாரங்கள் வரையில் பிறருடன் சேராமலிருப்பது நலம். அதுவரையில் துணிமணி முதலிய அவனுபயோகிக்கும் எல்லா வஸ்துக்களையும் தனியே வைத்துக்கொள்ள வேண்டும்; ஏனெனில் அவ்வளவு நாட்களாகவும் அவனுடலிலிருந்தும், அவனுபயோகிக்கும் பொருட்களிலிருந்தும் இவ்வியாதி ஸம்பந்தமான விஷம் பரவுவதற்கு அவகாசமுண்டு.

### குறிகள்

விஸ்ப்போட ஜ்வரத்தின் ஸாமானியக் குறிகள் பின் வருமாறு:— சுமார் ஐந்தாறு யாமகாலம் (10 அல்லது 12 மணி நேரம்) சிறிது தலைவலியோடு குளிரும் நடுக்கமும் தோன்றும். அதன் பிறகு உடற் சூடு அதிகரித்து ஜ்வரமும், தொண்டை வலியும் காணும். தொண்டை சிவந்து வீக்கங்கொண்டிருக்கும். கைகால்களில் நடுக்கமும், வலியும் ஏற்படும். குமட்டலும் வாந்தியும் உண்டாகும், சிலருக்கு பேதியுமாகும். சிறுநீர் மிக்க மஞ்சளாக அல்லது சிவப்பாகச் சொற்பமாய் இறங்கும். ரோமாந்திகா என்னும் பயறம்மையில் இருமல் இருப்பதுபோல் இவ்வியாதியில் தொண்டை வீக்கம் மிகவும் முக்கியமான குறியாகும். இச்சென்னிறமும் வீக்கமும் வாயின் மேற்புறத்திலும், தொண்டையினுள்ளும் ஸமமாகப் பரவியிருக்கும். இதைக்கொண்டு களசுண்டி (ஆங்கிலத்தில் டான்ஸில் வீக்கம்) என்னும் தொண்டை வியாதியிலிருந்து இது வித்தியாஸப்படுவதாய் அறிந்துகொள்ளலாம்.

இவ்வியாதி இளங்குழந்தைகளுக்குக் கண்டால் ஆக்ஷேபகம் என்கிற வலிப்பு கண்டு குழந்தையின் நிலைமை கவலைக்கிடமானதாயிருப்பதாகச் சிலருக்குத் தோற்றும். இதில் ஜ்வரம் அதிக கடுமையாயிருக்கும். நாடி நடை மிகவும் படபடத்திருப்பதை எவரும் பரிசித்துணரலாம். மறுநாள் விஸ்ப்போடங்கள் என்கிற கொப்புளங்கள் முகத்தில் தென்படும். அவை கிரமமாகக் கழுத்திலும், பிறகு மார்பிலும், பிறகு கால்கள் கைகளிலும் தோன்றும். ஆனால் வைசூரி என்கிற பெரியம்மையில் காணப் படுவதுபோல் விஸ்ப்போடங்கள் என்கிற அம்மைக் கொப்புளங்கள் தோன்றியதும் ஜ்வரவேகம் இதில் தணிவதில்லை. இதைக்கொண்டு மற்ற



அம்மைகளைப் போன்றது அல்ல இவ்வியாதி என்றறியலாம்.

### மற்ற அம்மைகளினும் வித்தியாசம்

முதலில் சென்னிறமான வேர்க்குரு போன்ற சிற்றம்மைகள் அநேகம் கிளம்பும். பிறகு, இவை ஒன்றோடொன்று அடர்ந்து சேர்ந்துவிடும்; அல்லது வேறு அம்மைகள் தோன்றும். சரீரத்தின் மேல் சர்மத்தின் மேற் பரப்பு முடியவும் அடர்ந்து பரவும் வரையில் இவ்[illegible]மென்மேலும் இவ் வேர்க் குருக்கள் கிளம்பிக்கொண்டிருக்கும். வேறு அம்மை நோய்களில் அம்மைப் பருக்களுக்கு இடையிடையே சர்மம் இயற்கை நிலையில் காணப்படும்; ஆனால் இந்த விஸ்ப்போடத்தில் அவ்விதம் இருப்பதில்லை. சர்மத்தில் தாங்கவியலாத அரிப்பு ஏற்படும். கண்களின் வெண்மடல் இந்நிலைமையில் சென்னிறமாகும். நாக்கு ஒரு தடித்துப்போய் பல் சிவந்த மண்டலங்களைப் பெற்றிருக்கும். தொண்டையிலும், கழுத்திலும் சில கிரந்திகள் வீக்கங்கொண்டு, உணவு விழுங்குவதற்குக் கஷ்டமும் ஏற்படும்.

### தணியும் நிலைமை

முற்கூறிய கொப்புளங்கள் அல்லது தடிப்புகள் நாலைந்து நாட்கள் விருத்தியாய், பிறகு ஆறுவது அல்லது ஏழாவது நாள் முதல் குறைய ஆரம்பிக்கும். எட்டாவது அல்லது ஒன்பதாவது நாள் அநேகமாய் மறைந்துவிடும். அம்மைப்பருக்கள் ஏற்பட்ட இடங்களிலிருந்து மெல்லிய செதிள்கள் உதிர்ந்து, அவ்விடங்களில் வெண்கருவலான அடையாளங்கள் சில நாட்கள் இருந்துவரும். உள்ளங்கைகளிலும், உள்ளங்கால்களிலும் இச்செதிள்கள் அதிக அளவாக உதிர்வது வழக்கம். இவை ஸாதாரண நிலைமையைக் குறிக்கும். கடுமையான விஸ்ப்போடங்களில் ஜ்வரம் கடைசிவரையில் தொடரும் இரவில் ஸந்நிபாதக் குறிகளான வாய்ப்பிதற்றல், உடல்வலிப்பு முதலியனவும் தோன்றும்.

உபத்திரவந் தரக்கூடிய நிலைமை யேற்பட்டால் கழுத்து சிலருக்கு இசிவு எடுத்து அசைக்க முடியாமற்போகும். அதிஸாரம் (பேதி) ஏற்படும். பிதற்றலும் பேத்தலும் அதிகமாகும். கண் டஞ்சனையும் நீர்க்கோவை போன்று வீக்கம் ஏற்படும். இக்குறிகளுடன் கூடிய பிணியாளியின் நிலைமை அபாயகரமானதென்றறியலாம்.

### சிகித்ஸை

இது வெகு எளிதிலும் துரிதமாகவும் பரவக்கூடிய ஒட்டுவாரொட்டி வியாதியாகையால், இப் பிணியாளியை மற்ற ஜனங்கள் நடமாடாத பிரத்யேகமான அறையில் சுத்தமான படுக்கையில் அமர்ந்திருக்கச் செய்யவேண்டும். வேறு வகை அம்மைகளில் மார்ச்சளியும் இருமலும் தொடருமாகையால், அவ்வித அம்மை நோய்களில் குளிர்ந்த காற்று மேலே வீசுவதும், சீதோபசாரமும் தகாதவை. இவ்விஸ்ப்போட ஜ்வரத்தில் குளிர்ந்த காற்றும், சீதோபசாரமும் அதிக நன்மை செய்யும். உஷ்ணம் அதிகமாயிருக்கும்போது ஷடங்கக்வாதம் (சீந்தில், தனியா, கோரைக்கிழங்கு, செஞ்சந்தனம் வெட்டிவேர், பில்வ வேர் இவற்றால் ஆன) கஷாயத்தை தினத்திற்கு நாலைந்து முறை சிறிது பனங்கற்கண்டு கலந்து கொடுத்து வருவது மிகவும் திருப்திகரமான பலனளிக்கும். அதிஸாரம் ஏற்பட்டிருந்தால், தாடி மாஷ்டக சூர்ணமாவது, கனஸாரவடி என்கிற மாத்திரையாவது தகுந்த அளவுகளில் கொடுக்க, இரண்டொரு நாட்களில் வயிற்றுப் போக்கும் தணிந்துவிடும்.

தொண்டை நோவையும், நாக்கின் தடிப்பையும் தணிப்பதற்கு யவக்ஷாரம் என்கிற உப்பும், ஸிதோபலாதி சூர்ணமும் வெகு உபயோகமானவை. யவக்ஷாரத்தைக் கொதி நீரில் கலக்கி, அந்த நீரைக்கொண்டு தொண்டையையும் நாக்கையும் நன்றாகக் கழுவி சுத்தம் செய்ய வேண்டும். பிறகு ஸிதோபலாதி சூர்ணத்தை நல்ல தேனில் குழைத்து நாக்கிலும் தொண்டையிலும் தடவ வேண்டும். தொண்டைக்கு வெந்நீரில் நனைத்த துணியினால் ஒத்தடமும் கொடுப்பது நலம்.

பிணியாளி இருக்கும் அறையில் அநாவசியகமான துணிகளையும் வேறு வஸ்துக்களையும் சேர்த்து வைக்கக்கூடாது. பிணியாளியின் உடைகளை தினந்தோறும் களைந்தெடுத்து, அவற்றைச் சவர்க்காரம் போட்டுத் தோய்த்து, கொதிநீரில் அமிழ்த்தி அலசிப் பிழிந்து வெயிலில் உலர்த்தியெடுத்து உபயோகிக்க வேண்டும். இங்க ரோகியிருக்கும் அறையையும் சாம்பிராணி, மட்டிப்பால் முதலியவற்றை ஒரு செட்டியில் போட்டு எரித்து அப்புகையினால் தூபமிட்டுச் சுத்தம் செய்வதும் நலம்.

### போஷணை

விஸ்ப்போட ஜ்வரத்திலிருந்து விடுபட்டு குணமடைந்து பலஹீனமாயுள்ள நோயாளிக்குச் சில வாரங்கள் வரையில் நல்ல போஷணை அளிக்கவல்ல ஆஹாரங்களை வேளையறிந்து கொடுத்து வர வேண்டும். அத்துடன் அயஸ்காந்தஸிந்தூரம், அச்வகந்த் ரஸாயனம் போன்ற இரத்த சுத்தியையும் தேஹவலிமையையும் அதிகரிக்கச்செய்யும் சிறந்த ஔஷதங்களையும் உபயோகித்து வருவதால், விஸ்ப்போடஜ்வரம் ஏற்பட்டதால் உடலுக்கு உண்டான பலக்குறைவும் ஆயாஸமும் சீக்கிரத்தில் நிவ்ருத்தியாய் நோயாளியென்னும் நிலைமையிலிருந்து அவன் மாறுபட்டு மிகச் சுகமடைவான்.

---



(மதுரை: 42, தெற்காவணி) (கோவை: 234, ராஜா தெரு)




குழந்தைகள் சம்பந்தமான நோய்களைத் தீர்ப்பதுபற்றி யோசிப்பதற்காக நியூயார்க்கில் நடந்த சர்வதேச டாக்டர்களின் மகாநாட்டில் கலந்துகொண்ட இந்திய டாக்டர்கள். (இடதுபக்கமிருப்பவர்) கர்னல் ஸென்; (வலது பக்கமிருப்பவர்) டாக்டர் வி. எல். ராய்.


டெலிபோன 2246 தந்தி : கிளாவர் பீடி

(USE ALWAYS)
500 1st. Quality Spade Clover Beedies. 500
SPADE CLOVER JADI BEEDI FACTORY MANADY MADRAS.
SPADE CLOVER BEEDI
ஸ்பேட் கிளாவர் ஜாடி பீடி பாக்டரி மண்ணடி மதராஸ்.
M. MOHAMED OOMER. 37, MANADY ST. MADRAS.

லேட் கான்சாகிப் M. முஹமது உமர்சாகிபுவின் குமாரரான முஹமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும் உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

**ஸ்பேட் கிளாவர் பீடிகள்**

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனார் காலத்திலிருந்ததைப் போன்றே சிறப்பாக விளங்குகின்றது.

முகம்மது நூருல்லா
ஸோல் புரொப்ரைட்டர்
ஸ்பேட் கிளாவர் & ஆர்டின் பீடிகள்
37, மண்ணடி, மதராஸ்.



# ராஜ பிரபர்தன்

★

மாத விடாய்க் கோளாறு 4, 5 மாதமாக விருந்தாலும் எக்காரணத்தினால் இருந்தாலும் உடனே நிவாரணம் பெறலாம்.

ராஜ பிரபர்தன் ஹானியற்ற ஔஷதம் ரூ. 2-8-0 தபாற் செலவு அணா 12 கர்ப்பத் தடைக்கு கர்ப்பத்படி விலை ரூ. 2-0-0 தபாற் செலவு அணா 12. சகலவிதமான ஸ்திரீ ரோகங்களுக்கும் ஸேத் பிரதாந்தர் ரூ. 3-8-0 தபாற் செலவு அணா 12.

**Calcutta Ayurved Pharmacy,**
[S] 163/1 Cornwallis St.,
CALCUTTA 6.



ஸ்ரீ அம்பாள் சேமியா உபயோகியுங்கள்
138, கொத்தவால் சாவடி. மதராஸ்.





# பட்டுப் புடவைகள்.

கொள்ளேகால், பெங்களூர், பெங்கால், பெனாரஸ் சேலைகள் எல்லா ஊர் பட்டு, தினுசுகளும் இங்கு இதர கடைகளைக் காட்டிலும், ரூ. 10 முதல் ரூ. 25 வரை குறைவாக இருக்கும். நேரில் விஜயம் செய்யுங்கள்.

**ஸ்ரீ சாரதாள் கிளாத் ஷாப்**
37, தேரடித் தெரு,
திருவல்லிக்கேணி, மதருஸ்.
T. V. S இராஜகோபால அய்யர், ஸோல் புரோப்ரைட்டர்.



## ஜாதகம் ! ஆருடம் !!

இன்[illegible]துங்கள். பிறந்த தேதி நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் [illegible]வர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண[illegible]விவரம்:-1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

குறிப்பு:—வெளிநாட்டுக்கு இரட்டிப்புக் கட்டணம்.

**Lt.-Col. M. N. C.** ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:-தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத் திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

மானேஜர்' வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,
தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)



## ரூ. 100 இனும்

ஆச்சரியகரமான சக்தி வாய்ந்த சித்த யந்திரம் (Govt. Regd.)

சக்தி வாய்ந்தது. "குப்த வசீகரண யந்திரத்தை" வைத்திருப்பதாலேயே கஷ்டமான காரியங்களிலும் வெற்றி பெற்றுவிடலாம். பலன் அளிக்கச் செய்வதில் எவ்வித கடின சாதனமும், தேவைகளும் அவசியமில்லை. இதனால் (ஆண், பெண்) நீர் விரும்பும் எவராகினும் உனக்கு அடங்கி வருவர். அசுப நட்சத்திரங்கள், விரோதி பகை இவைகள் நீங்கி, பரீட்சை, வர்த்தகம், வழக்கு, லாட்டரி, ரேஸ், உத்தியோகம், சந்தானம், ஐசுவரியம், கடன் நிவாரணம், பயங்கர வியாதிகள் இவைகளில் வெற்றி பெறுவதோடு, அதிருஷ்டசாலியாகவும் இருப்பீர்கள். பொய் என்று நிருபிப்பவர்களுக்கு ரூ. 100 இனும். செம்பு ரூ. 2-8-0. வெள்ளி ரூ. 3-0-0. சுத்த தங்கம் ரூ. 13-0-0.

## நரையை ஒழியுங்கள்.

சாயம் மூலம் இல்லை எமது ஆயுர்வேத வாசனைத் தைலம், நரை மயிரை நிரந்தரமாகக் கருப்பாகச் செய்து, மீண்டும் நரை ஏற்படாமல் பாதுகாக்கும். மூளை பலவீனம், மந்தம் முதலியவற்றைப் போக்கி, தலைவலியைக் குணப்படுத்தும், பார்வையை சீர்படுத்தும். நம்பிக்கையில்லையேல் தொகை வாபீஸ் என்ற உத்தரவாதம் பெறுங்கள். சொற்ப நரைக்கு ரூ. 2-8-0. அதற்கு மேற்பட்டது ரூ 3-8-0. எல்லா நரைக்கும் ரூ. 5.

Shree Kamrup Kamachhya Ashram,
No. 6. (P. O Katrisarai, Gaya)



தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57

# டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.
(பிராஞ்ச : மன்னார்குடி)

**சந்தனாதித் தைலம் — அரைக்கீரை விதைத் தைலம்**

**கோகுல் கூந்தல் தைலம்**

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்
பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு
முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

சோல் ஏஜெண்டுகள்:—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.




King Arrowroot

கிங் அரரூட்

குழந்தைகளுக்கும், வயோதிகர்களுக்கும் சிறந்த ஆகாரம் வைத்திய நிபுணர்களாலும், டாக்டர்களாலும் நன்மதிப்பு பெற்றது.

Sole Agents
EMPIRE TRADERS
4, BUNDER ST. MADRAS



## சூதகத்தை நிறுத்த

குமரி (Tablets) சூதகக் கோளாறுகளை எந்த நிலையிலும் நிறுத்தவல்லது. தீமை விளைவிக்காமல் கஷ்ட நிவர்த்தியளிக்கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் திருப்தியடைந்திருக்கின்றனர் விலை ரூ 3. நாள்பட்ட கோளாறுகளுக்கு விலை ரூ. 5. மிகக் கடுமையான கோளாறுகளுக்கு ரூ 8, கர்ப்பத் தடை மாத்திரைகள் (Tablets) 6 மாத உபயோகத்திற்கு விலை ரூ 4.



(வி. பி.க்கு 12 அணு அதிகப்படி.)

Mrs. P. DEVEE, F. D. S. (S. W)

Tollygunge :: CALCUTTA

ஸ்டாகிஸ்டுகள்: 1. ஹரி & ஸன், 93, சைனபஜார், மதராஸ். 2. ராகவன் & கோ. ஸ்ரீ நரஸிம்மராஜா ரோட், பெங்களூர் ஸிடி. 3. K. C. மாத்யூ & கோ, கொழுஞ்சேரி, திருவாங்கூர். 4. J. திராத் & கோ, மகாத்மாகாந்தி ரோட், கராச்சி. 5. L. M. முகர்ஜி & ஸன்ஸ லிட், 167, தரம்டோலா தெரு, கல்கத்தா. 6, சிவானந்த சித்தர் மெடிகல் ஹால் 92, ஸீ தெரு, கொழும்பு. 768, லோயர் தெரு, பாடுவலா (ஸிலோன)



வாரியர்

## பிருங்காமலகாதி தைலம்

குளிர்ச்சி மிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப் படிப்பினாலோ வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.
(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்

கே. எஸ். வாரியரின்

அஷ்டாங்க ஆயுர்வேதசாலா

தெப்பக்குளம், திருச்சி.
(ஸ்தாபிதம்; 1936)



## பீம-வீர்

"Bheema-Veer"



JAMADHAGNI OUSHADALAYA — MYLAPORE.

சாஸ்வதமான யௌவனத்தையும், வீரிய விருத்தியையும் உண்டாக்கி, புதிய இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், இல்லற இன்பத்தையும் தரும். 40-நாள் மருந்து ரூபாய் 3-12-0. வி.பி. செலவு வேறு.

ஜமதக்னி ஔஷதாலயா,
26, வடக்கு மாடவீதி
மயிலாப்பூர் :: சென்னை.



## கண்ணில் பூவிழுதல்

டிகான்ஸ் ஐக்யூர் (ரிஜிஸ்) ஒரு உத்தரவாதமான நிவாரணி. கண் வியாதிகள் எதற்கும் சிறந்தது. அபாயமற்றது. 1000-க் கணக்கான பேர் ஆபரேஷனில்லாமல் சொஸ்தமாயுள்ளனர். உலகப் பிரசித்தி பெற்றது. வெற்றிக்கு உத்தரவாதம். விவரம் இலவசம். விலை ரூ. 3. தபால் செலவு அணு 12.

## செவிடு

முழுச்செவிடு அல்லது அரைச் செவிடு, காதில் இரைச்சல், மற்றும் எக்காரணத்தினாலும் எவ்வித நோயானாலும் நாலே வாரத்தில் சொஸ்தப்படுத்துவதற்கு உத்தரவாதம். ஹானியற்றதும் உடனே பலனளிப்பதுமான மருந்து. பெயர்பெற்ற மூலிகை மருந்து. விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

## குஷ்டம், வெண்குஷ்டம்

தீராத நோயும் தீரும். உடம்பு முழுவதுமோ அல்லது பாகத்தில் மட்டுமோ இருந்தாலும் சரி, எமது பெயர்பெற்ற ஹானியற்ற மூலிகைகளினால் நாலே வாரத்தில் பூரண குணம் காண்பீர்கள். விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

KAMALA WORKS,
6, Panchpota, BENGAL.






குழந்தைகளின் சூல் குலைக்கட்டி கோளாறுகளுக்கு, வியாதியின் முதல் அறிகுறி தோன்றியதும்,

ஜம்மியின்

## லிவர்க்யூர்

கொடுங்கள்

எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும்.

ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ், தலைமை ஆபீஸ்: மைலாப்பூர், மதராஸ்.








இருமல் உங்களை பலஹீனப்படுத்தும்.. ரணமாகியுள்ள தொண்டையில் கிருமிகள் புகுந்து புளூரிஸி நியுமோனியா வியாதிகளுக்கு காரணமாகும். பெப்ஸ் கிருமிநாச சுவாச மாத்திரை சாப்பிடுங்கள்.

வாயில் கரைந்தவுடன் பெப்ஸிலிருந்து அபூர்வ சத்து வெளிப்பட்டு சுவாசத்துடன் உட்சென்று இருமலை நிறுத்தி அடைப்பை நீக்கி, ரணத்திற்கு சமனமூட்டி, கபத்தை உடைத்து கிருமிகளினின்றும் காப்பாற்றும்.

ஏஜண்டுகள் :—மெஸர்ஸ்: தாதா & கம்பெனி, பி. டி., மதருஸ்.

சாப்பிடவும்

## PEPS




கிருமிநாச
சுவாச மாத்திரைகள்
எப்போதும் கைவசம் வைத்திருங்கள்
எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்






தேசரி குடீரம் லிட், மதராஸ்

ஒரிஸ்ஸா, நைஜாம், ஆந்திரா ஜில்லாக்களுக்கும், தமிழ் நாட்டுக்கும் ஏஜண்டுகள் :—

ஸீதாராமா
ஜெனரல் ஸ்டோர்ஸ்,

பர்ஹாம்பூர்—செகந்திராபாத்
பெஜவாடா — மதுரை.



Quality always tells
hence BUY L.G
ASAFOETIDA




எல். ஜி
பெருங்காயமே உயர்ந்தது

"ஜெய் ஹிந்த்"

பாரத நாட்டு மக்களே !

இந்தியாவில் உற்பத்தியாகும் ஆடைகளை உபயோகிக்க இன்னும் ஏன் தயங்குகிறீர்கள்? இந்தியர்கள், நம் நாட்டுக் கைத்தறி ஆடைகளை வாங்கி, நம் மக்களை ஆதரிப்பதில் சிரத்தை காண்பியுங்கள்.



இந்தியப் பெண்மணிகளே !

கைத்தறி ஆடைகளில் சிறந்து விளங்கும் எங்கள்

# "போட்டோ மார்க்"

## சேலைகளை வாங்குங்கள்

தயாரிப்பவர்கள் :

## ஸ்ரீ சாரதா அண் கோ.,

நடேசர் சன்னதி, பழனி.

ஏஜண்டுகள் :

1. ஸ்ரீ முருகன் & கோ., மால் 2-வது தெரு, மதுரை.
2. பால முருகன் கம்பெனி, மால் 5, ஹனுமார் கோவில் தெரு, மதுரை.
3. R. M. H. S. மூர்த்தி கம்பெனி, லக்ஷிமிபுரம் குறுக்குத் தெரு, மதுரை.
4. ஸ்ரீ பால முருகன் & கோ., 166, தெற்கு மாசி வீதி, மதுரை.
5. M. S. T. சுப்பய்யர் & சன்ஸ், 115, சந்தை ரோடு, நாகல் நகர், திண்டுக்கல்.
6. கஸ்தூரிரங்கய்யர், நாகையர் & கோ., ஸௌராஷ்ட்ர தெரு, வத்தலகுண்டு.
7. N. S. குப்புசாமி, N. A. K. சுப்பய்யர், ஜவுளி வியாபாரம், தென் கரை, பெரிய குளம்
8. ஸ்ரீ சுப்ரமணியம் கம்பெனி, சேலம் & N. A. Dt.
9. M. R. சுப்பையா செட்டியார், ஜவுளி வியாபாரம், முத்துசாமி பிள்ளை வீதி, பொள்ளாச்சி
10. ராஜா & கோ., மதராஸ் & ஆந்திரா Dt.

(N. B.) 40, 60, 80 நெ. ஜவுளி தினுசுகளுக்கும் பிரிண்டெட் வாயல் சேலை தினுசுகளுக்கும்

## சரஸ்வதி வீவிங் கம்பெனி,

நாகல் நகர், திண்டுக்கல்

32, லக்ஷிமிபுரம் 3-வது தெரு, மதுரை.



வைத்திய ரத்ன

யு. ராமநாத சாஸ்திரியாரின்

## ஆனந்த பற்பொடி (Reg)



சரீரத்துக்கு வாசற்படியான வாய், பற்கள் இவைகளில் ஒளிந்து கொண்டிருக்கும் பயங்கரமான பற்பல விஷக் கிருமிகளை நாசம் செய்வதுடன், பற்களின் வேர்களைப் பலப்படுத்தி ஒழுங்காயும், அழகாயும் ரக்ஷிப்பதில் இது ஒன்றுதான் சிறந்தது.

இந்திய கவர்ன்மெண்டு ஏஜண்ட் ஜனரல், தென் ஆபிரிக்கா; இந்தியா கவுன்ஸில் மெம்பர்கள், இங்கிலாந்து; இம்பீரியல் கவுன்ஸில் மெம்பர்கள், டில்லி; எக்ஸிகியூடிவ் கவுன்ஸில் மெம்பர்கள், சென்னை; மதராஸ், பர்மா சீப் ஜட்ஜு உள்பட பத்து ஹைகோர்ட்டு ஜட்ஜுகள், சென்னை பிரதம மந்திரி உள்பட இதர மந்திரிகள், மஹாராஜாக்கள் இவர்களால் ஸர்டிபிகேட் செய்யப்பட்டு இருக்கிறது. இத்துடன் நாங்கள் ஜெயம்பெற்ற சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜுமெண்டில் பின்கண்டபடி எழுதப்பட்டிருக்கிறது ;— "மார்க்கெட்டில் விற்கப்படும் இந்தியன் பற்பொடிகளுக்குள் ஆனந்த பற்பொடி ஒன்றுதான் அதிகமாய் எங்கும் நன்றாய் பிரஸித்தி பெற்றது என்பதற்குக் கொஞ்சங்கூட சந்தேகமே இல்லை. எங்கும் கிடைக்கும்:





கேச குஸும்

மிகச் சிறந்த

## கேசடானிக்

அற்புத தயாரிப்பு

மண்டை ரணங்களை குணமாக்கி அரிப்பை நீக்கி மயிர் உதிர்வதை நிறுத்தி தேசத்தைப்பட்டுப்போல் மிருதுவாக்கும். கேசத்தின் இயற்கை யழகு குன்றாது.

4 அவு. அழகிய பெட்டிகளில் 1 மொத்த விலை டஜன் ரூ. 18. தனி புட்டி ரூ. 1-12-0

KATHOD TRADING COMPANY


...கலை எதிர்க்க விஞ்ஞானம் ...ய கீடநாசினிகள் விருத்தியாக்குகிறது.

...ாதுஜன ஆரோக்கிய பாதுகாப்பாளர்
என்கிற ஹோதாவில், கீட நாசினிகள்
...ட ஜாதிக்கோர் அரிய வரப்பிரசாத
வேயிருந்து வந்துள்ளன. இவற்றின்
...பிடித்தத்திற்கு முன்னே கீடங்கள்,
...ாய்ட், மலேரியா, வயிற்றுக் கடுப்பு
...ய பயங்கர நோய்களைப் பரப்பி,
... பெருத்த உயிர்ச்சேதம் விளைவித்
...ிஞ்ஞானம் இப்பொழுது ஈ கொசு,
... முதலிய அபாயகரமான நோய்ப்
...ளை யொழிக்கும் கீட நாசினிகள்
...ாக்கியுள்ளது. அவற்றில் மிகவும்
...ன D D T என்பது. நீர் தாவிகள்
... பௌடர்கள் நிரந்தரமாக உப
... கீடங்களைக் கொல்லும் முந்திய
...ிறு முற்றிலும் மாறுபட்ட
...றவேண்டும். உண்மையில் கீட
...சமென்பது முன்னெல்லாம்
...ாசினிகளை அடிக்கடி உபயோ
...கம்பியிருந்தது.

... நீர் தாவிகள் (Insect Sprays),
...போலல்லாது, DDTயில் நாச
...ப் பிரயோகித்த பின்னர்
...ாது நிலைத்திருக்கிறது.
...யுடன் உபயோகிக்குமுறை
...ஒரு 5% D D T எண்ணெய்
...வர்கள், கூரைகள், ஸ்கரீன்
...ங்கள்மீது தாவுவதுதான்.
...ம், எண்ணெ ஆவியாக எழு
...ர்மெல்லிய நாசகர படல
... மீந்து நிற்கவும்செய்கிறது.
...டலத்தை ஸ்பரிசித்த மாத்
...வகள் மெதுவாகச் சுவரணை
... மடிகின்றன. மற்ற கீட
...பாலன்றி DDT யின் விசேஷ
...வன்றால், ஒரு 5% D D T
...ாலூஷன் தாவப்பட்ட புறங்
...க்கணக்காக—ஏன், மாதககணக்
...—கீடங்களுக்கு நாசகரமாகவே
...கிறது. எனினும் D D T தாமதித்தே
...செய்கிறது. உடனடி சாக அடிக்கும்
... அதற்கு அவ்வளவாகக் கிடையா.
...தீவிரமான கீட நாசினி வேண்டும்
...து. பிரித்ரம் தாவிகள் (Sprays) மேலா
.... பிரித்ர... ...டுவது கெனியா
...வளரும் ஒரு செடியினின்றும் கிடைப்
.... D D Tயைப் போலல்லாமல், பிரித்ரம்
...ாவிகள் கீடங்களை உடனேயே அழிக்
...றன. அவற்றைக் கடந்து செல்லும்
... உடனேயே சுவரணையற்று,
...ழுந்து சாகின்றன. ஆனால் பிரித்ரம்
...வைகளுக்கு நிலைவை குணம் கிடை
... பிரித்ரத்தோடு கூட செயற்கை
...ப் பொருட்கள் கலந்து, உடனடி
...டிக்கும் ...நாசினிகள் இப்பொழுது
...க்கப்பட்டுள்ளன. இவைகள் யுத்தத்
...முக்கியமான பிரித்ரம் நீர் தாவிகளை
...த்தனையோ மேலானவை.
...ாக, பயனுக்கு புறங்கள்மீது DDT
... சடிதி சாக அடிக்க, பிரித்ரம் வாயு
...தாவுக. வீட்டில் கீடங்களை நிர்மூல
...செய்ய இவ்விரண்டையும் சேர்ந்தா
...உபயோகிப்பதே மேலென கீட
...ிபுணர்கள் கூறுகின்றனர்.


# இவ்விரண்டு கீடநாசினிகளையும் உபயோகித்து, கீடாபாயத்தைத் தவிருங்கள் !




ப்ளிட் ஸர்பேஸ் ஸ்ப்ரே (FLIT Surface Spray) நிச்சயமாகக் கிடைக்க, அணியாகச் செல்லும் போர்வீரர்களோடு கூடின பச்சை டப்பா கேளுங்கள்.

ப்ளிட் வாங்கும்போது மஞ்ச டப்பாமீது போர்வீரன் இருக்கிறானா வென கவனியுங்கள்.




சடிதி சாக அடிக்கும் வன்மைக்கு **பளிட்டை** நம்புங்கள்

நீடித்த பாதுகாப்புக்கு **ப்ளிட்** ஸர்பேஸ் ஸ்ப்ரே உபயோகியுங்கள்

CF-1TM


...and Published by S. Chakrapani Iyengar at the Swadesamitran Power Press. 3 & 4, Whites Road Mount Road, Madras. Editor: C. R. Srinivasan, B. A.

2514 mitran Ill. 10-8-47


# உடனடியான

ராவ் பகதூர்

**S. R. கிருஷ்ணமூர்த்தி,** B.E., M.I.E. (Ind).

சார்டர்ட் என்ஜினியர்,
எலக்ட்ரிஸிடி டிபார்ட்மெண்ட்.

ராயப்பேட்டை, மதராஸ்.
14 ஜூன் '47.

ஐயன்மீர்,

தாங்கள் சென்றவாரம் எனது பெண்ணிற்காக தயாரித்துக்கொடுத்த வைர நெக்லேஸின் மாதிரியையும், வேலைத் திறனையும் எல்லோரும் புகழ்ந்தனர் என்பதை யறிய நீங்கள் சந்தோஷப்படுவீர்கள்.

நெக்லேஸை 12 நாட்களுக்குள் தயாரித்து, வாக்களித்த நாளுக்கு ஒருநாள் முன்னதாகவே அது தேவையான வைபவத்திற்குச் சரியாகக் கொடுத்ததுபற்றி நான் குறிப்பாக உங்களுக்கு வந்தனமளிக்கின்றேன்.

தங்கள் அன்புள்ள,

(ஒப்பம்): **S. R. கிருஷ்ணமூர்த்தி.**

# சேவை

அவ்வளவு நம்பிக்கையான,

# ஸோஜ்மல்ஸ்

வைர வியாபாரிகள்.
313, எஸ்பிளனேட்,
மதராஸ்.